# ஈழமுரசு
அவுஸ்திரேலியா




முரசு : 25 முழக்கம் :302 15 January 2014 Vol : 25 Issue :302


கிட்டு ஒரு தனி மனித சரித்திரம் 17


தண்ணிக்கு தடையா?... 07


சூடுபிடிக்கும் ஜெனீவா களம் 05


வீணை விறகாச்சே 23






## வாசகர்கள் அனைவருக்கும் இனிய தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்.









# Bridgeview Medical Practice

அவுஸ்திரேலியாவின்
Royal Australian College of General Practitioners
(RACGP) அமைப்பின் 2013 ஆண்டுக்கான பிரசித்தமான மதிப்பளிப்பை
சிட்னி – துங்காபியில் அமைந்துள்ள
Bridgeview Medical Practice மருத்துவக்குழுவினர் பெற்றுள்ளனர்.

RACGP அமைப்பினர் நோயாளிகளுக்கான மருத்துவக் கவனிப்பு
மற்றும் நல்வாழ்வுக்காக செயற்படும் மருத்துவர்களை
கௌரவப்படுத்துவதற்காக இத்தகைய உயரிய மதிப்பை
ஆண்டுதோறும் வழங்கிவருகின்றனர். அதேவேளை இம்மதிப்பளிப்பானது
நோயாளர்களுக்கான சேவைகள் சுகாதார மேம்படுத்தல் ,
பணிகள் உயர்தரமான மருத்துவ வசதிகள் ,
மருத்துவர்களுக்கான கற்கைநெறிகளை வழங்குதல்
போன்ற விடயங்களில் எத்தகைய பங்களிப்பை
வழங்குகிறார்கள் என்பதையும் கவனத்திற்கொள்கின்றது.

சமூகத்திற்கு தேவையான அடிப்படையான மருத்துவசேவையை,
அர்ப்பணிப்புடன் தொடர்ச்சியாக வழங்கிவருகின்றது என்ற
அடிப்படையில் இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

பல தமிழ் மருத்துவர்களைக் கொண்ட பொதுமருத்துவ சேவையை வழங்கும்
Bridgeview Medical Practice
தமிழ்மக்களுக்கு பெரும்பயன்மிக்கதாகும்.

அவுஸ்திரேலிய சமுதாயத்திற்கு தமது சேவைகளை வழங்குவதன் மூலம்
இந்நாட்டின் பங்காளிகளாக தனித்துவமான சேவையை
வழங்கிக்கொண்டிருக்கும் பிறிட்ஜ்வீயு பொதுமருத்துவக்குழுவினரை
ஈழமுரசு வாசகர்கள் சார்பாக வாழ்த்துவதில் மனநிறைவடைகின்றோம்.

–ஈழமுரசு,அவுஸ்ரேலியா–






Contract Us
Address : 3/27-30 Portico Parade Toongabbie
NSW 2146.
Phone : 9631 6400



# ஈழமுரசு

அஞ்சல் தொடர்புகளுக்கு

**EELAMURASU AUSTRALIA**
**PO BOX 214, South Morang,**
**VIC 3752,**
**Australia.**

இணைய முகவரி

www.eelamurasu.com.au

ஆசிரியபீட தொடர்புகளுக்கு
emurasu@gmail.com

விளம்பரத் தொடர்புகளுக்கு
advertise@eelamurasu.com.au

0403 155 066 & 0431 885 199


## குறிப்பு

இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு, வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்பு செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.

COMMUNITY NEWSPAPER ASSOCIATION MEMBER OF VICTORIA

## அறிவித்தல்

வாசகர்கள் மற்றும் விளம்பரதாரர்கள் அனைவரும் ஈழமுரசிற்கான ஆக்கங்கள் மற்றும் விளம்பரங்கள் ஆகியவற்றை
**emurasu@gmail.com**
என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கும்படி அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

–நிர்வாகம்–

# ஆசிரியர் தலையங்கம்

முரசு–25 முழக்கம்–302

கசப்பான சில நிகழ்வுகளையும் நம்பிக்கை தரும் ஒளிக்கீற்றுக்களையும் தந்து சென்ற ஆண்டாக 2013 எம்மைக் கடந்து சென்றிருக்கின்றது. விடாமுயற்சியுடன் தொடர்ந்து போராட வேண்டிய தேவையையும் சில படிப்பினைகளையும் கடந்த ஆண்டு உணர்த்திச் சென்றிருக்கின்றது.

குறிப்பாக தமிழகத்தில் ஏற்பட்ட மாணவர் எழுச்சியும் அதன் தொடர்ச்சியான விளைவுகளும் ஈழ விடுதலைப் போராட்டத்தில் முக்கிய மைற்கற்கள். தமிழகச் சட்டமன்றில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வரலாற்று அடிப்படையிலும் சமகால அரசியல் நோக்கின் அடிப்படையிலும் மிக முக்கியமானவை.

கட்சியினதும் அதன் தலைமையினதும் நடவடிக்கைகள் மீதிருக்கும் விமர்சனங்கள், அதிருப்திகளுக்கு அப்பால் தாயகத்தில் தமிழ்மக்கள் வடமாகாணசபைத் தேர்தலில் காட்டிய ஆர்வமும் ஓர்மமும் உலகுக்கும் சிங்கள தேசத்துக்குமான மிகப்பெரிய செய்தியாக அமைந்தது. சிங்கள தேசத்தின் ஆட்சியாளரை முற்றாகப் புறந்தள்ளி எமது மக்கள் அளித்த தீர்ப்பானது பன்னாட்டு மட்டத்தில் மிகமுக்கிய தீர்ப்பாகவே கணிக்கப்பட்டது. கடந்த காலத்தைப் போலன்றி அரச ஆதரவு ஒட்டுக்குழுக்கள் படுதோல்வியடைந்தமையானது எமது மக்கள் அபிவிருத்தியையோ சலுகைகளையோ கொள்ளையின் முன் விட்டுக் கொடுப்பவர்களில்லை என்பதை வெள்ளிடை மலையாக ஆவணப்படுத்தியிருக்கின்றது.

முதலமைச்சர் வேட்பாளரைத் தவிர்த்துப் பார்த்தால் அதிகூடிய விருப்பு வாக்குகளை அள்ளிச்சென்ற அனந்தி சசிதரன் மீதான மக்களின் வாக்களிப்பு முற்றாகப் புலிநீக்கம் செய்த ஓர் அரசியலை முன்னெடுக்க விரும்புவோருக்கான சாட்டையடி. அனந்தி போன்றோரின் அரசியல் நுழைவும் பெருவெற்றியும் தமிழ்த்தேசிய அரசியலை நீர்த்துப் போகாமல் துடிப்பாக வைத்திருக்கும் என்பதில் நம்பிக்கையுள்ளது.

ஐ.நா.வின் மனிதவுரிமை கூட்டத் தொடரில் சிறிதளவாவது சிறிலங்கா அரசு மீதான அழுத்தத்தை மேற்கொள்ளும் தீர்மானம் வெற்றியடைந்ததும் கடந்த ஆண்டின் முக்கிய அரசியல் நிகழ்வுதான். அதைத்தொடர்ந்த நவிப்பிள்ளையின் சிறிலங்காப் பயணமும், பொதுநலவாய நாடுகளின் மாநாடு கொழும்பில் நடைபெற்றபோது உலக நாடுகள் சில எடுத்த நிலைப்பாடுகளும் மிகமுக்கியமானவை. பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூனின் யாழ்ப்பாணப் பயணமும் மக்களுடனும் தமிழ் அரசியல் தலைவர்களுடனும் அவர் மேற்கொண்ட சந்திப்புக்களும் பயண முடிவில் கமரூனின் நிலைப்பாடும் தமிழ்மக்களுக்குச் சாதகமான அம்சங்களே.

இவ்வாறு கடந்து சென்ற ஆண்டு நம்பிக்கைதரும் ஒளிக்கீற்றுக்கள் சிலவற்றோடு நிறைவுற்றாலும் இப்போது தொடங்கியிருக்கும் ஆண்டில் தமிழ்மக்கள் முனைப்பாகச் செயற்பட்டு எமக்கான நீதியைப் பெறவேண்டிய கட்டாயத்தைக் காலம் உணர்த்தி நிற்கின்றது.

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள மனிதவுரிமை கூட்டத்தொடரில் மேற்குலகமும் பிராந்திய அரசுகளும் எடுக்கப் போகும் நிலைப்பாடும், அவற்றை எதிர்கொள்ள சிறிலங்கா அரசு கையாளப்போகும் முறியடிப்பு நடவடிக்கைகளும் தொடர்பில் தமிழ்மக்கள் மிகக்கவனமாக இருக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. உலகநாடுகள் தமது நலன்களுக்காக மட்டுமே சிறிலங்கா அரசின் மீதான அழுத்தத்தைப் பிரயோகிக்கின்றன என்ற விளக்கத்துடனேயே நாம் அவற்றினை எதிர்கொள்ள வேண்டும். எமது விடுதலை வேட்கையை நீர்த்துப் போகச்செய்யும் நோக்குடன் சில சக்திகள் வெட்டும் கால்வாய்வழி எமது விடுதலைப் பயணத்தை நாம் தொடர்வது முறையன்று.

எமது இனத்துக்கான அரசியல் உரிமையையும், எமக்கு இழைக்கப்பட்ட இனப்படுகொலைக்கான நீதியையும் தொடர்ந்தும் ஒரேகுரலாக நாம் உணர்த்திக் கொண்டிருக்க வேண்டும். மேற்குலகின் நிகழ்ச்சி நிரல் எதுவாக இருந்தாலும் நாம் எமது வேண்டுகைகளைத் தொடர்ந்தும் வலியுறுத்திக் கொண்டிருக்க வேண்டும். தாயகம், தமிழகம், புலம்பெயர் தேசம் என்ற மூன்று தளங்களிலும் தமிழ்மக்களின் போராட்டங்கள் உலகை நோக்கி முனைப்புப் பெறவேண்டும்.

எதிர்வரும் மனிதவுரிமை கூட்டத்தொடர் மிகமுக்கியமானதாக அமையுமென்பதில் ஐயமில்லை. காலத்தை இழுத்தடிப்பதே தனக்கிருக்கும் ஒரே வழியெனக் கண்டறிந்துள்ள சிங்களதேசம் அதற்காக பல காய்களை நகர்த்திக்கொண்டிருக்கிறது. அந்த வலையில் உலகநாடுகள் வீழ்ந்துவிடாமலிருக்க நாம் உழைக்க வேண்டும்.

மலர்ந்துள்ள புத்தாண்டு தமிழ்மக்களுக்கு நியாயமான, நீதியான முறையில் அமையட்டும்.

அனைத்து வாசகர்களுக்கும் ஈழமுரசு தனது தைப்பொங்கல் வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்கின்றது. மலர்ந்துள்ள ஆண்டு மகிழ்ச்சியாகவே அமையட்டும்.

## தாயக செய்திகள்

### மட்டக்களப்பு மாவட்ட மேய்ச்சல் தரை விவகாரம் மீண்டும் உக்கிரம்

மட்டக்களப்புமாவட்டமேய்ச்சல்தரைவிவகாரம்மீண்டும்உக்கிரமடையத் தொடங்கியுள்ளது. இம் மேய்ச்சல் தரைகள் மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைகளிலேயே உள்ளன. நெற்பயிர்ச்செய்கை காலங்களில் விவசாயிகள் நெற்பயிரைப் பாதுகப்பதற்காக கால்நடைகளை மேயச்சல் தரைக்கு அனுப்புவது வழக்கம். இவ் வழக்கம் நீண்டகாலமாக பின்பற்றப்பட்டு வந்தது. ஆனால் அண்மைக்காலமாக இதற்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

பெரும்பான்மையினத்தவர்கள் இவ் மேய்ச்சல் தரைகளை பலவந்தமாகப் பிடித்துக்கொண்டு மேய்ச்சல் தரைகளை பயன்படுத்தமறுக்கின்றனர். மீறி நுழைகின்றகால்நடைகள் ஒன்றில் கொலை செய்யப்படுகின்றன. அல்லது பிடித்துச் செல்லப்படுகின்றன. (தொடர்ச்சி 18ம் பக்கம்)

### கொத்தணிக்குண்டுகளால் பெருமளவு தமிழ்மக்கள் கொல்லப்பட்டனர் – மன்னார் ஆயர்



இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது கொத்தணிக் குண்டுகள், விமானக்குண்டுகள் மற்றும் இரசாயனக் குண்டுகளால் அதிகளவு பொதுமக்கள் கொல்லப்பட்டதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் விசேட தூதுவர் ஸ்டீபன் ராப்பிடம் மன்னார் மறை மாவட்ட ஆயர் அதி வணக்கத்துக்குரிய இராயப்பு ஜோசப் முறையீடு செய்துள்ளார்.

இதுபற்றி தெரிவித்த மன்னார் ஆயர் “இறுதிக்கட்டப் போரின் போது முல்லைத்தீவு, புதுமாத்தளன் பிரதேசங்களில் சிறிலங்கா படையினரால் விமானக்குண்டுகள், கொத்தணிக் குண்டுகள் மற்றும் இரசாயன குண்டுகள் பயன்படுத்தப்பட்டு தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

செம்மணி புதைகுழியில் 500க்கும் மேற்பட்டவர்கள் புதைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்ட போதிலும், அப்புதைகுழியை நீதிமன்ற அனுமதியுடன் தோண்டிய போது மூன்று அல்லது நான்கு சடலங்கள் மட்டுமே இருந்தன. ஏனைய சடலங்களுக்கு என்ன நடந்தது என்று இதுவரை கண்டறியப்படவில்லை.

2008ஆம் ஆண்டு ஜூன் மாதம் தொடக்கம் 2009ஆம் ஆண்டு மே மாதம் வரையிலான காலப்பகுதிக்குள் வடமாகாணத்தின் சனத்தொகையில் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. இக்காலப்பகுதியில் 146,000 பேர் தொடர்பில் இதுவரை எவ்வித தனவல்களும் இல்லை. (18ம் தொடர்ச்சி பக்கம்)

### அமெரிக்காவிடம் தமது எறிகணைத்தாக்குதல் பற்றி விளக்கம் கேட்கிறது சிறிலங்கா

முல்லைத்தீவு இரணைப்பாலை சென் அந்தனி மைதானத்தில் விஜயம் செய்த அமெரிக்காவின் சிறப்புத்தூதுவர் பற்றிய ருவிற்றர் செய்தி தொடர்பாக சிறிலங்கா அரசு விளக்கம் கோரியுள்ளது.

2009 ஆம் ஆண்டில் இராணுவத்தினரின் எறிகணைத்தாக்குதலில் நூற்றுக்கணக்கான குடும்பத்தினர் பலியான இடம் என குறிப்பிட்டு வெளியான செய்திபற்றியே சிறிலங்கா அரசு முறைப்பாடு செய்துள்ளது.




## அவுஸ்ரேலிய செய்திகள்

### தேவையற்ற தாமதங்கள் – ரெல்ஸ்ரா தண்டப்பணம் 510000 டொலர்கள்

நகரங்களில் வசிக்கும் வாடிக்கையாளர்களுக்கு புதிய தொலைபேசி இணைப்பு வழங்குவதற்கான கால அவகாசம் இரண்டு நாட்களாக இருக்கின்றபோதும் 86.7 விழுக்காடு இணைப்புகளே உரிய காலத்தில் வழங்கப்பட்டுள்ளதாக தொலைத்தொடர்பு பாவனையாளர் கண்காணிப்பகம் கண்டறிந்துள்ளது.

ஆகக்குறைந்தது 90 விழுக்காடு இணைப்புகள் உரிய காலத்தில் செய்யப்படவேண்டும் என்ற நிர்ணயத்தை ரெல்ஸ்ரா எட்டவில்லை என கண்டறிந்துள்ள கண்காணிப்பகம் 510 000 டொலர்களை தண்டப்பணமாக செலுத்துமாறு கேட்டுள்ளது.

### அவுஸ்திரேலிய டொலர்களை நெருங்குகின்றது நியுசிலாந்து

நியுசிலாந்தின் டொலர் பெறுமதி 92.63 அவுஸ்திரேலிய சதங்களாக கடந்த வெள்ளிக்கிழமை 10 - 01 - 2014 பிற்பகல் 5 மணிக்கு காணப்பட்டது. இதன் மூலம் கடந்த நான்கு சகாப்தங்களுக்கு பிறகு நியுசிலாந்து முனைப்பான பொருளாதார வளர்ச்சி நோக்கி செல்வதாக தெரிவிக்கப்படுகிறது.

நியுசிலாந்து சீனாவிற்கான 60 விழுக்காடு பால் தொடர்பான பொருட்களை ஏற்றுமதி செய்வது குறிப்பிடத்தக்கது.

### *ஜிபியை பார்க்க 6 டொலர்கள் – முடியுமா?*

பொதுமருத்துவ பரிசோதனைக்கு 6 டொலர்களை வசூலிக்கப்படவேண்டும் என்ற யோசனை தற்போது முன்வைக்கப்பட்டுள்ளது. இதனால் ஒவ்வொரு தடவையையும் பொதுமருத்துவரை சந்திப்பதற்கான கட்டணமாக நோயாளர் 6 டொலர்கள் செலுத்தவேண்டும் என கேட்கப்படுவர். பல பிள்ளைகளை கொண்ட குடும்பங்கள் வயதானோர் இதனால் பெரிதும் பாதிக்கப்படுவர் என்ற விமர்சனம் பரவலாக முன்வைக்கப்படுகின்றது.

### பிரான்ஸ் அகதிகள் திணைக்களமான ‘OFPRA’ ஈழத் தமிழர் ஒருவருக்கு வழங்கிய அகதி தகுதி நிலையை மீளப்பெற்றுள்ளது.

சம்பந்தப்பட்ட அந்த ஈழத்தமிழர் சிறிலங்கா அரசாங்கத்துடன் நிர்வாக ரீதியாக தொடர்பு வைத்துக்கொண்டதே இதற்கு காரணம் என்றும் OFPRA தெரிவித்துள்ளது.

2007 ம் ஆண்டு பிரான்சுக்கு வந்த அந்த ஈழத்தமிழர் 2008ம் ஆண்டு அகதியாக அங்கீகரிக்கப்பட்ட பின்னர் தனது மனைவியை பிரான்சுக்கு அழைத்துள்ளார். அவரது மனைவிக்கு தற்காலிக வதிவிட அனுமதி வழங்கப்பட்டிருந்த நிலையில் அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் பிறந்துள்ளன.

இந்த குழந்தைகளுக்கு கடவுச் சீட்டு எடுப்பதற்காக அவர் பாரிசிலுள்ள சிறிலங்கா தூதரகத்துக்கு மூன்று தடவைகளுக்கு மேல் சென்றுவந்துள்ளார்.

அத்துடன் சிறிலங்கா தூதரக அதிகாரிகள் கேட்டுக்கொண்டதன் பேரில் ஊரில் இருக்கும் தனது உறவினர்கள் மூலமாக தனது பிறப்பு அத்தாட்சி பத்திரத்தையும் சிறிலங்கா அரசாங்கத்திடம் இருந்து பெற்றுள்ளார்.

இவரது குடும்ப விபரங்களை நிர்வாக ரீதியாக ஒழுங்கு படுத்துவது தொடர்பான ஒரு சந்திப்பில் இந்த விபரங்கள் பிரான்ஸ் அகதிகள் திணைக்களமான OFPRA க்கு தெரியவந்ததையடுத்து அந்த அமைப்பு அந்த இலங்கைத் தமிழருக்கு வழங்கிய அகதி தகுதி நிலையை திரும்பப் பெற்றுள்ளது.

இது தொடர்பாக OFPRA அவருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில்:

“2008ம் ஆண்டு ஏப்ரல் மாதம் CNDA எனப்படும் அகதிகளுக்கான மேன்முறையிட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் அகதிகளுக்கான ஜெனீவா சட்டத்தின் 1சி 1 சரத்தின் கீழ் உங்களுக்கு வழங்கப்பட்ட அகதி தகுதி நிலையை பாரிசிலுள்ள சிறிலங்கா தூதரகத்துக்கு 3 தடவைகளுக்கு மேல் சென்று வந்தது, நிர்வாக ரீதியாக தொடர்பு கொண்டது. சிறிலங்காவில் உள்ள அரச நிர்வாகத்துடன் எந்தவித தடங்கலுமின்றி தொடர்பு கொண்டது ஆகிய காரணங்களின் அடிப்படையில் மீளப் பெற்றுக்கொள்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சூடு பிடிக்கும் ஜெனீவா களம்

-சேரா-

வரப்போகும் ஜெனீவா மனித உரிமை கூட்டத்தொடர் தொடர்பாக இப்போதே கருத்து பகிர்வுகள், முன் ஏற்பாடுகள், இராஜதந்திர நகர்வுகள், மேற்கொள்ளப்பட்டு வருகிறன. ஏனைய நாடுகளுக்கும் சமூகங்களுக்கும் இக்கூட்டத்தொடர் சாதாரண நிகழ்வாக இருந்தாலும் தமிழர்களுக்கும் சிறிலங்காவுக்கும் இதுவொரு மிக முக்கியமான நிகழ்வு. அதே போலத்தான் மேற்குறித்த இருதரப்பையும் வைத்து புவிசார் அரசியல் செய்யும் சர்வதேச சக்திகளுக்கும் முக்கியமான ஒன்றாகவே அமைகின்றது.

இறுதி யுத்தத்தில் சிறிலங்கா அரசானது தமிழ்மக்களுக்கு எதிராக பாரிய ஒரு மனிதப் பேரவலத்தை படைகள் ஊடாக மேற்கொண்டது. அத்தோடு பாரிய போர்க்குற்றங்களையும் நிகழ்த்தி இருந்தது. எண்ணிக்கையற்ற மக்களை கொன்று குவித்து ஓர் இனப்படுகொலையை முள்ளிவாய்க்காலில் சர்வதேசத்தின் துணைகொண்டு நடாத்தி இருந்தது.

இவ்வாறான ஒரு சூழலியே இலங்கைக்கு எதிரான மனித உரிமை குற்றச்சாட்டுகள் எழத்தொடங்கின. மனித உரிமைஅமைப்புக்கள், காப்பகங்கள், ஆர்வலர்கள் குரல் கொடுத்து வந்தநிலையில் சனல் நான்கால் வெளியிடப்பட்ட போர்குற்றம் தொடர்பான ஆவணப்படங்கள் எதிர்க்குரல்களை முடுக்கி விட்டன. இதன் நீட்சியாக இலங்கைக்கு எதிராக தீர்மானங்களைக் கொண்டு வருவதில் அக்கறை செலுத்தப்பட்டு வந்தது.

### சிறிலங்காவுக்கு எதிரான தீர்மானங்கள்

சிறிலங்காவுக்கு எதிராக இதுவரையில் மூன்று தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. அதில் ஒன்று தோற்கடிக்கப்பட்டது. இரண்டு வெற்றி அடைந்திருந்தன. முதலாவது தீர்மானத்தை சுவிட்சர்லாந்தே கொண்டுவந்தது. 2009 மே இறுதி பகுதியில் அதாவது யுத்தம் முடிவடைந்து 10 நாட்களுக்குள் நடைபெற்ற விடயம் இது. ஐ.நா மனித உரிமை காப்பகத்தின் சிறப்புக் கூட்டத்தொடரில் போரில் நடந்த மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை நடத்த வேண்டும் என சுவிட்சர்லாந்து தீர்மானம் கொண்டுவந்தது. இந்தத் தீர்மானத்துக்கு ஐரோப்பிய நாடுகள் ஆதரவளித்தன. ஆசிய நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்தன. இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக 17 நாடுகள் வாக்களித்தன. 22 நாடுகள் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்தன. 8 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. இதையடுத்து அந்தத் தீர்மானம் தோல்வி கண்டது.

அதே தருணத்தில் நிதியுதவி கோரும் வேறொரு தீர்மானத்தை இலங்கைமுன்வைத்தது. போரில் பொதுமக்களை விடுதலைப்புலிகள் கேடயமாகப் பயன்படுத்தியதாகக் கூறிய அந்தத் தீர்மானத்தில் 'போர் இலங்கையின் உள்நாட்டு விவகாரம்' எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தத் தீர்மானத்துக்கு 29 நாடுகள் ஆதரவாகவும் 12 நாடுகள் எதிராகவும் வாக்களித்தன. 6 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை இதனால் சிறிலங்கா பெரும் வெற்றியை ஜெனீவாவில் பெற்றுக்கொண்டது.

அப்போதைய அந்த ஜெனீவா களம் தொடர்பாக முக்கியமாக இரண்டு விடயங்கள் ஆழமாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டியதாகும். ஒன்று பின்னாளில் தீர்மானம் கொண்டுவந்த அமெரிக்கா உட்பட இந்தியாவும் இலங்கைக்கு ஆதரவான முடிவுகளை எடுத்து இருந்தன. அதாவது இலங்கைக்கு எதிரான தீர்மானத்துக்கு எதிர்வாக்குப் போட்டதோடு இலங்கையின் தீர்மானத்துக்கு ஆதரவு வாக்குகளும்போட்டிருந்தன. இரண்டாவது போர்க்குற்ற ஆவணங்களெதுவும் வெளியிடப்படவில்லை. குறிப்பாக சனல் 4 களத்தில் இறங்கவில்லை.

இரண்டாவது, மூன்றாவது தீர்மானங்கள் அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்டன. இவை இரண்டும் இலங்கைக்கு எதிரான வெற்றி பெற்ற தீர்மானங்கள் ஆகும். முதலாவது தீர்மானம் 2012 கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்டது. நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நிறைவேற்றப்படுவதோடு போர்க்காலச் சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்தி அச்சம்பவங்களுக்கான பொறுப்பேற்கும் தன்மையும் உறுதிசெய்யப்பட வேண்டும் என அமெரிக்கா தீர்மானத்தில் கூறப்பட்டிருந்தது. 'ஐநாவின் மனித உரிமைகள் தொடர்பான உயர் ஆணையரின் அலுவலகத்துடன் இணைந்து' பணியாற்றும் படியும் இந்தத் தீர்மானம் மூலம் அமெரிக்கா இலங்கையைக் கோரியிருந்தது. பிரேரணைக்கு ஆதரவாக 24 நாடுகள் வாக்களித்திருந்தன. எதிராக 15 நாடுகள் இலங்கையை ஆதரித்திருந்தன. 8 நாடுகள் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

மூன்றாவது தீர்மானம் 2013 ஆம் ஆண்டின் கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்டது. இதிலும் எல். எல்.ஆர். சியின் பரிந்துரைகள் நிறைவேற்றபட வேண்டும் என்று கூறினாலும் சர்வதேச . விசாரணை தொடர்பாக உள்வாங்கப்பட்டு நீக்கப்பட்டமை இங்கு நினைவு கொள்ளத்தக்கது . இம்முறை 26 நாடுகள் தீர்மானத்துக்கு ஆதரவாகவும் 13 நாடுகள் எதிராகவும் வாக்களிக்க 8 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாது நடுநிலையும் வகித்திருந்தன.

அமெரிக்காவின் இரண்டு தீர்மானங்களுக்கு இடையிலும்



பெரிதும் வேறுபாடுகள் காணப்படவில்லை. அதேநேரம் இலங்கையின் செல்வாக்கு இறங்கு வரிசையில் சென்றிருப்பதையும் காண முடிந்தது. இந்த இரண்டு தீர்மானங்களில் சனல் 4 வெளியிட்ட ஆவணப்படம், தமிழ் மக்களின் விடாமுயற்சி, மனித உரிமைக்காக எழுந்த குரல்கள் தாக்கங்களைச் செலுத்தியிருந்தன.

### ஜெனீவாவும் தமிழர்களின் எதிர்பார்ப்பும்

தமிழ்மக்களைப்பொறுத்தவரையில்அரசின்போர்க்குற்றங்களை, இனப்படுகொலையை விசாரிக்க பன்னாட்டுக்குழு அமைக்க வேண்டும் என்று தமிழர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். ஆனால் மனித உரிமை ஆணையாளர் உட்பட நாடுகள் பலவும் இதுவரையில் இனப்படுகொலை என்ற சொல்லை உச்சரிப்பதைத் தவிர்த்து வருகின்றன. மனித உரிமை மீறல் என்றே கூறிவருகின்றன. இந்நிலையில் எதிர்பார்ப்புக்கும் தற்போதைய களச்சூழலுக்கும் இடையில் இடைவெளி ஒன்று தெரிகிறது. அதற்காக தமிழ் மக்கள் கடுமையான ராஜதந்திர முன்னகர்வுகளை, வேலைத்திட்டங்களை மேற்கொள்ள வேண்டி இருக்கின்றது

### தீர்மானத்தின் பின்னுள்ள புவிசார் அரசியல்

அமெரிக்கா சிறிலங்காவுக்கு எதிராக தீர்மானங்களைக் கொண்டு வருகிறதென்றால் அது தமிழ்மக்கள் மீது கொண்டுள்ள அளவு கடந்த பாசம் என்று யாரும் தப்புக்கணக்கு போட்டுவிடக் கூடாது. மாறாக இதன் பின்னால் அதனுடைய புவிசார் அரசியலின் ஆதிக்கப் போட்டி விரவிக்காணப்படுகிறது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். தமிழ் மக்களின் போராட்டத்தை அழிப்பதற்கு ஆதரவு கொடுப்பதன் ஊடாக சிறிலங்கா அரசை தம் கைக்குள் எப்போதும் வைத்துக் கொள்ளலாம் என்றெண்ணிய அமெரிக்கா ஈழ விடுதலைப் போராட்டத்தை முள்ளிவாய்க்காலில் உயிரோடு புதைப்பதற்கு பெரும் பங்காற்றி இருந்தது. இதன் தொடர்ச்சியாக சுவிட்சர்லாந்து கொண்டு வந்த தீர்மானத்தையும் தோற்கடித்தது. ஆனால் வெற்றியின் பின் சிறிலங்கா சீனாவின் செல்லப்பிள்ளையாக மாறத்தொடங்கியது. இலங்கையின் வெளியுறவுக் கொள்கை சீனாவை அரவணைப்பதாக அமைந்திருக்கிறது. இந்நிலையிலேயே அமெரிக்காவுக்கு பிரச்சனை எழுகிறது.

இந்து சமுத்திரத்தை யார் ஆள்கிறார்களோ அவர்களே இந்த உலகை ஆளுவார்கள் என்று ஒரு யதார்த்தமான கருத்து நிலவுகிறது. சிறிலங்கா இந்து சமுத்திரத்தின் மத்தியில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்திருக்கிறது. இதன் அமைவிடம் புவிசார் அடிப்படையில் அமெரிக்காவுக்கு மிகவும் தேவையான ஒன்று. இந்நிலையில் ஒரு துருவ அரசியலின் அதிபதியாக இருந்துவரும் அமெரிக்காவுக்கு சவால் விடும்வகையில் இந்து சமுத்திரத்தில் ஒரு சக்தியாக சீனா வளர்ச்சி பெற்று வருகிறது. அது தனதுமுத்து மாலை திட்டத்தினூடாக தன்னைப் பலப்படுத்தி வருகிறது. அதில்சிறிலங்காவுக்கு சீனா முக்கியத்துவம் கொடுத்திருக்கிறது.

இப்படியான சூழலில் சிறிலங்காவை அமெரிக்கா தன் வசம் இழுத்து எடுப்பதற்கு கையாளும்உத்திகளே இந்தத் தீர்மானங்கள். சிறிலங்கா அமெரிக்கா சார்ந்ததாக தனது வெளியுறவுக் கொள்கைகளை மாற்றிக் கொள்ளும் பட்சத்தில் அமெரிக்கா மனிதஉரிமை பற்றி பேசப் போவதில்லை என்பதே நிதர்சனம்.

காரணங்களுக்கும், விவாதங்களுக்கும், தர்க்கங்களுக்கும் அப்பாற்பட்டு தமிழர் பிரச்சினை உலகத்தின் பேசு பொருளாக மாறி இருப்பதும் இழந்த தேசத்தைப் பெறுவதற்காகப் போராடும் ஓரினம் என்னும் அடிப்படையில் மாறிவரும் பூகோள புவிசார் அரசியல் தமிழர்களுக்கு சாதகமான புறநிலை சூழலை ஏற்படுத்தி இருப்பதும் விடுதலைப் பாதையில் நல்ல சமிக்கைகளாகவே கொள்ளுவதோடு முழு மூச்சோடு உழைப்பதற்கான நிரப்பந்தத்தையும் ஏற்படுத்தி இருக்கிறது.

### கடுமையான தீர்மானங்களை 2014 ல் காணலாமா?

கடந்த ஓராண்டில் பல மாறுதல்கள் ஏற்பட்டு இருக்கின்றன. வெளிநாடுகளால் அதிகம் கேட்கப்பட்ட ஒரு வேலையை சிறிலங்கா செய்து முடித்திருக்கிறது. மாகாணசபை தேர்தல் நடாத்தப்பட்டு இருக்கின்றது. இதனை மிகப்பெரிய பாதுகாப்பு அரணாக சிறிலங்கா நிச்சயம் பயன்படுத்தும். ஆனாலும் டேவிட் கமரூன் வடக்கு சென்று பார்வையிட்டு தான் சர்வதேச விசாரணை ஒன்றைக் கோரப்போவதாக கடுந்தொனியில் குறிப்பிட்டு இருந்தார். தனது நாட்டின் தேர்தல் அரசியலுக்காக அப்படிச் சொன்னார் என்று பார்ப்பதிலும் பார்க்க பலம் பொருந்திய ஒரு நாட்டின் பிரதமரின் வார்த்தையாகப் பார்க்கவேண்டிய கட்டாய தேவையும் இருக்கிறது.

அதே நேரம் மக்கள் தீர்ப்பாயம் இலங்கையில் நடந்தது இனப்படுகொலைதான் என்று தீர்ப்பளித்திருகிறது. முதல் முறையாக இப்படியான ஒரு தீர்ப்பு வந்திருக்கிறது. அத்தோடு இசைப்பிரியா யுத்தத்தில் தான் இறந்தார் என்று சிறிலங்கா சொல்லிவந்த நிலையில் அவர் உயிருடன் பிடிபட்ட காட்சிகள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக அமெரிக்கா நினைப்பது இன்னும் நடக்கவில்லை. அதாவது சிறிலங்கா தனது வெளியுறவுக் கொள்கையில் இன்னும் அமெரிக்காவுக்குச் சாதகமான முறையில் நடந்து கொள்ள எத்தனிக்கவில்லை. சீனாவின் முத்துமாலையில் முக்கியமானது சிறிலங்கா. சிறிலங்காவை தனது பண பலத்தினூடாக மீண்டுவரக் கடினமான அளவுக்கு தன்னுள் ஆழ இறக்கி இருக்கிறது சீனா. இது சிறிலங்காவுக்கு ஓர் அபாயமான சூழலையே ஏற்படுத்தி இருக்கிறது

ஸ்ரீலங்கா மீது வரையறுக்கப்பட்ட பொருளாதார கட்டுப்பாடுகள் கொண்டு வரப்படாலாம் என்று ஆய்வாளர்கள் சிலர் சொல்லுகிறார்கள். சிலர் சிறிலங்காவின் இராஜதந்திரிகளுக்கான வெளிநாட்டு பயணங்களில் வரையறைகள் கொண்டு வரப்படலாம் என்கின்றனர். இன்னும் சிலர் சர்வதேச விசாரணை உள்ளடக்கப்படலாம் என்றும் கருத்துத் தெரிவிக்கின்றனர்

மேற்குறித்தவைகளைத் தொகுத்து நோக்கும்போது இம்முறை முதல் இரு முறைகளைவிட சற்றுக் காரமான ஒரு தீர்மானம் வரலாம் என்றே எதிர்பாக்கலாம். இல்லையேல் மனித உரிமை கூட்டத்தொடருக்கு முதல் ஏதேனும் மாற்றங்கள் நிகழலாம். எது எப்படியாயினும் உண்மையில் என்ன நடக்கபோகிறது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும் .

# நம்மவர் நிகழ்வுகள்

## விக்ரோறியா மாநிலத்தில்

| | |
|---|---|
| 05th Jan 2014 | Annual Cricket tournament by JHC OBA Vic |
| 14th Jan 2014 | Thai Pongal Day, Iyappa Magarajothi & Tamil new year celebrations |
| 18th Jan 2014 | Thai thirunaal Thamilar Thirunaal celebrations - VTCA |
| 18th Jan 2014 | Tamil Senior citizen fellowship Monthly Meeting |
| 19th Jan 2014 | Kittu Rememberance Tamil Sports Day & Food Fair - TCC Vic |
| 20th Jan 2014 | Free Indefinitely Detained Refugees Rally -State Library of Vic |
| 25st Jan 2014 | Thai Pongal celebration - Casey Tamil Mantram |
| 01st Feb 2014 | Dinner Dance Program - ETA Vic |
| 01st Feb 2014 | Bharatha Natya Arangetram - Mrs Yalini Lojan's Student |
| 22nd Feb 2014 | Meena Elankumaran's Nadanalaya Annual Concert 2014 |
| 22nd Feb 2014 | Vertyil Oru Party - SJC OBA Vic |
| 22nd Feb 2014 | Casey Tamil Mantram's Monthly Seniors Meeting |
| 23rd Feb 2014 | Cinnathirai Galatta -Thamil Oosai |
| 15th Mar 2014 | Mega Musical Night - S & S Event Specialists |
| 05th April 2014 | Innisai Maalai Mega music show by Local Talents - Dravida Culutural society |
| 19thApril 2014 | Nadanalaya School Program |
| 18th May 2014 | Mullivaikkal Rememberance event |
| 08thJune 2014 | Vani Jairam Music Show |
| 23rd Aug 2014 | Dinner Dance- SJC OBA Vic |

### VIC - Monthly Meetings

Casey Tamil Mantram's Monthly Seniors Meeting (4th Saturday of Month)

15th Mar, 26th Apr, 24th May, 28th June, 26th July, 23rd Aug, 27th Sep, 25th Oct, 22nd Nov, 13th Dec

Time: 10.00 am - 2.30 pm @ Berwick Senior Citizens Hall, 112 High Street, Berwick, 3806

Tamil Senior Citizens Fellowship - Monthly Meeting (3rd Saturday of Month)

18th Jan, 15th Feb, 22nd Mar, 19th Apr

Time: 11 am - 2.30 pm @ Oakleigh Hall, 142 Drummond St, Oakleigh 3166

## நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில்

| | |
|---|---|
| 18th Jan 2014 | ATC - Meeting with Lee Rhiannnan & Fr Emmanual |
| 26th Jan 2014 | Thamilar Onrukoodal 2014 / Col Kittu Memorial/ Australia Day - TCC |
| 1st Feb 2014 | Chennai Musical Show |
| 22nd Feb 2014 | Cinnathirai Galatta -Thamil Oosai |
| 8th Mar 2014 | Vembadi Girls' High School 175th Anniversary celebration |
| 16th Mar 2014 | Issai Aruvi 2014 |
| 22nd Mar 2014 | UNSW Anjali Tamil Society proudly presents "Oli Olli 2014" |
| 23rd Mar 2014 | UNSW Anjali Tamil Society proudly presents "Oli Olli 2014" |
| 29th Mar 2014 | Anbayakaram's Annual Program |
| 5th April 2014 | Anbaalayam Musical and Talent Contest, |
| 12th April 2014 | Raga Sangamam -2 |
| 3rd May 2014 | S.P.Bala & Chithra Music show |
| 7th June 2014 | Vani Jairam Musical show |

நிகழ்வு பற்றிய விபரங்களை emurasu@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பிவையுங்கள்.

### NSW Tamil Association Monthly Meeting

1. Monthly meeting of Consortium of Tamil Associations is on the first Sunday of the month( 2pm-4pm).
2. Monthly meeting of Eelam Tamil Association is on the third Sunday of the month ( 3pm-5pm).
3. Monthly meeting of Tamil Co-ordinating Committee is on the last Saturday of the month ( 5pm-6.30pm).
4. Monthly Food Fair of Tamil Co-ordinating Committee is on the first Saturday of the month( 10am-3pm).



# தண்ணிக்கு தடையா ?

ஆங்கில மூலம் திரு ஆறுமுகம் தமிழில் பாலா விக்னேஸ்வரன்

## யாழ்ப்பாணத்துக்கு ஓர் ஆறு

ஆறுகள் எதையும் கொண்டிராத 1000 சதுர கிலோமீட்டர் பரப்புடைய யாழ்ப்பாண குடாநாடு தனது தண்ணீர் தேவைக்கு முழுமையாக மழைவீழ்ச்சியிலேயே தங்கியிருக்கிறது. யாழ்ப்பாணத்தின் வருடாந்த மழைவீழ்ச்சியான 1270 மில்லி மீட்டரில் 87% வடகிழக்கு பருவ காலமான ஐப்பசி முதல் மார்கழி மாத காலப்பகுதியிலேயே பெய்கிறது.

முற்காலத்தில் வீட்டு மற்றும் விவசாய தேவைகளுக்கு கிணறுகளில் இருந்து துலா மூலம் நீர் எடுக்கபட்டது. ஆயினும் 1950 களில் இருந்து இயந்திரங்கள் மூலம் கிணறுகளில் இருந்து இறைத்து எடுக்கபடுகின்றது. யாழ்குடாநாட்டில் கிட்டத்தட்ட ஒரு இலட்சம் கிணறுகள் இருக்கின்றன விவசாய தேவைகளுக்கான அளவு மீறிய நீர் ,றைத்தலிலேயே சுண்ணாம்பு கற்படுக்கைகளில் உள்ள நிலத்தடி நீரை வெளியே எடுப்பதனால் சுண்ணாம்பு கற்கலில் வெடிப்புகளின் ஊடாக கடல் நீர் கிணறுக்குள் கசியும் நிலை ஏற்படுகின்றது. யாழ்குடாநாட்டில் பெரும் பகுதியும் கடலில் ,ருந்து 15 கிலோமீட்டர் தூரத்துக்குள் இருப்பதனால் கடலின் ஆதிக்கம் தவிர்க்க முடியாததாக காணப்படுகின்றது. இப்போதைய தரவுகளின்படி கிட்டதட்ட 30% கிணறுகள் உவர் தன்மையாக காணப்படுகின்றது. அண்மைக்கால அறிக்கையின்படி குடாநாட்டின் வளமிக்க விவசாய நிலங்களின் 4500 ஹெக்டயர் காணிகளில் உவர் நிலைமைகளால் விவசாயத்துக்கு பொருத்தமற்ற நிலைமையை அடைந்து ,ருக்கின்றன.

யாழ்குடாநாட்டின் வடமராட்சி நீர் ஏரி, உப்பாறு நீர் ஏரி என ,ரண்டு பெரிய நீர் ஏரிகள் உள்ளன. இவை முறையே 77 மற்றும் 26 சதுரகிலோ மீட்டர் மேற்பரப்பை கொண்டன. இவை கடலுடன் இணைந்து இருப்பதால் உப்புத்தன்மையை கொண்டு இருப்பினும் வடகிழக்கு பருவகாலத்தில் இந்நீர் ஏரிகளின் நீரேந்துப்பிரதேசங்களில் விழும். மழையும் வெள்ளமாக வந்து இந்த நீர் ஏரிகளில் சேர்க்கிறது. இந்த இரு நீர் ஏரிகளின் நீரேந்து பிரதேசம் யாழ்குடாநாட்டின் மொத்தபரப்பின் கிட்டத்தட்ட அரைவாசி என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ்குடாநாட்டில் சுத்தமான நீரின் அளவை அதிகரிக்க வேண்டும். ஆயின் மழை நீருக்கு மாற்றீடான நீர் வளங்களை யாழ்குடாநாட்டுக்குள் தேடவேண்டும். யாழ்குடா நாட்டிக்கு தெற்கே ஆனையிறவு கடல் நீரேரி அமைந்திருக்கின்றது கிட்டத்தட்ட 77 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட ஆனையிறவு கடல் நீரேரி வன்னி பெருநிளப்பரப்பில் கனகராயன் ஆறு மற்றும் மூன்று அருவிகளை உள்ளடக்கிய 940 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட நீரேந்து பிரதேசத்தை கொண்டிருக்கின்றது. வடகிழக்குப் பருவகாலத்தில் பெய்யும் மழையின் போது வன்னியில் இருந்து வழிந்தோடும். மேலதிக நீர் ஆனையிறவுக் கடல்நீரேரியை அடைகிறது. இந்த நன்னீர் கடல் நீரேரியில் விழுந்து கிழக்குபுறம் ஆணையிறவுப்பாலத்தின் ஊடாகவும் கடலில் கலக்க விடப்படுவதன் மூலம் வீணடிக்கப்படுகின்றது. வடகிழக்கு பருவ மழை வீழ்ச்சியின் போது ஆணையிறவுக்கடல் நீரேரியில் கலந்து வீணாகும். நன்னீரை யாழ்ப்பாணம் நோக்கிலான திட்டம் என்று 1960 களில் முன்மொழியப்பட்டது.

யாழ்ப்பாணத்துக்கு ஓர் ஆறு திட்டத்தில் முக்கிய அம்சங்கள்.

1960 களில் முன்மொழியப்பட்ட திட்டத்தின் முக்கிய அம்சங்களும் செய்து முடிக்கப்பட்ட வேலைகளும் பின்வருமாறு.


1.ஆனையிறவு கடல் நீரேரியின் மேற்காக நெடுந்தெரு மற்றும் புகையிரத பாதைக்கான துணைப்பாலத்துக்குக் கீழேயுள்ள தண்ணீர் பாயும் மதகுத்துவாரங்களை அடைத்தல் (இந்தப்பணி நிறைவுபெற்று விட்டது )

2.ஆனையிறவு நீரேரியின் கிழக்கு புறத்தில் உள்ள சுண்டிக்குளத்தில் நன்னீர் கடலுக்கு செல்லாதிருக்கும் பொருட்டு ஓர் அணைக்கட்டும். நீர் தழும்பு வாயிலும் வடிகாலும் அமைக்கப்படுதல். (இப்பணி நிறைவு பெற்று ஆனையிறவு நீரேரி சில ஆண்டுகளுக்கு நன்னீர் தேக்கமாகவும் ஆகியிருந்தது. ஆயினும் துரதிஷ்டவசமாக இந்த ஆணை கடுமையான வெள்ளம் காரணமாக உடைந்தமை மீண்டும் கடல் நீர் உட்புகுவதற்கு வழி சமைத்து விட்டது).

3.ஆனையிறவு நீரேரியில் சேரும் நன்னீர் சென்று வடமராட்சி நீரேரியை அடையும் பொருட்டு முள்ளியான் ,ணைப்புக்கால்வாய் என்ற பெயரில் 4 கிலோ மீட்டர் நீளமும் 12 மீட்டர் அகலமுமான கால்வாய் ஒன்றும் நீரோட்டக் கட்டுப்பட்டு வான் கதவுகளுடன் ஆனையிறவு நீரேரியின் வடக்குப்புறத்தில் இருந்து வடமராட்சி நீரேரியின் தெற்குப்புறம்வரை அகலப்படுத்தல் (இந்தப்பணி ஆரம்பிக்கப்பட்டு 80% வரை முடிவடைந்த பின்னர் ஒதுக்கப்பட்ட நிதி முடிந்த காரணத்தினால் நிறுத்தப்பட்டு விட்டது ).

4. வடமராட்சி நீரேரியை நன்னீர் தேக்கம் ஆக்கும் வகையில் நீரேரியின் வடக்குப்புறத்தில் இருக்கும். தொண்டமனாறு அணை மேலதிக வெள்ளம் தளும்பி கடலுக்குள் வழிந்தோடுவதற்கான பொருத்தமான வான் கதவுகளுடன் புதுப்பிக்கப்படுதல். (இப்பணி செயற்படுத்தப்பட்ட போதிலும் சில ஆண்டுகளின் பின்னால் மரத் தடுப்புகதவுகள் சிதைவடைந்து கடல்நீர் மீண்டும் நீரேரியில் வரும் நிலை ஏற்பட்டது )

5.உப்பாறு நீரேரியை நன்னீர் தேக்கம் ஆக்கும் வகையில் உப்பாறு நீரேரியின் தென் புறத்தில் வான் கதவுகளும் நீர் தளும்பு வாயிலும் வழிந்தோடும் வாய்க்காலும் அமைக்கபடுதல். (இப்பணி நிறைவேற்றப்பட்ட போதிலும் மரத்தடுப்பு கதவுகள் சிதைவடைந்து கடல் நீர் மீண்டும் நீரேரிக்குள் வரும் நிலை ஏற்பட்டது )




மேற்கூறப்பட்ட விடயங்களில் இருந்து திட்ட வேலைகள் 1960 களில் முறைமையாக நிறைவு செய்யப்படவில்லை என்பதும் முள்ளியான் இணைப்பு கால்வாய் நிறைவு செய்யப்படவில்லை என்பதும் தெளிவாகிறது. வடமராட்சி நீரேரியும் உப்பாறு நீரேரியும் நன்நீர்த்தேக்கங்கலாக நிலைபெற்றிருந்த குறுகிய காலத்தில் இத்திட்டத்தின் பலாபலன்கள் உணரப்பட்டிருந்தன. அப்போது பல உவர் நீர் கிணறுகள் நன்னீர் கிணறுகளாக மாறி இருந்தன.

### நிறைவேற்றப்படுவதன் மூலம் பல நற்பயன்களை அடையலாம்

கிட்டத்தட்ட 13000 ஹெக்டையர் பரப்பளவில் யாழ்குடாநாட்டில் நெற்செய்கை மேட்கொள்ளப்படலாம். உவராக மாறும் நிலம் மற்றும் காரணிகளால் இப்போது 8000 ஹெக்டையர்கலில் மட்டும் நெற்செய்கை மேற்கொள்ளபடுகின்றது. தற்போதைய குடாநாட்டு நெற்செய்கை இலங்கையின் பெருநிலப்பரப்பில் நீர்பாசன கால்வாய்கள் மூலம் நீர் பாச்சபடுதல் போலன்றி முழுமையாக நேரடி மழை வீழ்ச்சியிலேயே தங்கியிருக்கின்றது இந்த மழை சார்ந்த நெற்செய்கை மூலம் குடாநாட்டில் பெறப்படும் ஏக்கருக்கான நெல் விளைச்சல் இலங்கையின் பெருநிலப்பரப்பின் ஏக்கருக்கான நெல் விளைச்சலின் மூன்றில் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கதாகும். வடமராட்சி மற்றும் உப்பாறு நீரேரிகள் நன்னீர் ஏரிகளாக மாறுமிடத்து கிணறுகளில் நீர் மட்டமும் நீரின் தரமும் உயர்வடையும். இவ்வகையில் இப்போது மழை நீரில் தங்கி இருக்க வேண்டிய காரணத்தால் தரிசு நிலங்களாக விடப்பட்டிருக்கும் நெற்பயிர் செய்யத்தக்க காணிகளிலும் நிலத்தடி நீர் இணைப்பு மூலம் நெற் செய்கைக்கான வாய்ப்பு ஏற்படும் நெல் விளைச்சல் விதத்திலும் அரிசி உற்பத்தியிலும் வியத்தகு அதிகரிப்புக்களும் எட்டப்படும்.

வடமராட்சி,உப்பாறு நீரேரிகளுக்கு அண்மையில் அமைந்துள்ள கிட்டத்தட்ட 4400 ஹெக்டையர்கள் அவற்றின் உவர் தன்மை காரணமாக தற்போது விவசாயத்துக்கு உகந்த நிலைமையில் இல்லை. இந்த நீரேரிகள் நன்னீர் ஏரிகளாக வருமிடத்து மண்ணில் உள்ள உப்புக்கள் கொஞ்சம் கொஞ்சமாக பொசிந்து உவர்தன்மை குறையும் நிலைமை காணப்படுகின்றது. இவ்வகையில் இந்த நிலங்களும் நெல் மரக்கறி மற்றும் பணப்பயிசெய்கைக்கு ஏதுவான நிலைமை உள்ளது உவர் தன்மையுடன் இப்போது உள்ள யாழ்குடாநாட்டின் 30 வீதமான கிணறுகளின் நீரின் தரத்தில் துரிதமான அபிவிருத்தி ஏற்படும் இவ்வாறான பல கிணறுகளில் உள்ள நீர் வீட்டு தேவைகளுக்கும் விளைச்சல் தேவைகளுக்கும் பொருத்தமானதாக மாறுதல் அடையும். இவ்வகையில் குடாநாட்டில் விவசாய விளைச்சல் பெருகும்.

முன்னைய திட்டத்தை நிறைவு செய்வதுக்கு செய்யவேண்டிய பணிகள்

சென்ற ஆண்டுகளில் தொண்டமனாறு மற்றும் நீர் அணைகளின் சீரமைப்பு நிறைவு செய்யப்பட்டிருக்கின்றது. இதன் பின்னர் வடமராட்சி மற்றும் உப்பாறு நீர் ஏரிகள் பெருமளவில் நன்னீர் ஏரிகளாக மாறி உள்ளன முன்னைய திட்டத்தை முழுமையாக நிறைவேற்றுவதற்கு பின்வரும் பணிகள் செய்யப்பட வேண்டியுள்ளன.

சுண்டிக்குளம் அணையும் நீர் தளும்புகளும் வாயிலும் நிறைவு செய்யப்படுதல்: ஆனையிறவு நீர் ஏரியின் கிழக்குப்புறத்தில் உள்ள சுண்டிக்குளம் அணை நீர், தழும்பு வாயில் , அணை வீதி என்பன அமைக்க படவேண்டும் . நீர் தளும்பு வாயிலும் அதற்கான வீதியும் 21 மீட்டர் நீளம் கொண்டதாகவும் அணைக்கட்டு 1480 மீட்டர் இருக்கும் இப்பணி நிறைவடையுமிடத்தில் ஆனையிறவு நீர் ஏரியாக மாற்றம் அடையும்.

முள்ளியான் இணைப்பு கால்வாய் நிறைவு செய்யபடுதல் :

முள்ளியான் கால்வாய் அகலப்பட்டு தேவையான அணையும் பாதைகளும் நீரோட்ட கட்டுப்பாட்டு கட்டமைப்புகளும் அமைக்க படவேண்டும். இப்பணி நிறைவுபெறும் இடத்து ஆனையிறவு நீர் ஏரியில் இருந்து நன்னீர் வடமராச்சி மற்றும் உப்பாறு நீர் ஏரிகளுக்கு அனுப்பப்பட முடியும்

நிறைவுரை

குடாநாட்டில் நீர் ஏரிகளை நன்னீர் ஏரிகளாக மாறுவதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகள் எதையும் எடுப்பது குறித்து இலங்கை அரசாங்கம் உடனடி திட்டங்கள் எதையும் கொண்டிருக்கவில்லை. யாழ்பாணம் கிளிநொச்சி நீர் வளங்கள் திட்டம் சார்ந்த வேலைகள் ஏற்கனவே ஆரம்பிக்க பட்டமை இதற்கான காரணங்களாக இருக்கலாம். இந்த நீர் வழங்கல் திட்டமானது இரணைமடு குளத்தில் இருந்து நீரை பெற்று யாழ்பாணத்தில் இருக்கின்றவர்களுக்கு குடி நீரை வழங்குதல் என்பதை அடிப்படையாக கொண்டதாகும். இரணைமடு குளத்தில் இருந்து நீரை எடுத்தல் என்பது கிளிநொச்சி விவசாயிகள் சிறுபோக வேளாண்மை செய்வதை பாதிக்கும் ஒன்றாகும். இந்த நிலைமையை சீர் செய்வதற்காக 10 மில்லியன் டொலர் செலவில் இரணைமடு குளத்தின் அணையை இரண்டு அடிகளால் உயர்த்துவதன் மூலம் மட்டத்தை அதிகரித்து மேலதிக நீரை சேர்க்கலாம் என்ற முன்மொழிவு ஒன்று உள்ளது . ஆயினும் 2009 மற்றும் 2012ல் நடந்தமை போல குறைந்த மழைவீழ்ச்சி காலங்களில் இரணைமடு குளத்தின் கொள்ளளவை விட குறைந்த அளவு நீரே குளத்தினுள் வந்தது. ஆகவே அணையை உயர்த்துதல் மற்றும் மேலதிகமான நீரை வறட்சி காலங்களில் சேமிக்க உதவாது என்பதால் இவ்வாறான காலங்களில் சிறுபோக பயிர் செய்கை சாத்தியமாகாது .

இரணைமடுகுளத்தில் கொள்ளளவை உயர்த்துவைவிட சிறந்த மாற்று திட்டமானது இரணைமடுவுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் 10 மில்லியன் டொலர்களை யாழ்பாணத்திற்காக ஆறு திட்டத்தில் முதலீடு செய்வதாகும் . இவ்வகையில் யாழ்பாண கிளிநொச்சி நீர் வளங்கள் திட்டத்திற்கான நீர் இரணைமடு குளத்தில் இருந்தன்றி யாழ்குடாநாட்டில் நிலத்தடி நீரில் இருந்து பெற்றுகொள்ளப்படமுடியும் இந்த அணுகு முறையானது யாழ்ப்பாணத்திற்கான ஆறு திட்டத்தின் மேல் செய்யப்பட்ட பணிகளுடன் இரணைமடுகுளத்தில் இருந்தான சிறுபோக பயிர் செய்கைக்கான பாசன நீர் என்ற இன்னொரு நற்பயனையும் விளைவிக்கும்.

மேலும் இரணைமடு குளத்தில் இருந்து குடாநாட்டிக்கு நீண்ட நீர் குழாய்கள் மூலமாக நீரை எடுத்து செல்வதற்கு செலவு செய்யப்பட இருக்கும் மேலதிகமான ஆறு மில்லியன் டொலர்களையும் சேமிக்க வழி பிறக்கும்

வட மாகாணத்தின் நீர்வளம் நீர்த்தேவைகள் நீரின் தரம் என்பன காலாகாலமாக பேசப்பட்டு வருகின்ற விடயங்களே. மழைநீர் நிலத்தடி நீர் கழிவுநீர் நிலத்தடி நீர் மாசடைதல் உவர்நீர் கிணறுகள் கடல் நீர் உள்வருதல் என்று பல உப தலைப்புக்களின் கீழ் அறிவியல் அரசியல் சமூக பொருளாதார கண்ணோட்டங்களில் பல அலசல்கள் நடந்து வந்திருக்கின்றன.

தொடர்ச்சி 21ம் பக்கம் பார்க்க

# Tribunal delivers Sri Lanka's guilty verdict

A tribunal of 11 eminent judges has unanimously found the Sri Lankan government guilty of the crime of genocide against ethnic Tamil people. Sitting in Bremen, from December 7 to 10, the Second Session of the Peoples' Tribunal on Sri Lanka found that the crime of genocide has been and is being committed against the Eelam Tamils as a national group.

I was invited to appear before the tribunal as an expert witness on the treatment of Tamils from Sri Lanka by the Australian government. The Second Session in Bremen was convened in response to the determination of the First Session, held in January 2010 in Dublin, that war crimes and crimes against humanity had taken place against the Tamil population in the final months of the war in early 2009, and that further investigation be undertaken regarding the question of genocide.

The two sessions of the Permanent Peoples' Tribunal were established in response to submissions made by the International Human Rights Association, Bremen, and the Irish Forum for Peace in Sri Lanka. The Permanent Peoples' Tribunal is based in Rome under the auspices of general secretary Gianni Tognoni. Thirty eye-witnesses and other experts appeared before the Second Tribunal, some at great personal risk.

The tribunal found that genocide against the Eelam Tamil group has not yet reached the total destruction of their identity; however, the genocide is a process and the process is ongoing. The military killings of May 2009 have been transformed into other forms of conduct causing serious bodily and mental harm to members of the group. The tribunal considered that the proof established beyond any reasonable doubt that the following acts were committed by the government of Sri Lanka:

Killing members of the group, which includes massacres, indiscriminate shelling, the strategy of herding civilians into so-called ''no fire zones'' for the purpose of killings, targeted assassinations of outspoken Eelam Tamil civil leaders who were capable of articulating the Sri Lankan genocide project to the outside world.

Causing serious bodily or mental harm to members of the group, including acts of torture, inhumane or degrading treatment, sexual violence including rape, interrogations combined with beatings, threats of death, and harm that damages health or causes disfigurement or injury.

Deliberately inflicting on the group conditions of life calculated to bring about its physical destruction in whole or part, including expulsion of the victims from their homes; and seizures of private lands; declaring vast areas as military high security zones to facilitate the military acquisition of Tamil land.

The tribunal undertook to further examine allegations of forced sterilisation of Tamil women.

Britain and the US were found to be guilty of complicity in the crime of genocide, including complicity by procuring means, such as weapons, instruments or any other means, used to commit genocide, with the accomplice knowing that such means would be used for such a purpose; and complicity by knowingly aiding or abetting a perpetrator of a genocide in the planning or enabling of such acts.

The tribunal recognised that Sri Lanka did not have the capacity to achieve genocide without assistance and, on the basis of evidence provided, came to the conclusion that Britain, the US and







possibly India are guilty of complicity. However, due to the constraint of time, the tribunal limited its findings to Britain and the US, pending the availability of further evidence against India and other states.

After the recent gift of two patrol boats to Sri Lanka's navy, Australia is in danger of being one of those states. The gift adds to the military capacity of the Rajapaksa regime to illegally detain and harm Tamil asylum seekers fleeing repression.

In recent times the Rudd and Abbott governments took it upon themselves to send Tamil asylum seekers back to Sri Lanka without hearing their claims. This was done on the basis that they were economic refugees - although how this determination



was reached without first hearing claims was not explained.

Australians outside of government involved with the welfare of Tamil asylum seekers have long known of the genocidal intent of the government. But it has been puzzling why the Australian government was not informed of this by its high commission in Colombo.

I took the opportunity at the hearings to ask some of the Tamil witnesses from within the country whether they thought the high commission was informed and they said yes, on the basis that they had briefed Australian diplomatic officers. This raises the question of what was done with that information. The assumption must be that it had gone to Canberra and had been ignored by government for reasons of policy and politics. This would suggest that both major parties knowingly acted illegally with respect to processing Tamil asylum seekers. How low can we go?


Lower, it seems. I was also informed that the high commission has now ceased briefings from Tamil sources in the north, presumably on the basis of what they don't know they don't have to lie about. A form of deniability adopted and refined by Hitler's Third Reich towards the final solution of the Jewish question.

The tribunal requested that states able to do so should take Tamil asylum seekers as refugees.

**-Bruce Haigh-**

The change is distinctly perceptible, from the packed Sri Lankan Airlines Chennai-Colombo flight to the crowded streets and high-end cars of the capital city. It may seem that the country is finally emerging out of the shadow of unrest that had settled over it since 1975, when the LTTE began its fight for an independent state for the Tamil people.

Move away from the cities, and it is a different story, that of distress and struggle. “We have more freedom in Tamil Nadu than we have in our own country,” said 51-year-old Kanagapushpam, while waiting to board the flight in Chennai. She and her sister Manjari were returning to Sri Lanka after meeting Manjari’s son, who is in the Chengalpattu refugee camp in Tamil Nadu.



A tamil women cries after being stoped by the police from meeting British PM David Cameron in Jaffna

“My son came here in the 90s,” said Manjari. “He can return home. But it is very difficult to get a job there. We have lost our land. We don’t have any source of income.”

Conversing in Sri Lankan Tamil all along, they suddenly switched to Sinhala on landing at the Bandaranaike International Airport in Colombo. Most people stick to Sinhala despite being fluent in Tamil. “I know Tamil. But I will not talk in Tamil. I am a Sinhala Buddhist,” says Sunil, an auto driver in Colombo.

The anti-Tamil sentiment is quite evident among the Sinhalese. “They want the Tamils to go to Tamil Nadu and the Muslims to the Middle East. For them it [Sri Lanka] is a Sinhala nation,” says Selvam Adaikalanathan, parliamentarian from Vanni.

A step-motherly treatment has made life miserable for the Tamils in the country. “Can I get a job in Tamil Nadu?” asked 28-year-old Kumaran Vijayanathan of Kandy. A waiter in a small eatery in Colombo, Vijayanathan has not been able to find a better job despite having done a computer course.

Most Tamils say a Sinhala is given preference over them when it comes to jobs. Another major concern for them is security. “Colombo is not safe despite the near-hysterical hype over security and the ubiquitous presence of gun-toting servicemen,” said a journalist of a Tamil TV channel based in Colombo. “In a bid to survive, many Tamils have converted to Buddhism.”

A lot of families depend on the money sent to them by a family member or relatives working overseas. There are about two million Sri Lankans working abroad, sending home about $10 billion a year. According to sources, six of the 20 billionaires in the Sri Lankan Stock Exchange are Tamils. However, the economic growth has not trickled down to the lower strata of society.

The government claims to have reined in unemployment and inflation. “We have laid the foundation for the development and growth of the economy for the next five years,” Economic Development Minister Basil Rajapaksa told THE WEEK. “In fact, we have even guaranteed to keep the momentum going. Poverty has come down. We have been maintaining a single-digit inflation rate. The unemployment rate is only 4.2 per cent now. We have brought down the price of rice from Rs.110 a kilo to Rs.45-55 a kilo.”

The common man might disagree. The prices of rice and vegetables, cooking oil and gas are at an all-time high. Rice is sold at Rs.70 a kilo in Colombo.

Also, the government has failed to deliver on its promise of giving more power to the local administration in the provincial councils, something that even India has been pressing for, citing the 13th amendment.

While President Mahinda Rajapaksa had promised to make developmental projects all-inclusive, most people say it has been limited to the western and southern regions, benefiting the country’s Sinhalese majority.


Sri Lanka is on the look out for foreign investment. India has already given a low interest rate loan of $800 million to help redevelop the north and eastern parts of the country and to build 50,000 new homes in the war-ravaged areas, around one-third of the 1,60,000 new homes required, according to the UN, to rehabilitate the people. India also signed the 500MW Sampur power project agreement with Sri Lanka recently.

Also showing interest is China, which has invested $500 million to build new seaports, a power grid and a new highway in the east.

The hospitality sector is cashing in on the rush of tourists to see firsthand the devastation caused by the war. Economically, the country may be recovering. But a major concern among the people is the growing power of the Rajapaksa family. Whether it would mean further isolation of the Tamils, only time will tell.

-The Week-

## *Spiritual Guru for Citizenship -to Tamils*



**Spiritual leader and founder of the Art of Living Foundation, Sri Sri Ravi Shankar, has urged the Tamil Nadu and Indian governments to accord Indian citizenship to the Sri Lankan Tamil refugees lodged in various refugee camps.**

**It was a pity that the Lankan Tamils were treated as second class citizens. Many refugees and immigrants are given citizenship in India. Recently 51 people from Pakistan were given citizenship, he said. At the same time, the Sri Lankan Tamil refugees continue to lead a miserable life in the refugee camps in the State, he pointed out.**

**He said the Art of Living Foundation, which had collected 10 lakh signatures seeking according citizenship to those who wished to live here, would soon meet the President and submit a memorandum, pressing the demands.**

**Further, he said The Art of Living has taken up a campaign to integrate the nation through the patriotic songs of Mahakavi Bharathiar. It will start in Coimbatore from January 30 and the campaign will be taken to all villages in Tamil Nadu.**






**SANTHANAM JACKSON** **VISHWALINGAM SURESHKUMAR**

**சந்தனம் ஜெக்சன்** **விஸ்வலிங்கம் சுரேஸ்குமார்**

மறைவு

16
.
12
.
2013





மறைவு

16
.
12
.
2013

மெல்பேர்ணைச் சேர்ந்த விஸ்வலிங்கம் சுரேஸ்குமார் சந்தனம் ஜெக்சன் ஆகியோரின் இறுதிக்கிரியைகள் கடந்த டிசம்பர் மாதம் 30ம் திகதி சமயமுறைப்படி நடைபெற்றது. இவரது பிரிவால் துயருறும் இவர்களது குடும்பத்தினருடனும் நண்பர்களுடனும் நாங்களும் இணைந்துகொள்கின்றோம்.

– மெல்பேர்ண் நண்பர்கள்

# Sunday 26 January 2014
## from 8:00am to 7:00pm

# Sydney Tamils Celebrate Australia Day
# தமிழர் ஒன்றுகூடல்

தமிழர் நாம் ஒன்றுகூடி, குழந்தைகள் முதல் முதியவர்வரை எமது பாரம்பரிய விளையாட்டுகளுடன் வேறு பல விளையாட்டுகளையும் விளையாடி, பல்சுவை உணவுகளையும் உண்டு மகிழ்ந்திடுவோம் வாரீர்!!

**COME AND ENJOY AT BINALONG PARK, TOONGABBIE**

- **COL. KITTU MEMORIAL CRICKET MATCH**
  Open & Over 40's Cricket - Contact 0469 089 883
- **OZTAG** Contact and Registration 0469 089 883
- **GAMES & ACTIVITIES FOR KIDS** Age groups under 6,9,12,15
  For more information and registration please contact: 0432 868 868
- **TRADITIONAL GAMES OF TAMILS AND FUN GAMES FOR ADULTS**
  Killithattu, Tug of war, Mutti udaithal, Pillow fight, 3 legged race... etc for adults

ENJOY VARIETY OF DELICIOUS TAMIL FOOD ALL DAY

For more information and Team registration please contact: 0469 089 883

# கேசி தமிழ் மன்றத்தின்
## (Casey Tamil Manram)
## தைப் பொங்கல் விழா - 2014



இடம்: **Balla Balla Community Centre**
**65, Berwick-Cranbourne Road. Cranbourne East**
**(Next to the Cranbourne Library) Mel Ref: 134 B6.**

காலம்: ஜனவரி மாதம் 25ம் திகதி **சனிக்கிழமை,** முற்பகல் 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை.

இந்நிகழ்வில் தமிழர் கலாச்சாரப்படி முறைப்படி பொங்கல் பொங்கி புத்தாண்டை வரவேற்பதுடன், பொங்கலைத் தொடர்ந்து பிற்பகல் 3 மணி வரைக்கும், தமிழர் எம் கலைச் செழிப்பை வெளிக்காட்டும் இனிய பல கலை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. உங்கள் அனைவரையும், எம் தமிழ் கலாச்சார ஆடைகளை அணிந்து வந்து, இக்கொண்டாட்டத்தில் இணைந்து சிறப்பித்து பொங்கலையும், கலை நிகழ்வுகளையும் கண்டுகளித்து செல்லுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

கேசி தமிழ் மன்றத்தினர்

**www.CaseyTamilManram.org.au**
**info@CaseyTamilManram.org.au**

## துயர் பகிர்வு

### திருமதி பரமேஸ்வரி சோமசுந்தரம்



தோற்றம் 25/11/1936 மறைவு 09/11/2013

சிரம்பான் மலேசியாவைப் பிறப்பிடமாகவும்,சிங்கப்பூர் மற்றும் மெல்பேர்னை வதிவிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி பரமேஸ்வரி சோமசுந்தரம் நவம்பர் மாதம் 9ம் திகதி இறைவனடி சேர்ந்தார். அன்னார் அனலைதீவைச் சேர்ந்த காலஞ்சென்ற ஐயம்பெருமாள் – நாகம்மா மற்றும் வேலுப்பிள்ளை நாகமுத்தா தம்பதிகளின் பேத்தியும்,அனலைதீவை பிறப்பிடமாகவும்,சிங்கப்பூரை வதிவிடமாகவும் கொண்டகாலஞ் சென்ற கணபதிப்பிள்ளை நாகரத்தினம் தம்பதியின் சிரேஷ்ட புதல்வியும்,சிங்கப்பூரைச் சேர்ந்த காலம் சென்ற திரு.திருமதி சபாபதியின் மருமகளுமாவர். அன்னார் திரு சபாபதி சோமசுந்தரத்தின் அன்பும னைவியும்,சிவசிந்தாமணி,குமரகுருபரன்,மீனாசுந்தரீஸ்வரி ஆகியோரின் அருமைத் தாயாரும்,கீதா, ஷாமினி,கிருஷ்ணகுமார்,ஆகியோரின் பாசமிகு மாமியாரும்,பிரிதாஷினி, அஷ்வினி,ப்ரணாவ்,திரி சுலா,அவனிஷ், ஸ்ரீனிகா,சித்தார்த்குமார் மற்றும் சிவகுமாரின் ஆசைப் பாட்டியும் ஆவார். சிவஞானம் (மெல்பேர்ன்),காலஞ்சென்ற விஜயலட்சுமி,நிர்மலன் (NiruPillay –Singapore) சண்முகரத்தினம் (Shan Pillay – Melbourne)ஆகியோரின் அன்புச் சகோதரியும்,மஹாலட்சுமி,ல்கிம்போ, ஜலஜா மற்றும் பரமேஷ்வரியின் இனிய மைத்துனியுமாவார். மேலும் லலிதா,கீதா,காயத்திரி,பிரியா – கலைகிஸ்,வித்யா கிருஷ்ணா,மிரிதுலா, காலஞ்சென்ற மாரிநாகமணி,கணேஷ் ஆகியோரின் அன்புமாமியும், அர்ஜீனின் ஆசைப் பாட்டியுமாவார்.

அன்னாரின் ஈமைச்சடங்குகள் கடந்தநவம்பர் மாதம் 13ம் திகதி Melbourne Doncaster East இல் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று,பூதவுடல் Bunurong Memorial Park மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இத்தகவலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படிஅன்புடன் வேண்டிக்கொள்ளுகின்றோம்.

அதேவேளையில் அன்னாரின் பிரிவுத்துயரத்தின்போது,எம் சோகத்தை பகிர்ந்து,எமக்கு ஆறுதல் கூறியோருக்கும்,இறுதிக்கிரியைகளின் போது எமக்கு பலவழிகளில் உதவிகள் புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டு, அன்னாரின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

தகவல்: அன்னாரின் பிரிவால் வாடும் பிள்ளைகள்,மருமக்கள், பேரப்பிள்ளைக

தொடர்புகளுக்கு:Kuru Somasundram-03-8419362
Somasundram Sabapathy: -98428872

நன்றி

# அவுஸ்ரேலியா வரும் ஈழ அகதிகள் தொடர்பாக திரு பாலா.விக்கியுடன்

# ஒரு நேர்காணல்

வணக்கம் திரு பாலா விக்கினேஸ்வரன் அவர்களே! தஞ்ச கோரிக்கையாளர்கள் தொடர்பான விடயங்களில் நீண்ட கால அனுபவமும் அவதானிப்பும் செயற்பாட்டாளராகவும் இருந்து வருபவர் என்ற அடிப்படையில் இங்கு வருகிற தஞ்ச கோரிக்கையாளர்களை மாறி மாறி வந்த அரசாங்கங்கள் எப்படி புரிந்து கொள்கின்றன ?

*வணக்கம், இது நீண்ட ஒரு சிக்கலான கேள்வியும் கூட, தொழில்கட்சி அரசாங்கம் என்று பார்க்கும் போது அவர்களுக்குள்ளும் நிறைய கொள்கை முரண்பாடுகள் இருந்தன என்பதுதான் உண்மை. ஜோன் ஹாவர்டுக்கு பின் வந்த கெவின் ரட் அரசாங்கம் பல மாற்றங்களை கொண்டு வந்தது. அவுஸ்திரேலிய கடல் எல்லைக்கு வெளியே உள்ள இடங்களுக்கு வந்து சேருபவர்கள் முழுமையாக அங்கேயே தடுப்புக்காவலில் வைத்திருக்கவோ மூன்றாவது நாட்டுக்கு அனுப்பவோ கூடாது. சரியான முறையில் விசாரணை செய்து அவர்களை உள்ளே அனுமதிக்க வேண்டும் என்று தீர்மானம் கொண்டு வந்தது. புகலிட கோரிக்கையாளர்களுக்கு திருப்தி அளிக்க கூடிய ஒன்றாக அது இருந்தது.*

*அளவுக்கதிகமான அகதிகளின் வருகை எதிர்கட்சியின் தேர்தல் பிரசார ஆயுதமாக பயன்படுத்தபட்ட சூழலில் ஜுலிய கில்லார்ட் அரசாங்கம் கொஞ்சம் கடுமையாக நடந்துகொண்டது. குடிவரவு திணைக்களத்தின் தடுப்புக்காவல் முகாம்களில் பணி செய்த மூத்த அதிகாரி இப்படி சொன்னார் 'கிழமைக்கு 200 பேர் வரை திருப்பி அனுப்பி அச்சத்தை ஏற்படுத்துவதன் ஊடாக படகுகளின் வரவுகளை தடுப்பதற்கு தலைமைப்பீடம் தீர்மானித்தது' என்று சொன்னார். தலைமைப்பீடம் என்பது இங்கு பிரதமர் அலுவலகத்தைதான் அவர் சொல்லி இருந்தார்.*

*தற்போதைய அரசாங்கம் சொன்னதை செய்கிறது. அதே நேரம் கெவின் ரட்டின் அரசாங்கம் ஏற்கனவே படகின் மூலம் வருபவர்களை உள்ளே எடுப்பதில்லை என்று முடிவெடுத்து விட்டது. அதன் தொடர்ச்சியாக இந்த அரசாங்கம் கடுமை தன்மையை பிரயோகித்து வருகிறது.*

*புரிந்துகொள்ளல்என்னும்போது இது ஒரு தேர்தலுடன்தொடர்புபட்டதாகவும் அமைவதால் அவர்கள் கடுமை காட்டவேண்டியுமுள்ளார்கள், ஆனாலும் பழைய அரசாங்கம் மனிதாபிமான நோக்கோடு அகதிகளை பார்த்தார்கள். பின்னர் அதிகரித்த தொகையினர் வந்த போது ஒரு தொல்லை தரும் விடயமாக இதனை பார்க்க தொடங்கினார்கள், அதே நேரம் இங்கு வந்த சிலர் அகதி அந்தஸ்து பெறுவதற்கான எந்த தகுதியும் இல்லாது இருந்தமையானது தங்களது கருணை தவறாக பயன்படுத்தப்படுகிறதா என்பதை அவர்கள் உணர்ந்ததை அவதானிக்க முடிந்தது.*

அண்மையில் அதிகம் பேசப்பட்ட விவாதிக்கப்பட்ட ஒரு விடயம் தற்காலிக பாதுகாப்பு விசா இது தொடர்பாக சுருக்கமாக விளக்கி கூற முடியுமா ?


*1997, 1998 களில் இது முதல் முறையாக நடைமுறைக்கு வந்தது. மூன்று வருடம் என்பது உச்சம் 1 அல்லது 2 வருடங்களும் கொடுக்கலாம். இது நிபந்தனைகளுக்கு உட்பட்ட ஒன்று. அதாவது குடுபங்களை அழைக்க முடியாது என்று நிபந்தனை வைத்து 1100 பேருக்கு கொடுத்தனர். ஆனாலும் அதில் பெருமளவிலானோர் நிரந்தர விசா பெற்றுகொண்டனர். கெவின் ரட் வந்தவுடன் தற்காலிக விசாவை மாற்றினார். தற்போதுள்ள அரசாங்கம் தங்கள் தேர்தல் வாக்குறுதியின் அடிப்படையில் அதனை கொண்டுவர முயற்சிக்கிறது. ஆனால் செனட் சபையில் இவர்களுக்கு பெருபான்மை இல்லை. நடப்பு செனட் வரும் ஜூலை வரை இருக்கும் என்பதால் கடந்த டிசம்பர் முதல் வார பகுதியில் தற்காலிக விசாவை கொண்டுவருவதற்கான முயற்சிகள் தோற்கடிக்கப்பட்டன.*

*தோற்க்கடிகப்பட்ட்டவுடன் குடிவரவு அமைச்சர் பழைய அரசாங்கம் அறிவித்த 1600 பேருக்கு என்ற அடிப்படையில் நிரந்தர விசா மட்டுப்படுத்துகிறோம் என்றார். பின்னர் டிசம்பர் மூன்றாவது வாரத்தில் 1600 என்ற மட்டுப்படுத்தலை எடுப்பதாக அறிவித்ததோடு கிறிஸ்மசுக்கு முதல் ஒரு நடைமுறையை கொண்டுவந்தார். நிரந்தரவிசா கொடுப்பதற்கு கையில் எதோ ஒரு விசா வைத்திருக்க வேண்டும். விசா இல்லாதவர்களுக்கு பி ஆர் கொடுக்க முடியாது. அப்படி செய்ய காரணம் படகில் வந்தவர்களிடம் விசா இல்லை ஆக அவர்களை இலக்கு வைத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதே நேரம் மீண்டும் ஜூலையில் Tpv கொண்டுவருவதாக கூறி இருக்கிறார்*

*தற்காலிகவிசாவை பொறுத்த வரையில் வேலை செய்வதற்கான வாய்ப்பை வழங்குகிறது. மூன்று வருடம் முடிந்த பிற்பாடு திரும்பவும் ஒருவர் தஞ்ச கோரிக்கைக்காக விண்ணப்பிக்க வேண்டும். அடிப்படையில் Tpv ஒரு நல்ல விடயம் அல்ல என்றே பார்க்கப்படுகிறது .*

நடத்தை குறியீடு தொடர்பாக அண்மையில் குடிவரவு அமைச்சர் கூறி இருந்தார் அது தொடர்பாக ?

*இது முழுமையான சட்ட பின்னணி கொண்டதல்ல நடத்தை சம்பந்தப்பட்டது. சமூகத்தில் விடப்படும் ஒருவர் தனது முகவரி , தொலைபேசி இலக்கங்களை தொடர்புடைய அதிகாரிகளுக்கு கொடுக்க வேண்டும், அவற்றை மாற்றும் போது அறிவிக்க வேண்டும். இந்த நாட்டுக்குரிய விதி முறைகளை கடைப்பிடிக்க வேண்டும். பிரயாண சீட்டுக்களை எடுத்தே பிரயாணம் செய்ய வேண்டும் , வாகனம் ஓட்டுதல் தொடர்பாக மிக அவதானமாக இருக்கவேண்டும். இவை தொடர்பாகவே இதில் சொல்லப்பட்டு இருக்கிறது.*



ப்ரிட்ஜிங் விசா முடிந்த பலர் இன்று இங்கே இருக்கின்றனர் இவர்களுடைய உரிமை பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக கூறுங்களேன் ?

*விசா முடிந்தவர்களை அரசாங்கம் ஒரு போதும் திடீர் என்று நாடு கடத்தாது. விசா முடிந்தவர்கள் தாங்கள் என்ன செய்கிறார்கள் என்பதை தங்களுடைய நண்பர்களுக்காவது சொல்லி கொள்ள வேண்டும். ஏதோ ஒரு காரணத்துக்காக குடிவரவு திணைக்களத்துக்கு செல்லும்போது உங்களை நாடு கடத்த முற்பட்டால் யாருக்கும் தெரியாமல் போய்விடும் அந்த அடிப்படையில் அங்கு செல்லும்போது வேறு செயற்பாடுகள் செய்யும்போதும் ஒருவருக்கு தெரியப்படுத்தி வைப்பது நல்லது. அப்போதுதான் திடீர் நிலைமைகளில் சட்ட உதவி செய்யமுடியும். அரசாங்கம் பிழை விடும் என்று நினைக்கவில்லை ஆனால் பாதுகாப்பாக இருக்க வேண்டும் தானே.*

அரசாங்கத்தின் இது தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கை எப்படி அமையும் என்று எதிர் பார்க்கிறீர்கள்?

*முப்பத்து மூவாயிரம் பேர் ப்ரிட்ஜிங் விசாவில் இருக்கிறார்கள். ஆனால் தஞ்ச கோரிக்கையாளர்களை முகாமை செய்வதற்கான சரியான திட்டம் இவர்களிடம் இல்லை. அடுத்த ஜூலை வரை இச்செயற்பாடுகள் இழுக்கப்படும் போலதான் தோன்றுகிறது.*

இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டவர்களின் நிலை தொடர்ப்பாக அறியக்கிடத்திருகிறதா ?

*பல நூறு தமிழர்கள் இதுவரையில் அனுப்பட்டிருக்கிறார்கள். நாங்கள் அவர்களை பல வழிகளிலும் தொடர்பு கொண்டிருக்கிறோம் பலருக்கு பிரச்சனைகள் நடந்துள்ளன. சிலர் இன்றும் பாதுகாப்புக்காக வேறு வீடுகளில் இரவை கழிக்கின்றனர். சிலர் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. அண்மையில் அவுஸ்திரேலியாவில் இருந்து சென்ற இளைஞன் முதுகில் சூடு வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு இருந்தான், ஆனால் அவற்றை எல்லாம் அரசாங்கம் கவனத்தில் எடுப்பதாக தெரியவில்லை.*

தற்போது சமுகத்தில் வாழுகிற தஞ்சகோரிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் பணம் வாழ்க்கை செலவுக்கு போதுமானதா?

*இப்போது கொடுக்கப்படும் காசு சென்ரலிங் பணத்தின் 60 விழுக்காடுதான். ஆகவே அது போதாதுதான். போக்குவரத்து, சுகாதார செலவுகள் வாடகை என்று அவை போதுமானதல்ல இது தொடர்பாக அரசாங்கத்துடன் பேசி இருக்கிறோம் . அவர்களை வேலைக்கு செல்ல அனுமதிக்கும்படி ஓம் என்று சொல்லி இருகிறார்கள் ஆனால் இதுவரையில் நடைமுறையில் எதையும் காணவில்லை. அரசங்கம் 33000 பேரை தாங்கிக்கொண்டு இருக்கிறது அவர்களுக்கும் நிதி தொடர்பான பிரச்சனைகள் இருந்துகொண்டுதான் இருக்கிறது .*

விசா நிராகரிக்கப்படும்போது ஒருவர் அடுத்த கட்டமாக என்ன செய்ய வேண்டும்?


*ஒருவர் தனது உண்மையான விடயங்களை முதலாவது விசாரணையிலோ அல்லது ஆர்ஆர்ரியிலோ மிகவும் நேர்த்தியாக சொல்லவேண்டும். ஆர்ஆர்ரியில் தோற்று போனால் சட்ட மறு பரிசீலனைக்கு போகலாம். அதிலும் அவர் அகதியாக இருக்கிறாரா இல்லையா என்று பார்ப்பதில்லை. மாறாக இவர் சொன்ன விடயங்களை பரிசீலனையாளர்கள் சரியாக பார்த்தார்களா இல்லையா என்றுதான் பார்க்கிறார்கள். நாம் நீதிமன்றுக்கு சட்டவாளர், குடிவரவு முகவர் ஊடாக அல்லது தனிப்பட்ட ரீதியில் தாமாகவே விண்ணப்பம் செய்ய முடியும். அதே நேரம் தமது விடயம் தொடர்பாக அதனோடு தொடர்பு பட்ட சமூக செயற்பட்டாளர்களிடம் ஆலோசனை பெற்று வைத்திருப்பது மிகவும் நல்லது.*

இப்போதும் இலங்கையில் பிரச்சனை நிலவிவரும் நிலையில் இங்குவர எத்தனிப்பவர்களுக்கு நீங்கள் சொல்லும் அறிவுரை என்ன?


*அவுஸ்திரேலியாவை பொறுத்தவரையில் தமிழர் என்கிற பொது அடையாள அடிப்படையில் இங்கு அகதி அந்தஸ்து அளிக்கப்படமாட்டது. தனி ஒருவர் தான் அந்த நாட்டில் மொழி இன அரசியல் அடிப்படையில் பாதிக்கபடுவேன் என்று ஒரு நிரூபிக்கத்தக்க அச்சம் உறுதிப்படுத்தினால் அவருக்கான விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு கோரிக்கை ஏற்கப்படும். அவுஸ்திரேலியாவை பொருத்தவரையில் இலங்கை ஒரு நட்பு நாடு. அங்குள்ள பிரச்சனைகளை பரவலான பிரச்சினையாக அது எதிர்கொள்ளவில்லை என்பதுதான் இங்குள்ள நிலவரம்.*

குறிப்பு - திரு பாலா விக்கினேஸ்வரன் - அவுஸ்திரேலிய தமிழர் பேரவையின் அகதிகள் தொடர்பான விடயங்களுக்கான செயற்பாட்டாளராக உள்ளார்.

## கருத்துப்படம்




இறுதிப்போரில் இறந்தவர்களையே நினைவு கூரக்கூடாதாம் நடந்தவைகளை மறக்கச்சொல்லி சொன்னவையெல்லோ ...



இது வன்னி பாடசாலையின் வடக்கின் வசந்தம்........ எதையும் தாங்கும் இதயங்கள்.

# பேய்[க்] காட்டும் வில்லா

16ம் பக்க தொடர்ச்சி

வந்த படங்களென்று பார்த்தால், பீசா, நடுவில கொஞ்சம் பக்கத்தை காணோம்,சூதுகவ்வும், மூடர்கூடம், விடியுமுன் என்று எனக்குப் பிடித்த வகையில் நிறையப் படங்கள் வெளிவந்துள்ளன. ஒவ்வொரு படமுமே தமிழ்ச்சினிமா குறித்து எனக்கிருக்கும் உருவகத்தை விட்டு வெளியேதான் பொருந்துகின்றன. அவ்வகையில் அண்மையில் வெளிவந்த 'வில்லா' திரைப்படமும் அமைகின்றது.

வில்லாவைப் பார்க்க வேண்டுமென்று என்னைத் தூண்டியது, அது 'பீசா 2' என்று விளம்பரப்படுத்தப்பட்டதுதான். முதலில் பீசா திரைப்படத்தைப்பற்றி நான் கேள்விப்பட்டது மெல்பேணில் நிகழ்ந்த ஒரு தமிழ்ப்பட்டிமன்ற நிகழ்ச்சியில். ஆணொருவனும் பெண்ணொருத்தியும் திருமணம் செய்யாமல் சேர்ந்து வாழும் கலாச்சாரத்தை பீசா திரைப்படம் ஊக்குவிக்கிக்கின்றது என்று அத்திரைப்படத்தின்மீது ஒரு விமர்சனம் சொல்லப்பட்ட அந்நிகழ்வில் எனக்கு பீசா திரைப்படம் மீதான ஆர்வம் பற்றிக் கொண்டது. இப்போது வில்லா திரைப்படம் பீசா 2 என்ற அடைமொழியோடு வெளிவந்ததால் கட்டாயம் பார்த்தே ஆகவேண்டுமென்ற எனது பட்டியலில் வில்லா சேர்ந்து கொண்டது. அவ்வகையில் பீசாவை முன்னொட்டாக வைத்த தயாரிப்பாளரின் எண்ணம் வெற்றியடைந்துள்ளதென்றே சொல்ல வேண்டும்.

ஒரு திரைப்படம் வெற்றியடைந்தால் அதை மையமாக வைத்து அதன் தொடர்ச்சிகள், சிலவேளை முதற்படத்திற்கான முன்கதையேகூட அடுத்தடுத்து வெளியிடுவார்கள். இது அமெரிக்கத் திரைப்பட உலகத்திற்கூட இயல்பேதான். வெற்றியடைந்த அந்த பெயரைப்பயன்படுத்தி தொடர்ந்தும் வியாபாரம் செய்யும் தந்திரம். இங்கே வில்லாவிலும் அத்தந்திரம்தான் பயன்படுத்தப்பட்டுள்ளது. பீசாவுக்கும் வில்லாவுக்குமுள்ள தொடர்பு இவற்றின் தயாரிப்பாளர் ஒருவரே என்பதுதான்.




மற்றுமொரு தொடர்பு இரண்டுமே திகிலான பேய்ப்படம் என்ற வகைக்குள் அடங்குவன என்பது.

படத்தில் நன்கு அறிந்த முகமென்றால் அது நாசரின் பாத்திரம் மட்டும்தான். அண்மையில் வெளிவந்த 'சுட்ட கதை' என்ற படத்திலும் தெரிந்த ஒரே முகமாக நாசரேதான் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. நாயகன் அசோக் செல்வன் தாடியுடன்தான் படம்முழுவதும் வருகிறார். எழுத்தாளர் என்பதால் ஏற்கனவே தமிழ்ச்சமூக மனத்திரையில் உருவகப்படுத்தப்பட்டிருக்கும் உடையும் தாடியும் அவருக்கும் பொருத்தப்பட்டுள்ளது போலும். இதற்கு முன்பு 'சூது கவ்வும்' திரைப்படத்தில் கணிப்பொறியியலாளனாக வேலைபார்த்துவிட்டு கடத்தல் தொழில் இறங்கும் துணைப்பாத்திரத்தில் நடித்திருக்கிறார்.

கதைப்படி, நாயகி சஞ்சிதா ஷெட்டியும் நாயகனும் காதலித்து வருகிறார்கள். தானெழுதிய நாவலை வெளியிட முடியாமல் தவிக்கிறார் நாயகன். கோமாவிலிருந்த நாயகனின் தந்தை நாசர் இறந்துபோய்விட அவரின் சொத்துக்கள் ஒவ்வொன்றும் பறிபோய்க்கொண்டிருக்கிற நிலையில் நாயகனின் பெயரிலேயே பாண்டிச்சேரியில் ஒரு வீட்டை நாசர் எழுதி வைத்திருப்பது தெரிந்து அங்கே போகிறார் நாயகன். அதுதான் 'வில்லா'. அங்கே தந்தை கீறி வைத்திருந்த ஓவியங்களின் அடிப்படையிலேயே எல்லா நிகழ்வுகளும் நிகழ்ந்துகொண்டிருப்பதைக் கண்டு அதிர்ந்து போகிறார். அந்தத் தீய சக்தியை வெல்ல விடாமற்செய்ய ஒரு தீர்க்கமான முடிவை எடுக்கிறார் நாயகன். தான் செய்யும் காரியத்தால் அந்த ஓவியங்களின் படி நடந்துவரும் அசம்பாவிதங்கள் நிறுத்தப்படுமென்று நம்பி அதைச் செய்கிறார். ஆனால் உண்மையில் அவர் நினைத்தது நடந்ததா? அல்லது நாயகன் செய்கிற காரியம்கூட அந்த ஓவிய ஒழுங்கிற்குள் உட்பட்டுத்தான் நடந்ததா என்பதை திகிலான இறுதிக்காட்சியோடு இயக்குநர் விளக்குகிறார்.

ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை என்ற கணக்காக, வழமையான தமிழ்ச்சினிமாவின் அசட்டுத்தனங்கள் இல்லாத காரணத்தாலேயே சுமாரான படங்கள்கூட சிலவேளை பிடித்துப் போவதுண்டு. வில்லா அவ்வகைதானா என்றால் இல்லையென்றுதான் தோன்றுகிறது. காட்சியமைப்புக்களும் பின்னணி இசையும் குறிப்பிட்டுப் பாராட்ட வேண்டிய அம்சங்கள். விறுவிறுப்பாக இருந்திருக்க வேண்டிய திரைக்கதை தொய்ந்து போவதாகத் தோன்றுகிறது. இறுதிக் காட்சியில் வரும் திருப்பத்தைத் தவிர்த்துப் பார்த்தால் கதையோட்டத்தில் இருந்திருக்க வேண்டிய திகில் படத்துக்குரிய திகிலும் உயிரோட்டமும் காணாமற்போயுள்ளது போன்றே தோன்றுகின்றது.

எனினும் தற்காலத் தமிழ்ச்சினிமாவில் கட்டாயம் கவனிக்கப்பட வேண்டியதும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியதுமான பட்டியலில் வில்லா நிச்சயமாக இடம்பெறும். வணிகக் காரணத்துக்காக பீசா படப்பெயர் பயன்படுத்தப்பட்டதும் இப்படம் மீதான மறைநிலை விமர்சனத்துக்கான காரணமாக அமைந்துள்ளது. பீசாவின் தரத்தோடு ஒப்பிட்டுப் பார்ப்பது தவிர்க்க முடியாததாகிவிட்டது. ஒட்டுமொத்தத் திரைப்படமாகப் பார்த்தால் பீசா தரத்தால் விஞ்சியே நிற்கின்றது. பீசாவின் இரண்டாம் பாகம் என்ற தொனியில் இப்படத்தை விளம்பரப்படுத்த தயாரிப்பாளர் ஆசைப்பட்டதில் பணத்தை வேண்டுமானால் அள்ளியிருக்கலாம். ஆனால் பேயைக் காட்டியதோ இல்லையோ பேய்க்காட்டிய படமாக இரசிகர்களால் கருதப்படலாம்.

-செந்தோழன்

# TAMIL RADIOs and TV in AUSTRALIA

| சேவை | Station | METRE/CHANNEL | BROADCASTING TIME | | CITY | ALSO THROUGH |
|---|---|---|---|---|---|---|
| | | | DAY | TIME | | |
| SBS தமிழ் வானொலி | SBS | FM 97.7 Sydney | SUNDAY | Differ to each city | All Cities | ATBC & Inpathamil Oli |
| தமிழ் முழக்கம் (Tamil Mullkam) | Radio 2000 | FM 98.5 | SATURDAY | 8.00-10.00 PM | Sydney | ATBC |
| முத்தமிழ் வானொலி (Muthamil Malai) | 2CCR | FM 90.5 | SUNDAY | 6.30-8.00 PM | Sydney | Inpaththamil Oli |
| இன்பமான இரவினிலே | SWR | FM 99.9 | FRIDAY | 10.00-12.00 AM | Sydney | ATBC |
| உதய கீதம் (Uthaya Keetham) | SWR | FM 99.9 | FRIDAY | 12.00-02.00 PM | Sydney | ATBC |
| இன்பத்தமிழ் ஒலி (Inpatamil Oli | Inpatamil | SPECIAL METRE | | 7 DAYS 24 Hours | 3 Cities | Also NZ thru Optus |
| AUS Tamil Broadcasting Co-op | ATVC | SPECIAL METRE | | 7 DAYS 24 Hours | 3 Cities | Also NZ thru Optus |
| தமிழ்க் குரல் (Tamil Kural) | 3CR | AM 855 | MONDAY | 6.30-8.00 PM | Melbourne | Inpaththamil Oli |
| நிதர்சனம் (Manifest) | 3CR | AM 855 | SATURDAY | 12.00-12.30 PM | Melbourne | Inpaththamil Oli |
| தமிழ் ஓசை (Tamil Osai) | 3ZZZ | FM 92.3 | THURSDAY | 8.00-9.00 PM | Melbourne | Inpaththamil Oli |
| சங்கநாதம் (Sanganatham) | Voice Of Dan | FM 97.1 | SUNDAY | 8.00-10.00 PM | Melbourne | ATBC |
| வானிசை (Vaanisai) | | FM 88.9 | FRIDAY | 6.00-8.00 PM | Melbourne | ATBC |
| வானமுதம் (Vaanamutham) | | FM 88.6 | TUESDAY | 6.00-8.00PM | Melbourne | Inpaththamil Oli |
| தமிழ் ஒலி (Tamil Oli) | 4EB | FM 98.1 | SUNDAY | 9.00-10.00 PM | Brisbane | |
| தமிழ் ஒலி (Tamil Oli) | 4EB | FM 98.1 | FRIDAY | 5.00-6.00 PM | Brisbane | |
| கன்பரா தமிழ் வானொலி | CMS | FM 91.1 | THURSDAY | 8.00-9.00 PM | Canberra | |
| கன்பரா தமிழ் வானொலி | CMS | FM 91.1 | SATURDAY | 11.00-12.00 Noon | Canberra | |
| கன்பரா தமிழ் வானொலி (இளைஞர்) | CMS | FM 91.1 | SUNDAY | 11.00-12.00 Noon | Canberra | |
| தமிழ் ஒலி (Tamil Oli) | 6EBA | FM 95.3 | MONDAY | 7.30-8.00 PM | Perth | |
| தமிழ்ச் சோலை (Tamil Solai) | 6EBA | FM 95.3 | FRIDAY | 10.30-12.00 PM | Perth | |
| தமிழ்ச் சங்க வானொலி | Top FM | FM 104.1 | SATURDAY | 8.00-9.00 PM | Darwin | |
| தமிழ்ச் சங்க வானொலி | Top FM | FM 104.1 | MONDAY | 7.00-8.00 PM | Darwin | |
| GTV | Optus Channal | SPECIAL CHANNEL | 7 DAYS | 24 Hours | All Cities | Also in NZ |

# சிறுவர் முரசு

## இனிய தமிழ்ப் பொங்கல்



தைத்திருநாள் இல்லமெல்லாம்
தளிர்த்திடும் தைப்பொங்கல்
இத்தனை நாள் காத்திருந்தோம்
இனிய தமிழ்ப்பொங்கல்
கூவி அழைத்திடும் சேவல்
குதித்தெழுவோம் குளிப்போம்
பூவெடுப்போம் புதிதணிவோம்
பொங்கலன்று நாங்கள்
கோலமிட்டு விளக்கேற்றிக்
கும்பிடுவாள் அம்மா
பாலெடுத்துப் பொங்கலுக்குப்
பானை வைப்பார் அப்பா
விரும்பிய மா வாழை பலா
விதவிதமாய்க் கனிகள்
கரும்பிளநீர் படைத்து மனம்
களித்திடுவோம் நாங்கள்
வெண்ணிறப்பால் பொங்கி வர
வெடி சுடுவோம் நாங்கள்
இன்னமுதப் பொங்கலுண்ண
இணைந்து நிற்போம் நாங்கள்

## கைவண்ணங்கள்



குட்டி, சிட்னி



கௌமிதா, சிட்னி



மைதிலி, சிட்னி

## முன்னேறி வா !



ஒரு விவசாயி தோண்டிய பாதி கிணறில் ''பசு'' ஒன்று தவறுதலாக விழுந்து விட்டது ...!

பசுவை வெளியில் எடுப்பதற்கு விவசாயி தனது நண்பர்களுடன் இணைந்து மேற்கொண்ட பல முயற்சிகள் தோல்வியில் முடிந்தன ..! இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தனர் ..?

அந்த பசுவை பாதி கிணறுக்குள் மண்ணை போட்டு மூடி விடுவதாக .. பசுவின் மீது மண்ணை போட்டனர். பசு சற்றும் பதட்டமின்றி தான் எப்படியும் மேலே வருவேன் என்ற நம்பிக்கையுடன் இருந்தது விவசாயிகள் மண்ணை அதன் மீது போட போட அது உடலை உதறி உதறி தன் காலுக்கு கீழ் சேர்த்து இறுதியில் தானாகவே வெளியே வந்தது ..

**நீதி: ''மற்றவர்கள் உன்னை ஒரு முடிவுக்கு கொண்டு வர சூழ்ச்சி செய்வதற்காக ஏளனம் நையாண்டி பழிசுமத்தல் சேறு பூசுதல் '' என்று பலவிடையத்தில் வருவர்**
**நீயோ அவற்றை அடித்தளமாக வைத்து முன்னேறிவா இந்த பசுவை போல்**

செல்வி

## ஆத்திசூடியை உலகறியச் செய்வோம்..!

1. அறம் செய விரும்பு
   Learn to love virtue.
2. ஆறுவது சினம்
   Control anger.
3. இயல்வது கரவேல்
   Don't forget Charity....
4. ஈவது விலக்கேல்
   Don't prevent philanthropy.
5. உடையது விளம்பேல்
   Don't betray confidence.
6. ஊக்கமது கைவிடேல்
   Don't forsake motivation.
7. எண் எழுத்து இகழேல்
   Don't despise learning.
8. ஏற்பது இகழ்ச்சி
   Don't freeload.
9. ஐயம் இட்டு உண்
   Feed the hungry and then feast.
10. ஒப்புரவு ஒழுகு
   Emulate the great.
11. ஓதுவது ஒழியேல்
   Discern the good and learn.
12. ஔவியம் பேசேல்
   Speak no envy.
13. அகம் சுருக்கேல்
   Don't shortchange.
14. கண்டொன்று சொல்லேல்
   Don't flip-flop.
15. நப் போல் வளை
   Bend to befriend.
16. சனி நீராடு
   Shower regularly.
17. நயம்பட உரை
   Sweeten your speech.
18. இடம்பட வீடு எடேல்
   Judiciously space your home.
19. இணக்கம் அறிந்து இணங்கு
   Befriend the best.
20. தந்தை தாய்ப் பேண்
   Protect your parents.
21. நன்றி மறவேல்
   Don't forget gratitude.
22. பருவத்தே பயிர் செய்
   Husbandry has its season.
23. மண் பறித்து உண்ணேல்
   Don't land-grab.
24. இயல்பு அலாதன செய்யேல்
   Desist demeaning deeds.
25. அரவம் ஆட்டேல்
   Don't play with snakes.
26. இலவம் பஞ்சில் துயில்
   Cotton bed better for comfort.
27. வஞ்சகம் பேசேல்
   Don't sugar-coat words.

27. வஞ்சகம் பேசேல்
   Don't sugar-coat words.

28. அழகு அலாதன செய்யேல்
   Detest the disorderly.
29. இளமையில் கல்
   Learn when young.
30. அரனை மறவேல்
   Cherish charity.
31. அனந்தல் ஆடேல்
   Over sleeping is obnoxious.
32. கடிவது மற
   Constant anger is corrosive.
33. காப்பது விரதம்
   Saving livessuperior to fasting.
34. கிழமைப்பட வாழ்
   Make wealth beneficial.
35. கீழ்மை அகற்று
   Distance from the wicked.
36. குணமது கைவிடேல்
   Keep all that are useful.
37. கூடிப் பிரியேல்
   Don't forsake friends.
38. கெடுப்பது ஒழி
   Abandon animosity.
39. கேள்வி முயல்
   Learn from the learned.
40. கைவினை கரவேல்
   Don't hide knowledge.
41. கொள்ளை விரும்பேல்
   Don't swindle.
42. கோதாட்டு ஒழி
   Ban all illegal games.
43. கௌவை அகற்று
   Don't vilify.

தொடரும்..........

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் –ஒஸ்ரேலியா
Tamils Rehabilitation Organisation - Australia
P O Box 4254, Knox City, Victoria 3152, Australia
Phone / Fax: + 61 3 9888 3899
Australian Council For International Development

## ஒஸ்ரேலிய தமிழர்புனர்வாழ்வுக் கழகத்தின் அறிவித்தல்

ஒஸ்ரேலியா தமிழர் புனர்வாழ்வுக் கழகம், தனது அபிமானிகள், ஆதரவாளகள் அனைவருக்கும் புத்தாண்டு, பொங்கல் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்ளுகின்ற இத்தருணத்தில், எம் தாயகத்தில் அல்லற்படும் எமது தமிழ் உறவுகளின் நல்வாழ்வுக்காக கடந்த Dec மாதம் 25ம் திகதி நத்தார் தினத்தில், விக்ரோரிய ஈழத்தமிழ்சங்கத்தின் 3CR தமிழ்க்குரல் வானொலியூடாகவும், 24 மணிநேர இன்பத்தமிழ்ஒலி வானொலியூடாகவும் 21வது ஆண்டாக நடைபெற்ற நத்தார் ரேடியோ தோன் நிதிசேகரிப்பு நிகழ்ச்சியின்போது ஆதரவளித்த அன்பு தமிழ் நெஞ்சங்களிற்கும், இவ் உன்னதப்பணியில் பங்குகொண்ட தமிழ் சமூக வானொலி சேவைகள், தமிழ்குரல், இன்பத்தமிழ் ஒலி, தமிழ் ஓசை, வானமுதம், வானிசை, நிதர்சனம் மற்றும் ஈழமுரசுப் பத்திரிகை, பங்கெடுத்த அறிவிப்பாளர்கள், தொண்டர்கள், சகோதர தமிழ் அமைப்புகளிற்கும், ஆதரவளித்த அனைத்து தமிழ் ஊடகங்களுக்கும் தமது மனப்பூர்வமான நன்றிகளை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினர் தெரிவித்துக் கொள்கின்றனர்.

இவ் ரேடியோதொன் நிதிசேகரிப்பு நிகழ்ச்சியில் நன்கொடைகள் தருவதாக உறுதியளித்தவர்கள், மேலும் விடுமுறையில் சென்றிருந்த அன்பர்கள், மற்றும் நிதிசேகரிப்பு நிகழ்ச்சியில் பங்குபெற தவறியிருந்த அன்பர்கள் உங்கள் பங்களிப்புக்களை காசோலை, காசுக்கட்டளை Credit card மூலம் செலுத்தவிருப்பின் உங்கள் காசோலைகளில் TRO Australia என எழுதி பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். TRO, P.O.Box 4254, Knoxcity 3152. அல்லது பணமாக அல்லது Fax மூலம் செலுத்தவிரும்பின் (03) 9888 3899 என்ற தொலைபேசி இலக்கத்தில் TRO காரியாலயத்தை தொடர்பு கொண்டோ உங்கள் பங்களிப்புகளை விரைவில் வழங்கும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

நீங்கள் தரும் ஒவ்வொரு நிதியுதவியும் ஈழத்தின், வட-கிழக்கு மாகாணத்தில் மிகமோசமாக மன அழுத்தத்தினால் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படும் எங்கள் எதிர்கால சந்ததியினர், பெண்கள், வயோதிபர்களின் அவலத்தைப் போக்கவும், அவர்களின் உடனடித்தேவைகளைப் பூர்த்திசெய்து அந்த தமிழ் உறவுகளின் வளமான வாழ்வுக்கு வழிசமைக்கும் நோக்கோடு **TRO Australia** வினால் தாயகத்திலுள்ள உள்ளூர் அரச சார்பற்ற சமூகத் தொண்டு அமைப்புக்களின் உதவியுடன் நடைபெறும் "சிறுவர் நலன்காப்பு நிதியத் திட்டத்திற்கு" பயன்படுத்தப்படும்.

**Yes! I want to support**
**TRO Australia's X'mas Radiothon**

Dr, Mr, Mrs, Ms ……………………………………………………
…………………………………………………………

Address ……………………………………………………
……………………………………………………………
………………………………………………………………………
…………………. Postcode …………………………………..

Phone No: Work ………………………………………….. Home
……………………………………………………………..

Please find enclosed: Cash ☐ Cheque ☐ Money order ☐

Payable to the Tamils Rehabilitation Organisation Aust. for the amount of $25 , $50 , $100 , $.........other

OR, Please Debit my MasterCard ☐ , Visa card ☐

Expires: _____ / _____ ☐☐☐☐ ☐☐☐☐ ☐☐☐☐ ☐☐☐☐

Name on Card: Signature :-...............................

## ஒன்றிணைவோம் சேவைசெய்வோம்

இலங்கை வட–கிழக்கில் யுத்தம் நடந்து முடிந்த பிரதேசங்களிலுள்ள விதவைகளும், பெற்றோரை இழந்த சிறுவர்களும், மற்றும் மீள் குடியேற்றப்பட்டிருப்பதாகக் கூறப்படும் உடலும் உள்ளமும் பாதிப்புற்றிருக்கும் ஏராளமான மக்களும் சொல்லொணாத் துயரத்தையும் கஷ்டங்களையும் தினமும் அனுபவித்து வருகிறார்கள் என்பது யாவருமறிந்த விடயமே. ஒஸ்ரேலியா தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அங்கு தாய்நாட்டிலிருக்கும் தற்போதைய நிலைமைக்கேற்ற தேவைகளுக்கும் சவாலுக்கும் தகுந்தவாறு தனது திட்டங்களை ஒழுங்குபடுத்திக் கொண்டதுடன், பாதிப்புற்றோருக்கான தேவைகளை இனங்கண்டு, அவர்களுக்கு பொருள் ரீதியானதும் உளநல ரீதியானதுமான உதவிகளைச் செய்துகொண்டிருக்கின்றது.

கடந்த ஆண்டுகளைப்போலவே இவ்வாண்டும் (ஒஸ்ரேலியா) த.பு.கழகம் தனது பணியினை சிறப்புடன் ஆற்றுவதற்கு தங்கள் ஒவ்வொருவரினதும் ஒத்துழைப்பினை வேண்டிநிற்கின்றது. இலங்கை வட–கிழக்கில் மீள்குடியேறியிருப்போர் பற்றிய விழிப்புணர்ச்சியை இந்நாட்டில் அதிகரிப்பதுடன், அவர்களுக்கு தேவையான உதவிகளை ஏற்படுத்திக் கொடுக்க வழிவகைகள் செய்தலுமாகும்.

அவ்வாறான உதவிகளை எமது கழகம் வட–கிழக்கிலுள்ள மனிதாபிமானமும் உயர்வான அர்ப்பணிப்பு உணர்வுடன் இயங்கிவரும் சில சமூக நலன்சார் நிறுவனங்கள் மூலம் ஆற்றிவருகின்றது. சிறுவர் நலக்காப்பு நிதியத்தினால்

நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் அடிப்படைக்கல்வி ஆகியன அவசியப்படும் சிறுவர்களைக் கொண்ட பராமரிப்பு நிறுவனங்களுக்கும், குழுக்களுக்கும் தேவையான நிதி உதவியை வழங்க எமது கழகம் ஏற்பாடுகளை செய்து வைத்துள்ளது.

இத்துடன் ஒஸ்ரேலியா தமிழர் புனர்வாழ்வுக்கழகம் கீழ்வரும் மனிதாபிமான சேவைகளுக்கும் உதவிகளை வழங்கி வருகின்றது.

1. வாழ்வாதார உள்ளீடுகள்
2. முன்–பள்ளிச் சிறார்களுக்கு போஷாக்கு உணவு விநியோகத் திட்டம்
3. ஆரம்பச் சிறுவர்பராய அபிவிருத்தித் திட்டங்கள்
4. மீள் குடியேறியுள்ள பெண்களுக்கு அதிகாரமளிப்புத் திட்டங்கள்
5. உளநிலை–சமூக நலன்புரி அபிவிருத்தித் திட்டங்கள்
6. சனசமூக நலன்புரி உதவித் திட்டங்கள்
7. க.பொ.த. சா./த. மற்றும் உ./த. மாணவர்களுக்கு கல்விசார் மேம்படுத்தல் வகுப்புக்கள்
8. வர்த்தகப் பயிற்சிச் செயலமர்வுகள், பட்டறைகள், அத்துடன்
9. பிள்ளைகளுடனான வறிய குடும்பங்களுக்கு சூரிய சக்தியிலான விளக்குகளின் ஏற்பாடு
10. பருவகாலப் பயிர்செய்தல், கோழி, கால்நடை வளர்ப்பு முதலியவற்றுக்கு உதவியளித்தல்.

மேற்படி திட்டங்களுக்கு 2013இல் இதுவரை மொத்தமாக $111,520 செலவழிக்கப்பட்டுள்ளது.

உதவிக்கரம் நீட்டும் பல அரசசார்பற்ற நிறுவனங்களுடன் நீண்ட காலமாக எமக்குள்ள தொடர்பு காரணமாக அவர்களுக்கு யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் பற்றியும் இலங்கை வட–கிழக்கில் குடியேற்றப்பட்டிருப்போரின் அவல அனுபவங்கள் பற்றியும் எமது கழகம் எடுத்துரைத்து விழிப்புணர்வை ஏற்படுத்தியிருக்கின்றது. அந்த வகையில், அவர்கள் மூலமாக தொடர்ந்தும் பாதிப்புற்றோருக்கான மனிதாபமான சேவையை அளிப்பதற்கு எமது தமிழர் புனர்வாழ்வுக் கழகம் (ஒஸ்ரேலியா) முயற்சிக்கும் என்பது உறுதி.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் (ஒஸ்ரேலியா) ஆற்றிவரும் மனிதாப சேவைகளுக்கு தொடர்ந்தும் உறுதுணையாக நின்று உதவிக்கரம் நீட்டிவரும் அன்புள்ளங்களுக்கு சிரம்தாழ்த்தி நன்றிசொல்லக் கடமைப்பட்டுள்ளோம்.

கடந்தாண்டு 2013ல் நடத்தப்பட்ட ரேடியோத்தொன் வேண்டுதலால் கிடைக்கப்பெற்ற

நிதியானது "சிறுவர் நலன்காப்பு நிதியத் திட்டத்திற்காக" அர்ப்பணிக்கப்படவுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

இவ்வாண்டும் எமது நத்தார் வேண்டுதலுக்கு, உங்கள் நன்கொடைகளை கடந்த ஆண்டுகளைப் போல முழுமனதுடன் அள்ளி வழுங்குவீர்களென எதிர்பார்க்கிறோம்.

நன்றி!

**Our contact details:**
**Tamils Rehabilitation Organisation**
**P.O.Box 4254, Knox City, VIC 3152**
**Tel/Fax : (03) 9888 3899**

Tamils Rehabilitation Organisation is registered in Australia as Tamils Rehabilitation Organisation (Australia) Ltd. ACN 063 019 189

T R O is a signatory to the Code of Conduct of the Australian Council for International Development.

# நிகழ்வும் பகிர்வும்





மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்களது நினைவு நிகழ்வு வவுனியாவில் நடைபெற்றது





மாமனிதர் யோசெப் பரராசசிங்கம் அவர்களது 8ம் ஆண்டு நினைவு நிகழ்வு மட்டக்களப்பில் நடைபெற்றது



அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் பூகோள குற்றவியல் நீதிக்கான பணியகத்தில் போர்க்குற்ற விவகாரங்களைக் கையாளும் தூதுவர் ஸ்டீபன் ஜே.ரெபி (கீழ்)மற்றும் டேவிட் கமரோனுடனான (மேலே) வட மாகாண முதலமைச்சர் சந்திப்பு



பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரோனுடன் வடமாகாண முதலமைச்சர் யாழ் நூலகத்தில் சந்தித்தபோது




தூதுவர் ஸ்டீபன் ஜே.ரெபி முள்ளிவாய்க்கால் பகுதியை பார்வையிடுகின்றார்.



கறுப்பு சிங்கம் மண்டேலா வெண்கல சிலை திறப்பு - தென்ஆபிரிக்கா




விண்வெளி செல்லும் ஈழப்பெண்மணி சிவேன் ஞானகுலேந்திரன்

# திரைமுரசு

## RUSH

Formula One எனப்படும் கார் ஓட்டப் பந்தய இரசிகர்களுக்கு கடந்த ஆண்டு சோகமானதகவே நிறைவுபெற்றது. ஆம். கார்



ஓய்வு பெற முன்பான 1984 இல் நடந்த தனது இறுதிப் போட்டியின்போது நிக்கி லௌடா

ஓட்டப்பந்தயத்தில் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்த மைக்கல் சூமேக்கர் (Michael Schumacher) தலையில் பலத்த அடிபட்டு உயிருக்குப் போராடிக்கொண்டிருந்தார். பலவிதமான கார் ஓட்டப்பந்தயங்கள் உலகில் நடக்கின்றபோதும் அதிக விறுவிறுப்பானதும் அதிகளவு மக்களால் இரசிக்கப்படுவதாகவும் அதிகளவு ஆபத்தானதாகவுள்ள விளையாட்டுத்தான் இந்த Formula One. இந்த வேகப்பந்தயத்தில் 1994 முதல் 2004 வரையான பத்தாண்டுகளில் ஏழு முறைகள் வெற்றிவாகை சூடி தன்னிகரில்லாதவராகத் தன்னை நிலைநிறுத்திய பின்னர் 2006இல் பந்தயத்திலிருந்து ஓய்வு பெற்றார். உலகில் அதிஆபத்தான விளையாட்டாகக் கருதப்படும் கார்ப் பந்தயத்திலிருந்து ஓய்வுபெற்றுங்கூட பொழுதுபோக்காக மேற்கொண்ட பனிச்சறுக்கு விளையாட்டில் உயிராபத்தை எதிர்கொள்ளுமளவு படுகாயமடைந்துள்ளார்.

வாகனப் பந்தயங்கள் எப்போதும் விறுவிறுப்பாகவும், சுவாரசியமாகவும் மக்களால் இரசிக்கப்படுபவை. பண்டைக்காலத் தேர்ப் பந்தயங்களிலிருந்து இன்றுவரை மானுடர்களிடம் காணப்படும் இந்த விறுவிறுப் பந்தயங்கள் மீதான பிரியம் குறைந்தபாடில்லை. எவ்வளவோ உயிரிழப்புக்களைச் சந்தித்தும்கூட அதன்மீதான வெறித்தனமான ஆர்வம் போட்டியாளருக்கோ பார்வையாளருக்கோ குறையவில்லை. அதிவேகப் பந்தயமான Formula One இல் மட்டுமே இதுவரை 27 போட்டியாளர்கள் மாண்டுள்ளார்கள். எல்லாப் போட்டிகளையும் கருத்திற்கொண்டால் நூற்றுக்கும் மேற்பட்ட போட்டியாளர்களும் நூற்றுக்கணக்கான பணியாளர்களும் பார்வையாளர்களும் கொல்லப்பட்டுள்ளார்கள். நவீன வரலாற்றில் மிக மோசமான வேகக் கார்ப்பந்தய விபத்தாக கருதபப்படும் 1955இல் நிகழ்ந்த 24 Hours of Le Mans இல் ஒரு போட்டியாளரும் 80 பார்வையாளர்களும் கொல்லப்பட்டனர், நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

Formula One இல் பங்குபற்றும் போட்டியாளர்களின் உயிராபத்துக்கான வாய்ப்புநிலை மிகமிக அதிகமானதாகும். ஒவ்வொருவருமே தமதுயிரைப் பணயம் வைத்துதான் இப்போட்டியில் பங்குபற்றுகின்றனர். சூமேக்கரின் புகழ்கூட அவர் எடுத்த திகில் நிறைந்த " உயிராபத்தான முயல்வுகளின்வழி வந்தவையே. பந்தய உலகில் அவரை ஒரு கிறுக்கனாகவே சிலர் கருதுகின்றனர். வெற்றிக்காக எதையுமே "தனதுயிரை மட்டுமல்ல போட்டியாளரின் உயிரையும் கூட ஆபத்துக்குள்ளாக்கத் தயங்காதவர் என்ற கருத்து அவர் குறித்து உண்டு. திருப்பங்களிலும், முடிவிடங்களிலும் அவரின் உயிராபத்தான முயல்வுகள் மயிர்கூச்செறியச் செய்பவை. குறிப்பாக மிக ஆபத்தான சீரற்ற காலநிலையைத் தனக்குச் சாதகமாக்கி வெற்றியைக் கைக்கொள்ளும் அவரது கிறுக்குத்தனம் பிரசித்தமானதும் கடுமையாக விமர்சிக்கப்படுவதும்கூட.

இவ்வாறான திகிலான, சுவாரசியமான, விறுவிறுப்பான கார் விரைவுப்பந்தய உலகின் உண்மைக் கதையொன்றை மையமாக வைத்து வெளிவந்த திரைப்படமே RUSH. Formula One பந்தயத்தில் எழுபதுகளில் நிகழ்ந்த இரண்டு ஆளுமைகளுக்கடையிலான தொடர் மனப்போரே இந்தத் திரைப்படம். பிரித்தானியாவைச் சேர்ந்த James Hunt, ஒஸ்ரியாவைச் சேர்ந்த Niki Lauda ஆகிய இருவருக்குமிடையிலான போட்டியும் அவர்களின் மனப்போராட்டமும் அதைச்சுற்றிய அக்காலகட்ட போட்டிகளுமே கதைக்களம்.



உண்மையான நிக்கியும் ஜேம்சும்

இவர்களில் ஜேம்ஸ் நெடிய, கவர்ச்சியான உடல்வாகுடன் காணப்படுவார். எப்போதும் விளையாட்டுத்தனமாகவும் உல்லாசமாகவும் காணப்படுவதோடு வாழ்க்கையென்பது அவ்வப்போதே மகிழ்ச்சியாக வாழ்வதற்குத்தான் என்ற நிலைப்பாட்டோடு இருப்பவர். பெண்களிடத்தில் அதிக கவனத்தைப் பெறுபவராகவும் எவருடனும் நிரந்தர உறவின்றி எல்லாப்பெண்களோடும் உல்லாசமாகப் பொழுதைக் கழிப்பவராகவும் அவரது வாழ்க்கைப் பாத்திரம் அமைந்துள்ளது. இப்பாத்திரத்தில் நடித்தவர் அவுஸ்திரேலிய நடிகர் Chris Hemsworth.

நிக்கியின் பாத்திரமோ ஜேம்சுக்கு மாறானது. அவருக்கு பந்தயக் கார்களும் அவற்றின் பொறியமைப்பும் இயங்குதன்மை பற்றியும் அதிகம் தெரியும். வாழ்க்கையை ஒரு குறிக்கோளோடு திட்டமிட்டு நகர்த்திக் கொண்டிருப்பவர். எதையும் திட்டமிட்டு நிதானமாகச் செய்து பழக்கப்பட்டவர். விளையாட்டுத்தனம், உல்லாசம் என்பவற்றை விட்டு கூடிய பொறுப்புணர்வோடு எதையும் அணுகுபவர். கார்ப்பந்தயத்தில் முன்னணியில் இருக்கும்போதே பெண்ணொருத்தியைக் காதலித்துத் திருமணம் செய்துகொண்டவர்.

இவ்வாறு இருவேறுபட்ட துருவங்களுக்கிடையில் பந்தய உலகின் முன்னிலைக்காக நடைபெறும் போட்டியை சுவாரசியமாகவும் விறுவிறுப்பாகவும் இரண்டு மணிநேரத்தில் சொல்கிறது RUSH திரைப்படம். இறுதியில் உண்மையான நிக்கின் சாட்சியத்தோடு நெகிழ்ச்சியாக நிறைவடைகின்றது.

திரைப்படக்காட்சிகள் எழுபதுகளின் பந்தயச் சூழலை மிகக்கச்சிதமாகக் கொண்டுவந்துள்ளதாக அக்காலத்திலே குறித்த பந்தயங்களைக் கண்டு இரசித்தவர்கள் இப்படம் குறித்துத் தமது பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளார்கள். போட்டியாளரின் உடைகள், கார்களின் வடிவமைப்பு, பந்தயத் திடல்கள் என்பன அச்சொட்டாக அக்காலத்தைப் பிரதிபலிப்பன. பந்தயக் காட்சிகளில் காட்டப்படும் அந்த விறுவிறுப்பு, வேகம் பார்வையாளரை இருக்கை நுனிக்குக் கொண்டு வருகின்றன.

உலகின் அதிவேக விரைவுக் கார்ப்பந்தயத்தை மையமாக வைத்துள்ளதால் அப்பந்தயக் காட்சிகளை வைத்து நிரப்பி படத்தை விறுவிறுப்பாக்கி விடலாமென்று படக்குழுவினர் அற்பத்தனமாக நினைக்கவில்லை. மாறாக மையப்பாத்திரங்களின் வாழ்க்கையை மிக அழகாக உணர்வுபூர்வமாகச் சொல்லியிருக்கிறார்கள். முழுப்படத்திலும் வரும் பந்தயக் காட்சிகள் மிகமிகச் சொற்பமே. அதிலும், பலசந்தர்ப்பங்களில் போட்டியையே காட்டாமல், அந்தச் சுற்றில் இவர் வென்றார், அந்தச் சுற்றில் அவர் வென்றார் என்ற பாணியில் தரவுகளை மட்டும் தந்துகொண்டு பந்தய வெற்றி விபரங்களை வேகமாகக் கடந்து செல்கிறார்கள். படத்தின் அடிநாதமாக இருவருக்கிடையிலான மனப்போராட்டமும், போட்டிக்கு இடையே இளையோடும் அழகான மெல்லிய நட்பும் மிக அழுத்தமாகச் சொல்லப்படுகின்றது.

ஒரு போட்டியில் மழைபெய்த ஈரத்துடன் போட்டி நடந்தால் எல்லோருக்கும் அது ஆபத்து, எனவே போட்டியை நிறுத்தும்படி நிக்கி ஒரு வேண்டுகோளை வைக்க, 'நீ உன்னை யாராவது வென்றுவிடுவார்களோ என்ற பயத்தில் இப்படிச் சொல்கிறாய்' என்று நிக்கியின் தன்மானத்தைச் சீண்டுகிறார் ஜேம்ஸ். இறுதியில் ஏனைய போட்டியாளர்களின் விருப்போடு மிக ஆபத்தான அப்போட்டி நடக்கின்றது. அதில் மிகமோசமான, உயிராபத்தான ஒரு விபத்தைச் சந்தித்துப் படுக்கையில் வீழ்கிறார் நிக்கி. முகம் உட்பட உடலின் கணிசமான பாகங்கள் எரிந்த நிலையில் உயிர் பிழைப்பாரா என்ற சந்தேகத்தின் மத்தியில் பிழைக்கும் நிக்கி, அனைவரும் எதிர்பாராத ஒரு அதிர்ச்சியை அனைவருக்கும் அளிக்கிறார். தனது ஆசை மனைவியின் எதிர்ப்பையும் மீறி கார்ப்பந்தயத்தில் கலந்துகொள்கிறார். காயமடைந்து வெறும் ஆறு வாரங்களிலேயே அதிவேக கார்ப்பந்தயத்தில் அவர்



திரைப்படத்தில் நிக்கியும் ஜேம்சும்

கலந்துகொண்டார். எரிந்த முகத்தில் தலைக்கவசம் அணியக்கூட முடியாநிலையில் கண்பார்வை முழுமையான வீச்சோடு இல்லா நிலையில் வீம்பாகக் கலந்துகொள்ளும் நிக்கி பின்வந்த போட்டிகளில் தான் இன்னும் கார்ப்பந்தயத்தில் நாயகன்தான் என்பதை நிரூபிக்கின்றார்.

ஒரு பந்தய வீரனின் மனப்போராட்டத்தை மிக அருமையாக வெளிப்படுத்தும் காட்சிகள் இவை. இதே நிக்கி ஒரு கட்டத்தில் பந்தயத்தில் ஓடிக்கொண்டிருக்கும்போதே தனது மனைவிக்காக அப்பந்தயத்தில் இருந்து மட்டுமன்றி, நிரந்தரமாகவே கார்ப்பந்தயத்திலிருந்து ஓய்வு பெற்றுக்கொண்டார். உயிராபத்தான காலநிலைகளில் வீம்புக்காகவும், போட்டி நடத்துனர்களினதும், இரசிகர்களினதும் அழுத்தங்களுக்காகவும் உயிரைப் பணயம் வைத்து போட்டிகளில் பங்குபற்றுவது முட்டாள் தனமானது என்பது நிக்கியின் கருத்து.

இதேவிடயத்தில் ஜேம்சின் கருத்து வேறானது. நிக்கி ஓய்வுபெற்ற பின்னர் ஒருமுறை அவரைச் சந்திக்கையில் 'உயிருக்காக நீ போட்டியிலிருந்து ஒதுங்கும்போது விளையாட்டைக் கொல்கிறாய்' என்று ஜேம்ஸ் சொல்லிச் செல்வார். ஜேம்ஸ் தனது 45ஆவது வயதில் மாரடைப்பினால் சாவடைந்தார். உண்மையான நிக்கியின் வாக்குமூலத்தோடு திரைப்படம் நிறைவடைகின்றது.

-காந்தன்

---

# பேய்[க்] காட்டும் வில்லா



திரைப்படங்களைப் பொதுவாக அதன் கதைக்களனையும் காட்சியமைப்பையும் வைத்து வகைபிரித்து வைப்பார்கள். காதல், நகைச்சுவை, திகில் போன்ற வகைகளில் திரைப்படங்களைக் குறிப்பிடுவார்கள் பொதுவாகவே உலகத்திரைப்படங்கள் தனியொரு வகையினதாகவோ அல்லது ஓரிரு வகைகள் பொருந்தக் கூடியதாகவோ அமைகின்றன.

தமிழ்த் திரையுலகில் இவ்வாறு ஒவ்வொரு படத்தையும் வகைபிரித்துச் சொல்வது மிகமிகக் கடினம் எனுமளவுக்குத்தான் படங்கள் உள்ளன. பெரும்பாலான படங்கள் ஒரேமாதிரியான அடைப்பலகைக்குள் அடங்குமாற்போன்றே உள்ளன. காதல், நகைச்சுவை, நாலு சண்டை, நாலு பாட்டு என்ற சமன்பாட்டின்படியே பெருமளவு படங்கள் வந்துவிடும். ஒரு திரைப்படம் வெற்றிபெற்றால் அந்தக் கதைக்களனை ஒட்டியே பத்துப் பதினைந்து படங்கள் அடுத்தடுத்து வந்து கொண்டிருக்கும். அவ்வப்போது ஒளிக் கீற்றுகள் தோன்றினாலும்கூட எண்ணிக்கையளவில் பார்த்தால் பெருமளவில் அரைத்த மாவையே அரைக்கும் வகையில்தான் படங்கள் வெளிவந்துகொண்டிருந்தன. தமிழ்ச்சினிமா மலடுதட்டிவிட்டது போன்ற தோற்றப்பாடு தென்படுமளவுக்கே கடந்த காலம் இருந்தது.

ஆனால் அண்மைக்காலத்தில் புதியவர்கள் பலரது வருகையால் புத்துணர்ச்சியுடன் தமிழ்ச்சினிமா நடைபோடுகின்றது. வெளிவரும் படங்களுள் இரசிகக்கத்தக்கதாக வெளிவரும் படங்களின் வீதம் சடுதியாக அதிகரித்துள்ளது போன்றே தோன்றுகின்றது. கடந்த ஓரா ண்டிற்குள் ............ (தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க)

# தளபதி கிட்டு தனி மனித சரித்திரம்

## மாவீரன் கிட்டு உட்பட பத்து வேங்கைகளின் 21ஆம் ஆண்டு நினைவு

வங்கக் கடலின் நடுவே அந்தத் தியாக வேள்வித் தீ எரிந்து அணைந்து இப்போது இருபத்தோராண்டுகள் ஓடி மறைந்து விட்டன. ஆனால், தமிழ் மக்களின் மனங்கள் அதை நினைத்து நினைத்து இன்னும் எரிந்து கொண்டேயிருக்கின்றன. கேணல் கிட்டுவும், அவருடன் வந்த ஒன்பது தோழர்களும் தீயோடு தீயாகி, வங்கக் கடலில் சங்கமித்த அந்தச் சம்பவம் சரித்திரம் மறக்காத ஒரு நிகழ்வு மட்டுமல்ல, அது எங்கள் நெஞ்சங்களை நீங்க மறுக்கும் நெடும் அலையாகி, நினைவெங்கும் நிலைபெற்று விட்டதொன்று.

கேணல் கிட்டு தேசியத் தலைவரால் அதிகம் நேசிக்கப்பட்டவர். அவரின் அன்பை அனுபவித்தவர். தலைவரின் இலட்சியத்திற்குத் தோள் கொடுத்து அவரின் மனதோடு ஒன்றித்து வாழ்ந்தவர்.

அதனால்தான், தமிழீழத் தேசியத் தலைவர் "கிட்டுவை ஆழமாக நேசித்தேன், தம்பியாக, தளபதியாக, எனது சுமைகளைத் தாங்கும் உற்ற தோழனாக நான் அவனை நேசித்தேன். இ து சாதாரண மனித பாசத்திற்கு அப்பாலானது. ஒரே இலட்சியப் பற்றுணர்வில் ஒன்றித்து, போராட்ட வாழ்வில் நாம் பகிர்ந்துகொண்ட அனுபவத்தில் ஒருவரையொருவர் ஆழமாக இனங்கண்ட புரிந்துணர் வில் வளர்த்த நேயம் அது" என கேணல் கிட்டுவிற்கும் தமக்கும் இடையே இருந்த பாசப்பிணைப்பினை வெளிப்படுத்துகிறார்.

கிட்டு எந்தளவிற்கு தலைவரின் மனதில் இடம்பிடித்தாரோ அதேயளவு தமிழீழ மக்களின் மனங்களிலும் நிறைந்திருக்கின்றார். எந்தக் காலத்திலும் மறக்கமுடியாத அவரின் நினைவுகளோடு இன்று தமிழீழம் நிமிர்ந்து நிற்கிறது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலத்திலிருந்து ஆழப்பதிக்கப்பட்ட கிட்டுவின் வரலாற்றுத் தடங்கள் அழிக்க முடியாத பெரும் பதிவாக பரிணமித்து, தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

1979ல் ஆரம்ப காலப்பகுதி விடுதலைப் போராட்டத்திற்கு அடித்தளமிடப்பட்ட காலம், சதாசிவம் கிருஸ்ணகுமார் என்னும் பதினெட்டு வயது நிறைந்த இளைஞன் தன்னை விடுதலைப் போராளியாக மாற்றியதன் மூலம் வெங்கிட்டு எனப் பெயர் மாற்றம் பெற்று, பின் கிட்டு என தோழர்களால் செல்லமாக அழைக்கப்பட்டார். கிட்டுவும், இன்னும் சில தோழர்களும் தலைவரிடமே போரியலை நேரில் கற்றார்கள். கிட்டுவின் துடிப்பும், வேகமும் அங்கிருந்தவர்களிடையே அவரை வேறுபடுத்திக் காட்டியது.

எதையும் அறிந்துகொள்ள வேண்டுமென்ற வேகமும் எந்த விடயத்தையும் அறிந்துகொள்ளும் ஆற்றலும் கிட்டுவிற்கு இயல்பாகவே இருந்ததால் தலைவரின் எண்ணங்களை, சிந்தனைகளை, மக்கள் மீது அவர் கொண்டிருந்த எல்லை கடந்த பாசத்தை, தலைவரின் அருகில் இருந்த கிட்டு அறிந்துகொள்கிறார். அளவு கடந்த திறமையுடன் வேகமும் விவேகமும் நிறைந்த அவரது செயற்பாடுகள் அவர் மீதான தனி நம்பிக்கை வளரக் காரணமாகின்றன. தன்மீது தலைவர் வைத்திருக்கும் நம்பிக்கையை நிரூபிக்கும் காலம் கனிந்து வரும்வரை கிட்டு காத்திருந்தார்.

1983 மார்ச் 04 இல் அற்புதன் தலைமையில் உமையாள்புரம் தாக்குதலுக்காக விடுதலைப் புலிகளின் அணி ஒன்று செல்கிறது. அதில் கிட்டுவும் ஒருவர், தாக்குதலுக்கான களம் தீர்மானிக்கப்படுகிறது. வீதியில் நிலக் கண்ணிவெடிகளை பொருத்திவிட்டு எதிரியின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். கண்ணிவெடிகளை கையாளும் போதியளவு செயற்திறன் போராளிகளுக்கு இல்லாத காலம் அது. இராணுவ வாகனங்கள் இலக்காக அண்மிக்கும் நேரத்தில், துரதிஸ்ட வசமாக வாகனங்களைக் கண்டு மிரண்டு ஓடி வந்த ஆட்டுக்குட்டியின் கால்கள் பட்டு கண் ணிவெடிகள் வெடிக்க போராளிகள் நிலை குலைந்து போகிறார்கள்.


துப்பாக்கி ரவைகளைக் கக்கியவாறு இரு இராணுவ கவச வாகனங்கள் போராளிகளை நெருங்கிவர, பின்வாங்கிச் செல்வதைத்தவிர வேறுவழி அவர்களுக்குத் தெரியவில்லை. ஆனால், கிட்டு மட்டும் எதிரியை எதிர்கொள்ளும் சாதகமற்ற களநிலையைக் கருத்திற்கொள்ளாது துணிந்துநின்று தான் வைத்திருந்த ஜீத்திறி (G-3) துப்பாக்கியால் இராணுவ கவச வாகனத்தை நோக்கிச் சுடுகிறார். இலக்குத் தவறவில்லை. சாரதி காயப்பட வாகனம் செயலற்றுப் போகிறது. தலைவரின் நம்பிக்கையை மெய்ப்பித்த மகிழ்ச்சியோடு கிட்டு களம்விட்டு அகன்றார். அவரின் முதல் களமே தனிமனித சாதனையாக ஆரம்பமாகிறது.

1983 ஏப்ரல் 07இல் விடுதலைப் புலிகளின் தாக்குதல் அணியில் கிட்டு இரண்டாவது பொறுப்பாளராக நிலையுயர்த்தப்பட்டார். இதன்பின் சிறீலங்கா அரசால் திணிக்கப்பட்ட உள்ளூராட்சித் தேர்தலை பகிஸ்கரிக்கும் பொருட்டு கந்தர்மடம் வாக்குச்சாவடியில் இராணுவம் மீது நடாத்தப்பட்ட தாக்குதல் , ஜூலை 23ல் இராணுவ வாகனங்கள் மீது நடாத்தப்பட்ட திருநெல்வேலிக் கண்ணி வெடித்தாக்குதல் என்பனவற்றிலும் கலந்து கொள்கின்றார். இவ்வாண்டின் இறுதிக் காலத்தில் இந்திய மண்ணில் பயிற்சிக்கெனச் சென்ற இயக்கத்தின் முதற்குழுவின் இரண்டாவது பொறுப்பாளராக கிட்டு நியமிக்கப் படுகின்றார்.

பயிற்சியை முடித்து தமிழீழம் வந்த கிட்டு 1984 மார்ச் 02இல் நடைபெற்ற குருநகர் இராணுவ முகாம் தாக்குதல் உட்பட்ட பல்வேறு தாக்குதல்களில் முக்கிய பங்கு வகித்து நெறிப்படுத்துகின்றார். இதேநேரம் யாழ். மாவட்டத் தளபதியாக இருந்த கப்டன் பண்டிதர் 1985 ஜனவரி 09இல் எதிரியுடனான மோதலில் வீரச்சாவடைய அவரின் இடத்திற்கு கிட்டு தலைவரால் நியமிக்கப்படுகின்றார். யாழ். மாவட்டத் தளபதி ஆனவுடன் யாழ். பொலிஸ் நிலையத் தாக்குதலுக்குப் பொறுப்பேற்று நடாத்தி, அங்கிருந்த பெருந்தொகையான ஆயுதங்களைக் கைப்பற்றினார்.

யாழ். மாவட்டத்தில் கிட்டுவின் வெற்றிகரத் தாக்குதல்கள் தொடர்ந்தன. எதிரிப்படை யாழ். மண்ணில் அவனுடைய முகாமுக்குள்ளேயே முடக்கப்படுகிறது. யாழ். கோட்டையை ஆக்கிரமித்திருந்த சிறீலங்கா இராணுவம் கிட்டு என்ற பெயரைக் கேட்டாலே கதிகலங்கிப் போகும் நிலை உருவானது. மக்கள் மத்தியில் கிட்டு என்ற மூன்றெழுத்துப் பெயர் மந்திரமாக உச்சரிக்கப்படுகிறது. யாழ். மண்ணில் எதிரிப்படையை மட்டும் அவர் வெற்றிகொள்ளவில்லை. மாறாக, மக்களின் மனங்களையும் அவர் வெற்றிகொண்டார்.

மக்கள் பிரச்சினையைத் தீர்ப்பதில் அவர் அதிக அக்கறை செலுத்தினார். தொழில் நிலையங்கள், நூலகங்கள், மலிவுவிலைக் கடைகள், பூங்காக்கள் என்பவற்றை நிறுவி மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தினார். இவ்வாறாகக் கிட்டுவின் சமூகப்பணிகள் விரிவடைய, அவர் தமிழீழத் தேசியத் தலைவரின் சிந்தனைகளைப் பிரதிபலிக்கும் ஓர் ஒப்பற்ற போராளியாக மக்களால் உணரப்பட்டார்.




தமிழீழ மக்கள் மனங்களில் மாத்திரமல்ல, எல்லைகடந்து வாழும் தமிழ் உறவுகள் அனைவருமே கிட்டுவின் வீரசாதனைகளை அறிந்து பெருமிதம் அடைந்தார்கள். விடுதலைப் புலிகளால் மன்னாரில் வைத்துச் சிறைப்பிடிக்கப்பட்ட இரு சிங்களச் சிப்பாய்களின் விடுவிப்பு தொடர்பாக 1986 நவம்பர் 10இல் சிங்கள இராணுவத் தளபதியான கேணல் ஆனந்த வீரசேகரா, கப்டன் கொத்தலாவை ஆகியோரை தனது இடத்திற்கு அழைத்துச் சந்தித்ததன் மூலம் கிட்டு என்ற பெயர் சிங்கள மக்கள் மத்தியிலும் பிரபல்யம் அடைந்தது.

1987 மார்ச் இறுதியில் தேசத்துரோகி ஒருவனின் கைக்குண்டுத் தாக்குதலினால் தனது இடதுகாலை இழந்த கிட்டு தனது மனஉறுதியால் முன்னைய வேகத்துடனும், திடகாத்திரத்துடனும் விடுதலைப் போருக்கு வலுச்சேர்ப்பவராக வளர்ந்து வந்தார். இந்திய இலங்கை ஒப்பந்த காலத்தில் தனது சிகிச்சைக்காக இந்தியா சென்ற கிட்டு ஒப்பந்தம் முறிவடைந்த நிலையில், இந்திய அரசினால் திணிக்கப்பட்ட போரின் உண்மை நிலைப்பாட்டை வெளிக் கொணர பெரிதும் பாடுபட்டார். இந்திய அரசியல் தலைவர்கள், பத்திரிகையாளர்களர், கலைஞர்கள், பேராசிரியர்கள் எனப் பலரையும் சந்தித்து, எமது நிலைப்பாடு தொடர்பாக எடுத்துரைத்தார். எமது தியாக வரலாறுகளை பல வெளியீடுகள் மூலம் இந்திய மக்களின் பார்வைக்குக் கொண்டுவந்தார்.

இவவாறான நிலையில் கிட்டுவை இந்திய அரசு வீட்டுக்காவலிலும், சென்னை மத்திய சிறையிலும் கைதியாக அடைத்து வைத்திருந்தது. சிறைக்குள் இருந்தபடியே அவர் தமிழகத்திலிருந்து வெளிவரும் தேவி இதழுக்கு போராட்டம் தொடர்பான நீண்ட தொடர்க் கட்டுரையை எழுதினார். சிறையிலிருக்கும் தன்னை விடுவிக்கும்படி கிட்டு நடாத்திய அகிம்சைப் போருக்கு அஞ்சிய இந்திய அரசு அவரை தமிழீழத்தில் விடுதலை செய்தது. விடுதலை பெற்ற கிட்டு வன்னிக் காட்டில் தலைவரைச் சந்தித்து இந்திய இராணுவத்திற்கு எதிரான போருக்கு இறுதிவரை முகங்கொடுத்தார்.

இந்திய இராணுவம் மெல்ல மெல்ல தோல்விமுகம் காணும் நிலை உருவானது. அமெரிக்காவிற்கு வியட்நாமும், ரஸ்யாவிற்கு அப்கானிஸ்தானும் புகட்டிய பாடத்தை தமிழீழம் இந்தியாவிற்குப் புகட்டியது. இந்நிலையில் இலங்கை அரசு இந்தியாவை நிராகரித்து புலிகளுடன் பேச முன்வந்தது. 1989இல் சிறீலங்கா அரசுடன் பேசுவதற்கு கொழும்பு சென்ற குழுவில் அங்கம் வகித்த கிட்டு விடுதலைப் புலிகளின் வெளிநாட்டுப் பிரிவுப் பொறுப்பாளராக அங்கிருந்தபடியே லண்டனுக்குப் பயணமானார்.

கிட்டு லண்டனில் வாழ்ந்த காலத்தில் புலம்பெயர்ந்து வாழ்ந்த தமிழரிடையே போராட்ட உணர்வையும், நம்பிக்கையையும் ஊட்டினார். 'களத்தில்', 'எரிமலை' எனப் பல்வேறு சஞ்சிகைகள் மூலம் ஈழத்தில் நடக்கும் நிகழ்வுகளை மக்களுக்கு எடுத்துச் சென்றார். விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு, விடுதலைப் புலிகளின் கலைபண்பாட்டுக் கழகம், எனப் பல்வேறு அமைப்புக்களையும் வெளிநாட்டில் அமைத்துச் செயற்பட்டார்.

விடுதலை உணர்வையும், தாய் மண்ணின் பற்று றுதியையும் தாயக மண்ணை விட்டு புலம்பெயர்ந்த மக்கள் மறந்து போகாவண்ணம் தனது செயற்பாட்டை விரிவுபடுத்தினார். எனினும் கிட்டு எங்குதான் வாழ்ந்தாலும் எப்பணியைச் செய்தாலும் அவர் மனம் தமிழீழ மண்ணையே சுற்றிவந்தது. அவர் தலைவரை, தாயகத்தை, தமிழீழ மக்களை ஆழமாக நேசித்தார். தமிழீழத்தில் எப்போது தனது கால் மீண்டும் பதியும் என ஏக்கத்தோடு காத்திருந்தார்.

கிட்டு எதிர்பார்த்திருந்தது போல தமிழீழத்திற்குச் செல்லும் வாய்ப்பு அவருக்குக் கிட்டியது. குவேக்கஸ் சமாதானக் குழுவின் யோசனைகளுடன் ஐரோப்பிய நாடொன்றிலிருந்து சர்வதேச கடற்பரப்பினூடாக எம்.வி அகத் என்ற கப்பலில் கிட்டுவும் அவரது தோழர்களும் பயணமானார்கள். யாரும் சென்று வரக்கூடிய சர்வதேச கடற்பரப்பில் இந்தியா தனது சதிவலையைப் பின்னியது. இந்தியக் கடற்படை சர்வதேச கடல் எல்லையில் கிட்டுவின் கப்பலை மறித்து வலுக்கட்டாயமாக தனது எல்லைக்குள் இழுத்துச் சென்றது.

சமாதான முயற்சிகள் பற்றி இந்திய அரசிடம் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அவை பயனற்றுப் போயின. குமரப்பா, புலேந்திரன், திலீபன், ஜொனி என எமது தளபதிகளின் தொடர் இழப்புக்குக் காரணமான இந்தியா தனது பொறிக்குள் மூத்த தளபதி கிட்டுவையும் சிக்கவைத்தது. உயிரிலும் பெரிது தன்மானம் என நினைக்கும் தலைவனின் வழியில் வளர்ந்த கிட்டுவும் ஒன்பது தோழர்களும் அன்று ஆட்சியிலிருந்த இந்திய அரசிடம் பணிந்து போகாது. தமிழீழத்தை, தலைவனை நினைத்தவாறே தீயில் கலந்து கடலில் சங்கமித்துப் போனார்கள்.

கிட்டுவின் இழப்பு தலைவனின் ஆத்மாவை மாத்திரமல்ல, தமிழினத்தின் ஆத்மாவையே பிழிந்த ஒரு சோக நிகழ்வு. மக்களால் மனதாரப் போற்றப்பட்ட அந்தப் பெருவீரனை இனி எங்கு காண்போம் எனத் துடித்தனர் மக்கள். பல இழப்புக்களைக் கடந்து வாழக்கற்றுக்கொண்ட மக்களிற்கு கிட்டுவின் இழப்பு ஜீரணிக்கமுடியாத தொன்றாகவே இருந்தது. எனினும் தோல்விகளையும், இழப்புக்களையும் தனக்கான வெற்றியின் பாடமாக்கிக் கொள்ளும் தலைவர், கிட்டுவின் இழப்பிற்கு புதிய பரிமாணத்தைக் கொடுக்கின்றார்.

"கிட்டு நீ சாகவில்லை, ஒரு புதிய மூச்சாக பிறந்திருக்கிறாய்" எனக்கூறி தனக்குள் ஒரு வீரசபதம் எடுத்துக்கொள்கிறார்.

இன்றைய உலகில், தமிழினத்தின் விடுதலைப் போராட்டம் எவராலும் நிராகரிக்க முடியாத பெரும் வடிவம் எடுத்ததில் கிட்டுவின் பங்கு இன்றியமையாதது. உலகெங்கும் சிதறிவாழ்ந்த தமிழ் மக்களை ஒருங்கிணைத்து, தமிழீழ விடுதலையை நோக்கி அவர்களை அணிதிரட்டுவதில் கிட்டு வெற்றி கண்டார் என்றே சொல்லவேண்டும். அந்தநிலை இன்று இன்னும் விரிவடைந்து மக்கள் -புலிகள் என்ற வேறுபாட்டை இல்லாதொழித்துவிட்டது.

சர்வதேச சமூகம் விடுதலைப் போராட்டங்களையும், பயங்கரவாதத்துடன் இணைத்து தனது பிற்போக்குத்தனமான செயலை நியாயப்படுத்திவரும் வேளைகளில்கூட, உலகெங்கும் பரந்துநிற்கும் தமிழ்மக்கள் அந்த நெருக்கடிக்கு முகம் கொடுத்து தொடர்ந்தும் எழுச்சி கொள்கிறார்களென்றால் அது கிட்டுவால் அன்று விதைக்கப்பட்ட விடுதலை குறித்த கருத்துருவாக்கமும் விழிப்புணர்வுமே அடிப்படைக் காரணமாகின்றன.

கெரில்லா அமைப்பாக இயங்கிய அந்த நாட்களில், சிறியரக ஆயுதங்களைக்கொண்டு பெரும் சாதனைகளை நிலைநாட்டிய அந்த ஒப்பற்ற வீரனின் பெயரிலே, பின்னர் தமிழீழ தாயகத்தில் உருவாக்கப்பட்டுள்ள கனரக ஆயுதங்களைக் கொண்ட மிகப்பெரிய படையணி தனது சாதனைகளால் உலகத்தை வியக்க வைத்தது. போரியல் நுணுக்கமும் போரிடும் திறனும் கொண்ட கேணல் கிட்டு பீரங்கிப் படையணி எண்ணிலடங்கா சமர்க்களங்களில் ஈட்டிய பெரும் வெற்றிகள் மூலம் எமது விடுதலைப் போராட்டத்தில் பெரும் பாய்ச்சல்களை ஏற்படுத்தியது.

ஊடகங்களில் தமிழரின் உண்மையான முகம் வெளியில் தெரியவேண் டும் என்பதில் கிட்டு அதிக அக்கறை காட்டினார். தமிழினத்தின் நியாயப் போராட்டங்களை பயங்கரவாதப்படுத்தி உலகெங்கும் பொய்யுரைக்கும் சிறீலங்கா அரச ஊடகங்களையும் அவற்றைச் சார்ந்துநிற்கும் சர்வதேச ஊடகங்களையும் கடந்து, உண்மையான செய்திகள் உலகெங்கும் தெரிவிக்கப்பட வேண்டும் என்பதே அவர் கொண்டிருந்த எண்ணமாகும். இவை இன்று ஓரளவு நிறைவேறிக் கொண்டிருக்கின்றன.

தமிழீழத்திலும் உலகெங்கிலும் வாழும் தமிழ் மக்கள் தங்களுடைய விடுதலைப் போராட்டத்தின் உண்மை முகத்தோற்றத்தை உணரக்கூடிய விதத்தில் தமிழ் ஊடகத்துறை பெற்றிருக்கும் அபரிமிதமான வளர்ச்சிக்கு கிட்டுவின் எண்ணங்களின் தாக்கமும் ஒரு காரணம்.

சிறுவர் நலன்பேணும் திட்டங்கள், கல்வி, அபிவிருத்தி, பொருண்மிய மேம்பாடு, சமூக மேம்பாடு என மக்கள் நலன்பேணும் திட்டங்களில் அவர் காட்டிய அதீத அக்கறையின் பயனாக எமது தாயகத்தில் புதிய மறுமலர்ச்சி உருவானது. இவற்றுக்கு மேலாக, ஒன்றுபட்ட தமிழினத்தின் எழுச்சியை இவர் கனவாகக் கொண்டிருந்தார். எதிரியின் இறுகிய பிடிக்குள்ளும் நிமிர்ந்து நின்று தமிழ் மக்கள் வெளிப்படுத்தும் உணர்வெழுச்சி கிட்டுவின் கனவிற்கு கட்டியம் கூறிநிற்கின்றது.

எங்கும் எதிலும் எல்லாவற்றிலும் கிட்டு என்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். தமிழினத்தின் ஆன்மாவில் அழிக்கமுடியாததோர் இடம் அவருக்கு என்றுமுண்டு. எல்லையற்ற திறமைகளாலும் மக்கள் மேல் அவர் வைத்திருந்த உண்மையான பாசத்தினாலும் தமிழினத்தில் நீங்காத நினைவுகளை அவர் பதித்துச் சென்றிருக்கின்றார். இறுதிமூச்சுவரை தமிழினத்தின் தன்மானம் காத்து தமிழினத் தலைவனுக்குப் பெருமையைச் சேர்த்த அந்த ஒப்பற்ற வீரனை எந்நாளும் எவராலும் மறக்கமுடியாது.

"கிட்டு ஒரு தனிமனித சரித்திரம், நீண்ட ஓய்வில்லாத புயலாக வீசும் எமது விடுதலை வரலாற்றின் ஒரு காலத்தின் பதிவு"

எனக்கூறும் தமிழீழத் தேசியத் தலைவரின் எண்ணங்களோடு ஒன்றிணைந்து கேணல் கிட்டுவை நெஞ்சிலேற்றுவோம். அவர் நினைவு தினத்தில் உறுதியெடுத்துக்கொள்வோம்

## மட்டக்களப்பு மாவட்ட ..........

(4ம் பக்க தொடர்ச்சி)

கிரான் பிரதேச செயலாளர் பிரிவுக் குட்பட்ட குடும்பிமலை கிராம சேவை யாளர் பிரிவுக்குள்ளிருக்கும் மைலத்தமடு வம்மிக்குளவட்டையில் டிசம்பர் மாதம் 11ம் திகதி மேய்ச்சலுக்கு சென்ற மூன்று மாடுகள் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள் ளன.

அதேவேளை பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கச்சக்கொடி சுவாமி மலையில் உள்ள புளியடி முகாம் பகுதியில் 12 மாடுகளும், வவுணதீவு பிர தேச செயலகத்திற்குட்பட்ட நவரகல பகுதி யில் 3 மாடுகளும்,செங்கலடி பிரதேச செயலகத்திற்குட்பட்ட மங்கலகமவிற்கும், அருந்தலாவைக்கும் இடைப்பட்ட பகுதி யில் 5மாடுகளும், மேய்ச்சல் தரையில் மேய்ந்து கொண்டிருந்த போது பெரும் பான்மையினத்தவர்களால் பிடித்துச் செல் லப்பட்டுள்ளன.

பிடிக்கப்பட்ட மாடுகளை மீளப்பெறு வதற்கு 10,000 ரூபா முதல் 50,000 ரூபா வரை கேட்டு மிரட்டுவதாகவும் விவ சாயிகள் கூறியுள்ளனர்.

விவசாயிகள் இவ்விவகாரத்தை பிர தேச செயலாளர், மாவட்ட அரசாங்க அதிபர், பாராளுமன்ற உறுப்பினர்கள் என்போரின் கவனத்திற்கு கொண்டுவந்த போதும் பிரச்சனை தீர்க்கப்படவில்லை. பொலீசாரும், பெரும்பான்மை இனத்த வர்களுக்கு சார்பாகவே நடந்துகொள்கின் றனர். தமிழ் மக்களின் பொருளாதாரத்தை திட்டமிட்டு சிதைக்கும் இம்முயற்சி பற்றி தமிழ் அரசியல்வாதிகள் அக்கறை செலுத் தாதது கவலைக்குரியது.

## கொத்தணி குண்டுகளால்....

4ம் பக்க தொடர்ச்சி

அத்துடன், மன்னாரில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மனிதப் புதைகுழியிலிருந்து இதுவரை 32க்கும் மேற்பட்ட எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. இவற்றுள் சிறுவர்களின் எலும்புக்கூடுகளும் உள்ளன. குறித்த மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்ட பகுதியில் சிறிலங்கா படைமுகாம் ஒன்று இருந்துள்ளது. இது எமக்கு பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது - என தெரவித்துள்ளார்.

## தாயக செய்திகள் தொடர்ச்சி.....

## ஒபாமா வந்தாலும் எம்மை அசைக்க முடியாது

அமெரிக்காவுக்கு எதிராக உலகில் அணி திரண்டுள்ள 59 நாடுகளின் அணியில் இலங்கையும் இணைந்து அமெரிக்க எதிர்ப்பிற்கு மேலும் வலுச்சேர்க்க வேண்டும் போராட வேண்டும் என்று வலியுறுத்தும் தேசிய அமைப்புக்களின் ஒன்றியம் ஸ்டீபன் ரெப் அல்ல அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வந்தாலும் எம்மை அசைக்க முடியாது என்றும் தெரிவித்தது.

இலங்கை தொடர்பான அமெரிக்காவினதும் இங்கு வந்துள்ள அந்நாட்டு பிரதிநிதி ஸ்டீபன் ரெப்பின் நடவடிக்கைகளுக்கும் எதிர்ப்பு தெரிவித்து தேசிய அமைப்புக்களின் ஒன்றியம் நேற்று வியாழக்கிழமை கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்திற்கு முன்பாக நடத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இங்கு உரையாற்றிய இவ் ஒன்றியத்தின் முக்கியஸ்தரான பெங்கமுகவே நாலக தேரர் இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்காகவும் தகவல்களை பெற்றுக் கொள்வதற்குமே இங்கு வந்துள்ளதாக தெரிவித்த அமெரிக்காவின் விசேட பிரதிநிதி ஸ்டீபன் ரெப்.

இங்கு வந்த பின்னர் இதற்கு மாறாக தனது நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றார். எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா.வின் மனித உரிமை ஆணைக்குழு மாநாட்டில் எமது நாட்டுக்கு எதிராக பிரேரணை சமர்ப்பிப்பதற்கான சாட்சியங்களை திரட்டுகிறார். இந்த ரெப் தான் ருவண்டாவிலும் மனித உரிமைகளை பாதுகாப்பதாக கூறிக்கொண்டு கொலைகாரர்களை பாதுகாத்தவர். இங்கு மனித உரிமைகளை பாதுகாக்க அதனை மீறும் அமெரிக்காவின் உதவி எமக்கு தேவையில்லை.




உலகில் பல நாடுகளில் பலவந்தமாக புகுந்து பிரச்சினைகளைதோற்றுவித்து சமாதானத்தை சீர்குலைக்கின்றது. எனவே அமெரிக்காவுக்கு எதிராக கிளர்ந்தெழ வேண்டும் என்ற கொள்கையில் உலகின் 59 நாடுகள் ஓரணியில் இணைந்துள்ளன.

23 ஆம் பக்க தொடர்ச்சி.

## தைப்பொங்கல் தினமே தமிழ் புத்தாண்டுத் தினமாகும்!

பல தமிழறிஞர்கள் கலந்து கொண்டார்கள்

தந்தை ஈ.வெ.ரா. பெரியாரும் இந்த மகாநாட்டில் கலந்து கொண்டிருந்தார். இந்த மகாநாட்டின் போது தைப்பொங்கல் சமயவிழாவா? இல்லை சமயமற்ற விழாவா? என்று பலத்த விவாதம் எழுந்தது. இறுதியாக, மறைமலை அடிகளார் திட்டவட்டமாகக் கீழ்வருமாறு கூறினார்.

“பொங்கலைச் சமய விழா என்று சொல்லிச் சர்ச்சையைக் கிளப்பிக் குழப்பம் செய்ய யார் முயன்றாலும் அவர்கள் இம் மாநாட்டை விட்டு வெளியேறி விடவேண்டும். இது சமய சார்பு இல்லாத விழா! எந்த சமயத்துக்காரன், எந்த சாத்திரக்காரன் இந்த விழாவை எடுத்துள்ளான்? எந்தச் சூத்திரம் இதற்கு இருக்கிறது? எந்த இதிகாசம் இதற்கு இருக்கிறது? ஆனால் தமிழில் புறநானூற்றில், பிட்டஸ் சொற்றன் வரலாற்றில், கதப்பிள்ளை சாத்தனாரின் பாடலில் சான்று இருக்கின்றது. இதை என்னுடைய அருமை நண்பர் ஈ.வெ.ரா ஏற்றுக் கொண்டாலும் சரி, ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் சரி” - என்று மறைமலை அடிகளார் முழங்கினார்.

“இல்லை - நான் ஏற்றுக் கொள்கின்றேன்”- என்று ஈ.வெ.ரா. பெரியார் தெளிவாகப் பதிலுரைத்தார். அனைவரும் கையொலி எழுப்பினர். அதனையடுத்து திரு.வி.க. அவர்கள் இதனைப் பாராட்டிப் பேசினார்.

ஆகவே தைப்பொங்கல் திருவிழா என்பது ஒரு சமய விழா அல்ல! தமிழரின் பண்பாட்டு விழா! காலக் கணிப்பை மேற் கொண்டு மிகச் சரியாகத் தமது புத்தாண்டுக்குரிய இளவேனிற் காலத்தின் முதல்நாளை வகுத்தறிந்து தமிழரின் தமிழ்ப் புத்தாண்டு ஆரம்பத்தைக் கொண்டாடும் நாள்!

பொங்கல் திருநாளுக்கு முதல் நாளை ‘போகி’ (போக்கி) என்று அழைத்தார்கள். போகி என்பது போக்கு, போதல் என்பதாகும். (ஓர் ஆண்டைப் போக்கியது- போகி-போகியது- போகி) இத்தினத்தில் பழைய பொருட்களை எரித்தல், பழைய குடில்களை எரித்தல் போன்ற நடைமுறைகள் மேற் கொள்ளப்படுகின்றன. (முன்னாளில் யாழ்ப்பாணத்தில் பட்டி அடைக்கின்ற வயற்குடில்களை எரிக்கும் பழைய நடைமுறை இருந்தது. ஆனால் இப்போது இந்த நடைமுறை அருகி விட்டது)

தமிழ்ப் புத்தாண்டான தைப்பொங்கல் தினமன்று புத்தாண்டுக்குரிய சகல நடைமுறைகளும் மேற்கொள்ளப்படும். தோரணம் தொங்கவிடல், புதுநீர் அள்ளுதல், வீட்டை அழகு படுத்தல, பொங்கலிடுதல், புத்தாடை அணிதல், கையுறை பெறுதல் போன்ற நடைமுறைகள் மேற்கொள்ளப்படும்.

தைப்பொங்கல் தினத்திற்கு அடுத்தநாள் நடைபெறுகின்ற நடைமுறைகள் புத்தாண்டின் தொடக்கத்தை உணர வைப்பதாக உள்ளன. பயிர்ச் செய்கையிலே இணைந்து தொழிற்படும் மாடு தமிழரால் பொங்கலின் மறுநாள் சிறப்பிக்கப்பட்டு அது மாட்டுப் பொங்கல் தினமாக அறியப்பட்டது. அத்துடன் தைப்பொங்கலின் மறுநாள் உறவினர் வீடுகளுக்குச் செல்லும் நடைமுறையைக் ‘காணும் பொங்கல்’ என்று அழைப்பர். இந்த நாளில் சமைக்கப்படும் படையலின் போது மதுவும், புலாலும் படையற் பொருட்களாக முன்னர் விளங்கின. ஆரிய நடைமுறைக் கலப்பினால் மதுவும் புலாலும் படையற் பொருட்களிலிருந்து விலக்கப்பட தமிழரிடையே இருந்த தவப்படையல் என்ற நடைமுறை இப்போது அருகி விட்டது.

யாழ்ப்பாணத்தில் வடமராட்சிப் பகுதியில் தைப் பொங்கல் தினமன்றே தவப் படையல் செய்யப்படும் வழக்கமிருந்தது. இப்படையலில் மீன்-இறைச்சி முதலியன படைக்கப்பட்டன. இத்தினத்தில் கலை நிகழ்வுகள் அரங்கேற்ற நிகழ்வுகள் புத்தாண்டுப் போட்டிகள் போன்ற நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

தமிழாண்டின் தொடக்கக் காலகட்டம் உழைப்பின் பயனைப் பெற்று மகிழும் காலகட்டமாகவும் அமைந்தது. புத்தொளி வழங்கிய கதிரவனைப் போற்றிய தமிழ் நெஞ்சம், உழைப்பையும் தனக்குத் துணை நின்ற உயிரையும் போற்றியது. கதிரவனின் சுழற்சியைக் கொண்ட காலக்கணிப்பைக் காட்டும் அறிவியலும், நன்றியுணர்வை வெளிப்படுத்துகின்ற முதிர்ந்த பண்பாடும் பொங்கல் விழாவில் போற்றப்படுவதை நாம் காணலாம்.

அன்புக்குரிய வாசகர்களே! இன்றைய நடைமுறை யதார்த்தத்தை சுட்டிக் காட்டி தர்க்கிக்கவே நாம் இவ்வாறு மேற்கோள் காட்டினோம். இல்லாவிட்டால் யார்-யார் எந்த எந்த நாளில் எந்த எந்தக் கொண்டாட்டங்களையும் கொண்டாடுவதைத் தடுப்பதற்கு நாம் யார்? எவரும் - எதையும் - எப்படியும் கொண்டாடட்டும். ஆனால் பெயரை மட்டும் சரியாக சொல்லட்டும்.

தனித்துவமான மொழியைப் பேசுகின்ற தனித்துவமான பண்பாட்டைக் கொண்டுள்ள தனித்துவமான கலைகளைக் கொண்டுள்ள தமக்கென பாரம்பரிய மண்ணைக் கொண்டுள்ள மக்கள் ஒரு தேசிய இனத்தவர் ஆவர்கள். அவர்களுக்கு சுயநிர்ணய உரிமைக் கோட்பாடு உரித்தானதாகும். என்று உலகச்சட்டமொன்று சொல்கிறது. இப்போது எமக்கு ஒரு தனித்துவமான பண்பாடு இருக்கின்றதா? என்ற கேள்வி எழுவதை தவிர்க்க முடியவில்லை.

அன்புக்குரிய எமது வாசகர்களே! தமிழனின் வாழ்க்கையையும் பண்பாட்டையும் எதிரிகள் சிதைத்தது போதாதென்று நாமும் கூட ஆரிய மாயையில் மயங்கிப்போய் எமது பண்பாட்டை இகழ்ந்தும், இழந்தும் வருகின்றோம். இந்தக் காலகட்டத்தில் தமிழ்ப் புத்தாண்டு தினமான தைப்பொங்கல் குறித்து சில வரலாற்று உண்மைகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ள முனைந்தோம். அனைவருக்கும் எமது இனிய தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

இந்தக் கட்டுரைக்குப் பல நூல்களும், ஆய்வுநூல்களும் பயன்பட்டன. முக்கியமாக தொல்காப்பியம், சிலப்பதிகாரம், எட்டுத்தொகை-பத்துப்பாட்டு தமிழர் நாகரிகமும் பண்பாடும, ஒப்பியன் மொழி நூல், வாக்கிய பஞ்சாங்கம், பண்பாட்டுக் கட்டுரைகள், செம்பருத்தி சஞ்சிகைக் கட்டுரைகள், பொங்கலே தமிழ்ப் புத்தாண்டு- மலேசிய சிறப்பு மலர், தமிழர் யப்பானியர் வாழ்வில் தைப்பொங்கல் போன்ற நூல்கள் பேருதவி புரிந்தன. சில சொல்லாக்கங்ககளும். சொல்லாடல்களும் அப்படியே எடுத்தாளப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட அனைவருக்கும் எனது மனங் கனிந்த நன்றிகள். காலத்தின் தேவை கருதி ஏற்கனவே என்னால் எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளின் சில கருத்துக்கள் மீண்டும் இடம் பெற்றுள்ளன.

# அவுஸ்ரேலியாவில் ஈழ அகதிகள்

அவுஸ்திரேலியக் கண்டத்துக்கான படகுவழியான அகதிகள் வருகையென்பது நீண்டகாலமாக நிகழ்ந்து வருகின்றது. பல ஆண்டுகளுக்கு முன்பே ஈழத்தமிழர்கள் அரசியல் தஞ்சம்கோரி படகுவழியாக இந்நாட்டுக்கு வரத்தொடங்கியிருந்தாலும் தொடக்கத்தில் எப்போதாவது ஓரிரண்டு படகுகள்தாம் வந்துகொண்டிருந்தன. ஈழத்தமிழர்கள் பெருமளவில் படகுவழியாக அவுஸ்திரேலியாவுக்கு அரசியல் தஞ்சம் கோரி வரத்தொடங்கியது 2009ஆம் ஆண்டு இலங்கையில் போர் முடிவடைந்த பின்னர்தான்.

அவ்வகையில் 2009 யூன் மாதத்தில் முதலாவது படகு 199 தமிழர்களுடன் அவுஸ்ரேலியாவுக்குச் சொந்தமான கிறிஸ்மஸ்தீவை வந்தடைந்தது. இதனைத் தொடர்ந்து மாதத்துக்கு ஒரு படகும் பின்னர் 2 அல்லது 3 படகுகள் ஒரு மாதத்திற்கு எனவும் தமிழர்களைத் தாங்கி கிறிஸ்மஸ்தீவுக்கு வரத்தொடங்கின.

அவுஸ்ரேலிய அரசாங்கத்தினால் தமிழர்களின் வரவைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அதேநேரத்தில் அவர்களது அடைக்கலக் கோரிக்கையை மறுக்கவும் முடியவில்லை. ஏனென்றால் அவுஸ்ரேலிய அரசினால் அகதித் தஞ்சம் கோருபவர்களுக்கு இருக்கவேண்டிய நியாயமான பிரச்சனைகள் அனேகருக்கு இருந்தன.

இந்தவகையில் தான் தற்போது ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக தடுப்புமுகாமிலுள்ள 42 தமிழர்களும் அவுஸ்திரேலிய அரசினால் அகதிகளாக அங்கீகரிக்கப்பட்டனர். உண்மையிலேயே குறித்த 42 தமிழர்களுக்கும் சிறிலங்காவில் உயிர் அச்சுறுத்தல் இருக்கின்றமையை ஏற்றுக்கொண்ட அவுஸ்திரேலிய குடிவரவுத்துறை ஏன் இன்னும் இவர்களை தடுப்பில் வைத்திருக்கிறது என்ற கேள்வி இயல்பாகவே எழுகின்றது.

**ஏன் இந்த மதிப்பீடு?**

குறித்த இலங்கைத் தமிழர்கள் ஐக்கிய நாடுகளின் அகதிகள் சாசனத்தின் கீழ் அகதிகளாக அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும் பாதுகாப்புக்கான பரிசீலனை எனும் போர்வையின் கீழ் அவர்களை நீண்ட காலம் தடுப்பில் வைத்திருப்பதனூடாக தமிழர்களின் அவுஸ்ரேலியாவுக்கான வருகைத் தெரிவுக்கான சிந்தனையை முடக்க அப்போது ஆட்சியிலிருந்த தொழிற்கட்சி முயற்சி செய்தது.

ஏசியோவை அறிமுகப்படுத்தி விசாரணை செய்தது. ஆனாலும் அவுஸ்ரேலிய அரசு எந்தத் தடங்கல்களை அறிமுகப்படுத்திய போதும் தமிழர்களின் வரவு குறைய வில்லை.

ஏனென்றால் தமிழர்கள் அவுஸ்ரேலியாவுக்கு வந்தது அவர்களது நிம்மதியை நாடி...... சுதந்திரத்தை நாடி.... தமது உயிர்களைக் காத்துக் கொள்ளும் இடத்தினைத் தேடியே.... தவிர சுற்றுலாவுக்காகவோ அல்லது மகிழ்ச்சியாக காலத்தைக் கழிப்பதற்காகவோ அல்ல.

இத்தகைய நியாயமான பிரச்சனைகளை விளங்கிக்கொண்டபோதும் பாதுகாப்புப் பரிசீலனை எனும் போர்வையின் கீழ் அகதிகளாக இனங்காணப்பட்டவர்களைக்கூட ஏசியோவின் பெயரைப் பயன்படுத்தி ஒவ்வொரு படகிலிருந்தும் 5 அல்லது 6 பேரை நீண்டகால தடுப்புமுகாம் வாழ்க்கையில் முடக்கியது.

ஒரு படகில் 60 பேர் இருந்தாலும் சரி 199 பேர் இருந்தாலும் சரி... 5 அல்லது 6 பேர் என்ற வகையில் அவுஸ்ரேலிய அரசின் பாதுகாப்பு இயந்திரத்தினதும் மக்களினதும் அல்லது அதன் சினேக நாட்டின் பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்கக் கூடியவர்கள் எனும் ஊகங்களின் அடிப்படையில் பலிக்கடாவாக்கப்பட்டு காலவரையறையின்றி தடுப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஆரம்பத்தில் 2009ம் ஆண்டு முதல் 2010ம் ஆண்டு வரையான இரண்டு ஆண்டு காலப்பகுதியில் அவுஸ்ரேலியாவுக்குப் படகு மூலம் வந்து அகதித் தஞ்சம் கோரியவர்களில் 46 பேரின் தலைவிதிகள் ஊகங்களின் அடிப்படையில் மாற்றி எழுதப்பட்டுள்ளன. இதில் 3 பேர் பர்மாவைச் சேர்ந்த ரொகிங்யா இனத்தையும் ஒருவர் ஆப்கானிஸ்தான் நாட்டைச் சேர்ந்த ஹசாரா இனத்தையும் சேர்ந்தவர்களாவர். மீதி 42 பேரும் ஈழத்தமிழர்கள் தான்.

2010ம் ஆண்டின் பின்னர் பல்வேறு நாடுகளில் இருந்து அகதிகள் வந்து குவியத் தொடங்கினார்கள். அவுஸ்ரேலிய அரசும் அவுஸ்ரேலியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் தடுப்பு முகாம்களை நிறுவி அகதிகளை அடைத்தது. ஆனாலும் கிழமைக்கு 700 அல்லது 800 பேர் வந்தபோது அரசு கடும் நெருக்கடிகளை கொடுக்க தீர்மானித்தது. அதனால் தற்காலிக விசாவை அறிமுகம் செய்து அநேகமானவர்களை சமூகத்துடன் இணைந்து வாழ அனுமதித்தது.

அத்தோடு 2010 இன் பின்னர் வந்த எவரும் ஏசியோவின் பரிசீலனைக்கு உட்படுத்தப்படவில்லை என்பதுடன் எவரும் பாதுகாப்புக்குக் குந்தகமானவர்கள் என்று நிரந்தரமாகத் தடுத்து வைக்கப்படவுமில்லை. ஏனென்றால் அவுஸ்ரேலிய அரசுக்கும் குடிவரவுத் திணைக்களத்துக்கும் நன்றாகவே தெரியும். ஏன் தமிழர்கள் தடுக்கப்பட்டார்கள் என்பது.

**சட்டத்தில் ஏதும் தீர்வு உண்டா?**

ஏசியோவின் சட்டத்தின் கீழ் தடுப்பில் வைக்கப்பட்டவர்களுக்கு அம்முடிவை எதிர்த்து நீதிமன்றத்துக்குச் செல்லும் வழியும் சட்டத்தினூடாக தடுக்கப்பட்டிருந்தது. அவர்களுக்கான அடுத்த கட்டப் பாதைகள் அனைத்துமே மூடப்பட்டிருந்தன. ஆனாலும் டேவிட் மான் தலைமையிலான சட்டவாளர்கள் உயர்நீதி மன்றத்தில் காலவரையறையின்றி தடுத்து வைக்கப்பட்டிருப்பதற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்து வாதாடினார்கள்.

ஏசியோ என்ற புலனாய்வு அமைப்பின் மதிப்பீட்டின் அடிப்படையில் விசாவுக்கான பொறிமுறையை நிறுத்திக்கொள்வது தவறு என்பதை நீதிமன்றம் சுட்டிக்காட்டியது. சிக்கல்நிலையை உணர்ந்த அரசு நீதிமன்றம் இத்தகைய விடயங்களில் தலையீடு செய்வதை முறியடிக்கும் நோக்கோடு ஒரு திட்டத்தை அறிவித்தது.

**சுதந்திர மீள்பரிசீலனையாளர்(Independent Reviewer )**

அவுஸ்ரேலிய அரசின் நீதி அமைச்சினால் முன்னாள் நீதிபதி ஒருவர் ஏசியோவின் காரணத்தைக் காட்டி காலவரையறையின்றி தடுப்பில் வைத்திருப்பவர்களது முடிவுகளை மீள் பரிசீலனை செய்வதற்கு நியமிக்கப்பட்டார். அவருக்கு யாருடைய தலையீடுகளுமற்ற சுதந்திர மீள்பரிசீலனையாளர் எனவும் பெயர் சூட்டப்பட்டது. மூன்று மாதங்களின் பின்னர் அகதிகளிடம் இருந்து 45- 60 நாட்களுக்கிடையில் மீள்பரிசீலனைக்கு விண்ணப்பிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

அதன்படி முதலாவதாக ஒரு குடும்பம் நேர்முக விசாரணை செய்யப்பட்டு ஏசியோவினால் எடுக்கப்பட்ட முடிவு பொருத்தமற்ற முடிவு எனக்கூறி மூன்று பிள்ளைகளுடன் கணவனும் மனைவியும் என 4 வருடத் தடுப்பின் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

அதன் பின்னர் ஏசியோ தனது முடிவில் மாற்றத்தைச் செய்திருப்பதாகக் கூறி ஒரு தாயார் அவரது 6 வயது மகனுடன் விடுதலை செய்யப்பட்டார்.

பின்னர் 50 வயதான ஒருகாலை இழந்த ஒரு குடும்பஸ்தர் விடுதலை செய்யப்பட்டார்.

பின்னர் 27 வயதான ஒரு இளைஞர் விடுதலை செய்யப்பட்டார்.

அத்துடன் இறுதியாக பர்மாவைச் சேர்ந்த ஒருவர் சுதந்திர மீள்பரிசீலனையாளரால் ஏசியோவின் முடிவு பொருத்தமற்றது என்று கூறி அண்மையில் விடுதலை செய்யப்பட்டார்.

இவ்வாறு சுதந்திர மீள்பரிசீலனையாளரால் நேர்முகம் காணப்பட்ட மூவரைத் தவிர அவர் யாரையும் விடுதலை செய்வதற்கான பரிந்துரையினை பிறப்பிக்காது மறுதலித்துள்ளார். ஏனென்றால் அவர் முற்கூட்டியே எடுக்கப்பட்ட முடிவில் இருந்தே சிந்திக்கின்றார் போல் தோன்றுகின்றது. ஒரு நாட்டின் புலனாய்வு அமைப்பு தீர்மானித்த விடயத்தில் தலையீடு செய்வதற்கு அவர் விரும்பவில்லை.

அதற்கும் மேலாக மீள்பரிசீலனையாளர் நியமிக்கப்பட்டு ஒரு வருடம் கடந்த நிலையிலும் தமது முதலாவது மீளாய்வுக்காக இன்னும் ஒரு வருடம் காத்திருக்கின்ற பலர் இவர்களில் உண்டு. அப்படியானால் காலத்தை கடத்தும் நடவடிக்கை இதுவாவென சிந்திக்க வைக்கின்றது.


இத்தகைய மீளாய்வுகளின்போது 4-5 வருடங்களாக அவர்களது எதிர்காலமே கேள்விக்குறியாக்கப்பட்டு அவர்களது ஞாபகசக்திகள் மழுங்கடிக்கப்பட்டு நித்திரைகளைத் தொலைத்து அதியுயர் மனஅழுத்தத்தின் பிடியில் சிக்கி குளிசைகளின் மூலமே தமது நித்திரையை வில்லங்கமாக வரவழைக்கும் முயற்சியிலும் மன அழுத்தங்களை குறைக்கும் முயற்சியிலும் ஈடுபட்டிருப்பவர்களிடம் தமது எதிர்பார்ப்புகளுக்கேற்ப சொன்னதை வரிக்கு வரி பிழைகள் ஏதுமின்றிச் சொல்லப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவை மனித உளவியல் கோட்பாடுகளுக்கு முரணானவை என்பதுடன் குறித்த அகதிகளின் தற்போதைய மனநிலைகளை உளவியல் நிபுணர்களால் பரிசீலித்து அறிக்கைகள் வழங்கப்பட்ட போதிலும் அதனை யாரும் கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை. இதற்கு நல்ல உதாரணமாக ஒரு மனநிலை பாதிக்கப்பட்ட ஒருவருக்கு ஏசியோவினால் பாதுகாப்புக்கு குந்தகமானவர் என்று முத்திரை குத்தி தடுப்பில் வைக்கப்பட்டுள்ளார் என்பதே போதுமானதாகும். ஆனால் அதற்கும் மேலதிகமாக சுதந்திர மீள்பரிசீலனையாளர் அவர்களும் தனது மீள் பரிசீலனையின் பின்னர் ஏசியோவின் முடிவு ஒரு பொருத்தமான முடிவு என்றும் தொடர்ந்து தடுப்பில் வைத்திருக்குமாறு பரிந்துரைத்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இதன் மூலம் Independent Reviewer உண்மையில் Dependent Reviewer என்ற நிலையிலேயே செயற்படுகிறார் என்றே கருதவேண்டியுள்ளது.

**இப்போது என்ன நிலை?**

கடந்த செப்ரம்பர் மாதம் மீண்டும் டேவிட்மான் தலைமையிலான சட்டவாளர்கள் இவ்வாறு




ஆண்டுக்கணக்கில் தடுத்துவைப்பது சரியா எனவும் குடிவரவு அமைச்சர் ஏசியோ மதிப்பீட்டின் அடிப்படையில் தடுத்துவைப்பது சரியா எனவும் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார்கள். இது தனது மூன்று குழந்தைகளுடன் தடுப்புமுகாமிலேயே வாழ்ந்துவரும் ரஞ்சினி என்பவரின் வழக்காக இருந்தது.

ஆனால் அவரது நீண்டகாலதடுப்பு பற்றி மௌனம் சாதித்த நீதிமன்றம் ஏசியோ மதிப்பீடு அடிப்படையில் விசா வழங்கும் நடைமுறையை தடுத்துவைத்திருக்க முடியாது எனவும் குடிவரவு அமைச்சர் தனது பணியை தனது மதிப்பீட்டின் அடிப்படையில் செய்யவேண்டும் எனவும் கூறியுள்ளது.

இப்போது ஏசியோவின் அதிகாரங்கள் கைமாறப்பட்டு குடிவரவு அமைச்சரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அவர் அதனை எப்படிகையாள்வார் என்பதை அறிந்துகொள்வதற்கு தமது வாழ்வையே ஆண்டுக்கணக்கில் தொலைத்துக் கொண்டிருக்கும் 42 தமிழ் அகதிகளும் ஏக்கத்துடன் காத்திருக்கிறார்கள்.

எனினும் இத்தகைய மதிப்பீடுகள் அவுஸ்ரேலியாவின் புலனாய்வுத்துறையின் நம்பகத்தன்மையை கேள்விக்குள்ளாக்குகிறது. அத்தோடு ஏசியோவின் முடிவுக்கெதிராக நீதிமன்றம் செல்ல முடியாது என்ற நிலையில் காலவரையறையின்றி தடுத்து வைத்திருப்பது அவுஸ்ரேலியாவின் நீதித்துறைக்கு அவமானத்தை உண்டுபண்ணும். ஒரு ஜனநாயக நாட்டில் ஊகங்களின் அடிப்படையில் தடுத்து வைக்கப்பட்ட வரலாறு பிற்காலத்தில் அவுஸ்ரேலியாவுக்கு வெட்கக்கேடான வரலாறாகவே அமையும். அப்போது Sorry சொல்லுவதில் அர்த்தம் இருக்குமா?

- ஆசிநாதன்



# கலையிலக்கிய முரசு.....



## கதவோர விழிகள்....

ஜெ

கதவின் ஓரமாக நின்று வெளியே நோக்கிய போது, அவனும் தன்னைத் திடீரென்று விழிகளால் நிலை கொண்டதைக்கண்டு கொண்டாள். நான் நினைக்கிறேன் அவளின் தாய் பிரசவ காலத்தில் கருங்கடலில் பயணம் செய்திருக்கவேண்டும்.

வானில் கருமை இருந்தால் மழை பொழிந்து நிலம் குளிர்ச்சி...

நிறத்தில் கருமை இருந்தால் கருணை இருந்து முகம் குளிர்ச்சி..

தலைக்கு எண்ணையும், நெற்றியில் திருநீறும் அவளிடத்தில், அவள் முகம் மட்டும் தான் வெளியே தெரிந்தது. சில வேளையில் அவள் ஊனமாகக் கூட இருக்கக் கூடும் என்று எண்ணிய வேளையில்,

"பயணிகள் கவனத்திற்கு, நீங்கள் கிளிநொச்சிக்குச் செல்வதற்கு ஏற்பாடு செய்யப் பட்டிருந்த பஸ் வண்டிகள் இன்னும்முப்பது நிமிடங்களில் இங்கிருந்து புறப்படும்."

அவள் புறப்பட முன் உடனடியாக எனது விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டும்.

அவள் திடீரென்று அந்த மறைவில் இருந்து வெளியே வந்தாள். அவள் இடையிலே பிறந்த மேனியோடு

அழகான குழந்தை. அவனது இதயத்தில் கரம் விளையாடியது போல் இருந்தது.

"பயணிகள் கவனத்திற்கு, உங்களுக்கான உணவுப் பொதிகள் வழங்கப் படுகின்றன. வரிசையாக மாடுகளை போல்வந்து பெற்றுக் கொள்ளவும்."

"நீங்களும் போறீங்களா"

"இங்க இருந்து பிள்ளையும் நானும் எவ்வளவு நாளைக்குக் கஸ்ரப்படுறது"

"உங்கட அவர்"

"எங்கள விட்டுட்டு ஓடிப் போயிட்டார்.

நானும் அம்மாவும் அகதிகளா வன்னியில இருந்து வந்தம். இங்க வந்த ஒருவர் எங்கள

இந்த முகாமைவிட்டுவெளியேற ஒழுங்கு செய்வதாகச் சொல்லி பிறகு என்னக் கலியாணஞ் செய்ய விருப்பப்படுறதா அம்மாட்டக் கேட்டார்.அவர் மேல எனக்கும் விருப்பம் இருந்ததால அம்மா சம்மதிச்சா. ஆறு மாசம் தான் ஒன்றா இருந்தம். பிறகுசொல்லாமல் எங்கயோ ஓடிப்பொயிற்றார். இந்த அதிர்ச்சியில அம்மாவும் இறந்திற்றா. இது எனக்கு மட்டுமில்ல.என்னப் போல எத்தினயோ பேருக்கு நடந்திருக்கு.

"ஆட்ஷேபனை இல்ல எண்டா நான் உங்களக் கலியாணம் செய்து கொள்ளவா"

"பயணிகள் கவனத்திற்கு, எஞ்சி இருக்கும் பயணிகள் உடனடியாக பதின்மூன்றாம் இலக்க பஸ் வண்டி இடத்திற்குச்செல்லவும்."

அவள் பிள்ளையோடு விறுவிறுவென்று நடந்தாள்.

"என்ன உங்களுக்குப் பிடிக்கேல்லயா"

"............."

"ஒரு நிமிசம் நில்லுங்க பிளீஸ்"

"பைத்தியமா உங்களுக்கு?நான் ஒரு பிள்ளைக்குத் தாய். விருப்பப் பட்டுத்தான் அவரக் கலியாணஞ் செய்தனான்."

"எனக்கு உங்கட பழைய கதை தேவ இல்ல"

"உங்களுக்கு வேற பொம்பிள இல்லாமலா என்னட்ட வந்தனீங்கள்.."

"ஒண்டு விளங்கிக் கொள்ளுங்கோ நான் கலியாணம் செய்தா உங்களத்தான்"

"இஞ்ச பாருங்கோ இந்த யுத்தத்தால பாதிக்கப்பட்டு ஒரு லட்சத்துக்கு மேல விதவைகள் இருக்கினம். வேலைவாங்கித்தாறன் எண்டு கூட்டிக் கொண்டு போய் என்னென்னவோ நடக்குது.

இப்ப என்ன நீங்க கண்டிராட்டிக்கலியாணமே செய்திருக்க மாட்டீங்களா"

"உங்களக் காணுமட்டும் எனக்குக் கலியாணஞ் செய்கிற எண்ணமே இல்லை"

"சரி சரி நான் ஓம் படுறன் .நான் உனக்கு வாழ்கை தந்திருக்கிறன், நீ முதல்ல இன்னொருத்தனோட வாழ்ந்தனிதான் எண்டு அடிக்கடி சொல்லிக் காட்டி என்ர மனதக் காயப்படுத்த மாட்டீங்களா?"

"உங்களுக்கு எதுக்கு தேவையில்லாத கற்பனை "

"பிறகும் இந்தப் பிள்ளையோட பாசமாக இருப்பீங்களா?"

"எங்களுக்கு இதுவே போதும் சரியா?"

"நம்பலாமா எந்தப் பிரச்சனையும் வராதா?"

"ம்.. புருஷன்ர நினைவுகள் உங்களுக்கு இருக்காத மட்டும்"

"என்ன சொல்லுறீங்கள்?"

"உங்கட மனசில கணவரோட நினைவு வரவே கூடாது"

"முதற் காதலக் கூட மறக்கேலாது கலியானத்த எப்பிடி மறக்கிறது."

"நான் ஏதாவது பிழையாக் கேட்டுட்டனோ?"

"பிள்ளைய ஒவ்வொரு முறையும் பார்க்கேக்க எனக்கு அவரிட ஞாபகம் தான் வரும். என்னப் பார்த்த ஒருநிமிசத்திலயே உங்களால என்ன மறக்கேலாமல் இருக்கு, பல மாசம் அவரோடு வாழ்ந்திட்டு அவரை எப்பிடி மறக்கிறது"


அவள் பிள்ளையோடு பைகளையும் சுமந்து கொண்டு நடந்தாள்.

bag ஐத் தூக்கிக் கொண்டுவந்து தரவா?"

"என்ர மனச் சுமைய விட இது ஒண்டும் எனக்குச் சுமயில்ல நான் போறன்."

முற்றும்.

## நாவன்மை கொண்டதனால்.......



படிப்பாளியாகிப் பல பட்டங்கள் சுமந்தாலும்
பல சான்றுகள் பெற்றுப் படைப்பாளியானாலும்
இனப்பற்று மறந்து மொழிப்பற்றுத் துறந்தால்
ஏதங்கு புதுமை இல்லையங்கு பெருமை
நல்லவற்றை விதையென்று சுட்டிக்காட்டவும்
அல்லாதவற்றை அழியென்று தட்டிக்கூறவும்
ஈழமண்ணில் தோன்றினான் ஒரு பெருமகன் - அவன்
தமிழர்க்குத் தன்மானம் ஊட்டிய ஓர் பிதாமகன்
அன்னிய ஆதிக்கம் கிளைவிட்டு வேரூன்றிய காலத்தில்
மேல்நாட்டு மோகம் கைகுலுக்கி வரவேற்ற காலத்தில்
சைவமும் தமிழும் எஞ்சுமோவென்று அஞ்சிய காலத்தில்
தமிழினம் தலைதூக்க அன்றும் ஒருவன் வந்தான்
அஞ்சிய வேளைதனில் தோன்றியதால் ஆறுமுகம் ஆனான்
அஞ்சுகின்ற முகம் கண்டால் ஆறுமுகம் தோன்றுமல்லவா?
நல்ல ஊராகிய நல்லூரில் 18-12-1822 ல் அவன் அவதரித்தான்
நாவன்மை கொண்டதனால் ஆறுமுகம் ஆறுமுகநாவலரானான்
தமிழிலும் அந்நியமொழி ஆங்கிலத்திலும் புலமை பெற்றான்
இலக்கியமும் இலக்கணமும் கற்றுத் தெளிந்தான்
தாய் மொழியை நேசித்தான் சமயத்தை சுவாசித்தான்
பத்தோடு பதினொன்றாய் செத்து மடியாமல்
சைவத்துக்கும் தமிழுக்கும் உயிர் கொடுத்தான்
காவலின்றி சைவப்பயிர் வாடியது
காவலனாகித் தண்ணீரூற்றினான்
மேய்ப்பனின்றித் தமிழன்னை தவித்தாள்
ஆசானாகிப் பாடம் புகட்டினான்
தலைவனின்றித் தேசியம் அழிந்தது
வீறு கொண்டு வீர முழக்கமிட்டான்
பிரசங்க மரபை அறிமுகப்படுத்தி
மொழியின் சுவையை சுவைக்கக் கொடுத்தான்
ஓலைச் சுவடியை உரைநடையாக்கி
மூலை முடுக்கெல்லாம் படிக்கக் கொடுத்தான்
நலிவுற்ற சைவமும் தமிழும் உயிர் பெற்றெழுந்தது
விசையொழிந்த நாளும் பொழுதும் எழுச்சி கண்டு மலர்ந்தது
வெண்ணீறணிந்தவனின் ஆங்கில வீச்சுக்கு
அந்நிய உலகம் அஞ்சி நடுங்கியது அவன்
வெடுக்கெனப் பேசும் ஆழமான தமிழுக்கு
பாண்டித்தியமும் மொழி பெயர்ப்புத் தேடியது
இலக்கணத் தூய்மையை விரும்பிய தமிழ்ப் பற்றாளனவன்
களையெடுப்புப் பணியைத் தொடக்கிய தமிழ்த் தொண்டனவன்
பள்ளம் கண்டு பரந்து விரிந்தான்
பண்டைத் தூசுகளை அள்ளி எறிந்தான்
தள்ளிநின்ற எதிர்ப்புத் திடலைத் துள்ளியேறி இடித்து நொருக்கினான்
மிருகபலியென்பது வெறும் மூடத்தனமென்று இடித்துரைத்தான்
கேதீஸ்வரமும் கோணேஸ்வரமும் தமிழனின் தேசியச் சொத்தென்றான்

..........தொடர்ச்சி 21ம் பக்கம் பார்க்க

# வழுதி வாத்தியார்.....

எப்போதுமே, எம்மையும், எம்மைச்சுற்றி உள்ள இடங்களையும் சுத்தமாக வைத்திருக்கப் பழக வேண்டும். இதனால் பல தொற்று நோய்கள் பரவுவதைத் தவிர்க்கலாம். பொதுவாக சமையலறைக் கழிவுகளை மூடிய நிலையில் உள்ள நில பங்கரில் போட வேண்டும்.

இதனூடாக இலையான்கள் உருவாவதைத் தடுக்கலாம். பின்னர் அக்கழிவுகளை தாவர வளர்ச்சிக்கு எருவா-கப் பயன்படுத்தலாம். கிணற்றைச்சுற்றி தண்ணீர் தேங்கியிருப்பதைத் தடுக்க வேண்டும்.

சவர்க்கார உறைகள், சம்பூ போத்தல்கள் மற்றும் கழிவுப் பொருட்களை கழிவுக் கூடையில் போட்டு நிறைந்த பின்னர் அப்புறப்படுத்த வேண்டும்.

இதனால் நுளம்பு உற்பத்தியாவதைத் தடுக்கலாம் என அந்த மாணவர் விடுதியில் தங்கியிருந்த மாணவர்களுக்கு வகுப்பெடுத்துக் கொண்டிருந்தார் வழுதி வாத்தியார்.

வழுதி வாத்தியார் மிகவும் மிகவும் மென்மையான போக்குக் கொண்டவர்கள். மற்றவர்களின் மனம் நோகுமளவுக்கு ஒரு பேச்சுப் பேச மாட்டார்.

அவர் திருமணம் செய்த ஆரம்பத்தில் மனைவியின் சமைய லில் உப்பு சற்றுத் தூக்கலாக இருந்தாலோ அல்லது சுவையின்றிஇருந்தாலோ"நிலானியின்சமையலெண்டால் சொல்லவா வேணும். இப்படிச் சுவையாகச் சாப்பிடுவதற்கு நான் குடுத்து வைத்திருக்க வேணும்." என்று தட்டில் போட்ட சாப்பாட்டில் ஒரு பருக்கைச் சோறு கூட மிச்சம் விடாது சாப்பிட்டு தனது மனை வியை மகிழ்விப்பார்.

பின்னர் நிலானியின் தாயாரோ, சகோதரர்களோ சாப்பிட்டு விட்டு "என்னடி இது சாப்பாடு... ஒரே உப்பாக இருக்கிறது..." என்று சொன்ன பின்னர் தான் அவளுக்கே, தன் கணவர் வழுதியின் பெருந்தன்மையை நினைத்து "அவர் தனக்கு கணவராகக் கிடைத்ததற்கு நான் தான் குடுத்து வைத்திருக்க வேண்டும்" என்று எண்ணி பெருமையடை-டவாள்.

அன்றைய வகுப்பில் மாணவர்கள் அனைவரும் வழுதி வாத்தியாரின் படிப்பித்தலை உன்னிப்பாகக் கேட்டு விளங்கியதுடன், மறுநாள் விடுதி வளாகத்தை சுத்தம் செய்வதாகவும் உறுதி எடுத்துக் கொண்டார்கள்.

அவ்வாறே மறுநாள் மாணவர்கள் அனைவரும், மாணவ தலைவரின் வழிகாட்டலில் குழுக்களாகப் பிரிந்து சமையலறை, கிணறு, தமது இருப்பிடம் என விடுதி வளாகத்தின் அனைத்துப் பகுதியையும் துப்பரவு செய்து வழுதி வாத்தியாரையும் கூட்டிச்சென்று காட்டினார்கள்.

வழுதி வாத்தியாரும் சந்தோசமடைந்து இனி இவ்வாறு தொடர்ந்து சுத்தம் பேணுங்கள். உங்களது எதிர்காலம் சிறப்பாக இருக்கும் என்று கூறி விட்டு தான் ஒரு வார விடுமுறையில் செல்வதாகக் கூறிவிட்டு மாணவர்களிடம் விடை பெற்றார்.

விடுமுறையின் பின்னர் விடுதிக்கு வந்து, ஆர்வம் பொங்க

விடுதியின் சுற்றுப் புறங்களை மாணவர்களுடன் சேர்ந்து பார்வையிட்டார் வழுதி வாத்தியார். அனைத்து இடங்களும் சுத்தமாக இருந்த போதும், கிணற்றைச் சுற்றி, சுத்தம் செய்வதற்கு முன்னர் இருந்தது போன்று, சவர்க்கார உறைகளும், சம்போ போத்தல்களும், ஆங்காங்கே தண்ணீர் தேங்கியும் காணப்பட்டன.



மாணவர் தலைவனை அழைத்த வழுதி வாத்தியார் மண்வெட்டி எடுத்து வருமாறு கூறி விட்டு, கிணற்றைச் சுற்றி இருந்த பேப்பர், கஞ்சல்களைத் தானே பொறுக்கத் தொடங்கினார்.

அப்போது மாணவர்களும் வாத்தியாருடன் சேர்ந்து பொறுக்க முற்பட்ட போது அவர்களைத் தடுத்து நிறுத்திய வழுதி வாத்தியார்,

"இந்த மாணவர் விடுதியில் உள்ள மாணவர்கள் அனைவரும் நல்ல மனத்தையும் குணத்தையும் படைத்தவர்கள். எந்நேரமும் சுத்தம் பேணுபவர்கள்".

"படிப்பில் கெட்டிக்காரர்கள். விளையாட்டில் வீரர்கள். ஆனால் கடந்த ஒரு வாரம் உங்களால் இந்தக் கிணற்றைச் சுற்றிய வளாகத்தைச் சுத்தம்செய்ய முடியவில்லை. அதற்கு, பாட-சாலையில் வழங்கப்பட்ட வீட்டு வேலைகளை செய்வதற்கு பரீட்சைக்குப் பாடங்களை மீட்டுப் பார்ப்பதற்கு என உங்களது நேரத்தை உபயோகித்திருப்பீர்கள்".

"அதனால் நானே இந்தக் கிணற்று வளாகத்தை இன்று சுத்தம் செய்கிறேன். நீங்கள் உங்களது இடங்களுக்குச் சென்று படிப்புக்களைத் தொடருங்கள்."

என்று கூறி அவர்களை அனுப்பி விட்டு, சுத்தம் செய்யும்

வேலையைத் தொடர்ந்தார்.

வாத்தியாரை வேலை செய்ய விட விருப்பமில்லாத போதும், அவரது கட்டளைக்குப் பணிந்து அனைவரும் ஒன்றுகூடல் அறையில் கூடி, வாத்தியாரின் வருகைக்காகக் காத்திருந்தார்கள்.

45 நிமிடங்களின் பின்னர், வியர்த்து ஒழுக அங்கு வந்த வாத்தியார்,

"இப்போது கிணற்று வளாகம் சுத்தமாக உள்ளது, இனிமேல் அப்படியே பேணுங்கள்."

என்று சொல்லி அவர்களது அறைகளுக்குச் சென்று படிப்பைத் தொடங்குமாறு பணித்தார்.

ஆனால் அம்மாணவர்கள் அனைவரும், தமது பிழையை உணர்ந்து, அழுதவாறு வாத்தியாரிடம் மன்னிப்புக் கேட்டு, இனிவரும் காலங்களில் இவ்வாறான பிழைகளை விட மாட்டோம் என்று உறுதி கூறினார்கள்.

"நாம் எப்போதும் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டும். நாம் என்ன செய்கிறோமோ, அதைப் பார்த்துத் தான் சிறுவர்கள் பழகுகிறார்கள்"

"அதனால் இந்த விடுதியில் இருக்கும் போது, இவ்வாறான சிறு சிறு விடயங்களையும் கருத்திலெடுத்து வேலை செய்யுங்கள் உங்களது எதிர்காலம் பிரகாசமாக இருக்கும்."

என்று கூறி அனைவரையும் அவர்களது அறைகளுக்கு அனுப்பி வைத்தார் மக்களின் வாழ்வுக்காக வாழ்ந்த வழுதி வாத்தியார்.

அழகன்.

## நாவன்மை கொண்டதனால்...... தொடர்ச்சி

20ம் பக்க தொடர்ச்சி

வெட்ட வெட்டத் தளைப்பது
தமிழனின் தேசியக் குணமென்றான்
அட்டூழியத்தை அழித்த அவன் அவதார புருஷனானான்
அன்புள்ள நண்பர்களே என் அருமை உறவுகளே
நாவலர் காலத்துக் கண்ணாடியை அணிந்து பாருங்கள்
அவனது சாதனையும் தெரியும்
அவன் சந்தித்த சவால்களும் புரியும்
தன் கடன் பணிசெய்வதென்றே அவன் வாழ்ந்தவன்
ஈழ இலக்கியத்தின் வெற்றிக் கொடியை நிலை நாட்டியவன்
அன்னைபூமியின் விடுதலைக்கு வித்திட்ட முன்னோடியவன்
அக்கால நாவலர் இக்கால மனிதர்க்கு நல்ல பாடமாகட்டும்
இன்று கலங்கி நிற்கும் ஈழத் தமிழனின் காயத்திற்கு
நாவலர் வரலாறு கை மருந்துபோல் ஆகட்டும்
சமயத்தை மறந்து மொழியைப் புறக்கணித்து
தேசியத்தைத் துறந்த வேளைதனில் தன்
இனத்திற்கும் அதன் எழுச்சிக்கும் கீர்த்தி சொல்ல
வேங்கையெனத் தோள் நிமிர்த்தி வந்தவர்தான் நாவலர்
நாவலர் அன்று எழுப்பிய உரிமைக் குரல் - இன்றும்
ஈழவிடுதலையின் வேள்வித் தீயில் ஓங்கி ஒலிக்கிறது
நாடு விடுதலை தவறிப் பாழ்பட்டுக் கிடக்கும் காலமிது
இங்கிருந்து பார்த்தாலும் அங்கிருந்து பார்த்தாலும் எங்கிருந்து பார்த்தாலும்
எட்டுத் திக்கிலும் வீர நாவலர்கள் முளைத்த வண்ணம் இருக்கட்டும்
வரிகள்
சௌந்தரி கணேசன்

## தண்ணிக்கு தடையா ? .....

7ம் பக்க தொடர்ச்சி.......

ஆயினும் விடுதலைப்போராட்டத்தின் போது இந்த கருத்துப்பரிமாற்றங்கள் பின் புலத்துக்கு போயிருந்தன. கடந்த இரண்டு ஆண்டுகளாக யாழ் குடா நாட்டின் நீரேரிகளும் இரணைமடுக்குளமும் மீண்டும் பேசு பொருட்களாக தலையெடுத்து இருக்கின்றன. யாழ் குடா நாட்டின் குடிநீர்த்தேவை இதற்காக இரணைமடுக்குளத்தில் இருந்து நீர் வழங்குதல் இரணைமடு குளத்தை நம்பி இருக்கும் கிளிநொச்சி விவசாயிகள் என்று உணர்ச்சி பூர்வமான கருத்து பரிமாற்றங்கள் கடந்த சில மாதங்களாக பகிரங்கமாக நடைபெற்று வருகின்றன. இலங்கை அரசாங்கத்தின் மன நிலைமை மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி வழங்கல் என்று தமிழர்களின் நேரடிகட்டுப்பாட்டுக்கு வெளியிலான அம்சங்களும் இந்தச்சிக்கலான சமன்பாட்டுக்குள் மேலும் கேள்விக்குறிகளை திணிக்கின்றன. வேவ்வேறு நாடுகளில் இருந்து இயங்கும் தமிழ் மற்றும் ஆங்கில இணையத்தளங்கள் வேறுபட்ட பல கருத்துக்களை தொடர்ந்து வெளியிட ஆரம்பித்திருக்கின்றன. இவ்வாறான பல கட்டுரைகள் தொழில்நுட்ப பின்னனிகளையோ தெளிவான தகவல்களையோ கொண்டிருக்காமல் இருக்கின்றன.

முரண்பட்ட பிரதிபலிப்புக்களை செய்வது வாசகர்களுக்கு தெளிவற்ற பாடம் ஒன்றை விபரிப்பதும் அவதானிக்கப்பட்டிருக்கிறது. புதிதாக பதவியேற்ற வடமாகாண சபை இதனை சரியாக கையாள வேண்டும் என்ற எதிர்பார்ப்பு ,ருக்கையில் நாடாளுமன்ற உறுப்பினர் திரு சிறீதரன் அவர்களின் இரணைமடு குளத்து நீர் பற்றிய மேடைப்பேச்சும் அதற்கான முதலமைச்சர் திரு விக்னேஸ்வரனின் பதிலும் வடக்கின் நீர் பங்கீடு ஓர் அரசியல் பிரச்சனை ஆகி விடுமோ என்ற அச்சத்தை துளிர வைத்திருக்கின்றன.

இவ்வகையில் தகவல்களின் அடிப்படையில் இக்கேள்விகள் பற்றிய தொடர்ச்சியான கருத்து பரிமாற்றத்துக்கு இடம் தரும் வகையில் ஈழமுரசு ஆக்கபுர்வமான கருத்துக்களை எதிர்பார்க்கின்றது.

முதலாவது கருத்தாக ஓய்வு பெற்ற பொறியியலாளர் திரு ஆறுமுகம் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரை ஒன்று தமிழாக்கம் செய்யப்பட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது. நீர் சுத்திகரிப்பு நீரின் தரம் போன்றவற்றில் அனுபவம் உள்ள பாலா விக்னேஸ்வரன் எழுதிய சுருக்கமான குறிப்பு ஒன்றும் சேர்க்கப்பட்டுள்ளது.

கொழும்பு டெலிகிராப் இணைய தளத்துக்கும் திரு ஆறுமுகம் மற்றும் பாலா விக்னேஸ்வரன் ஆகியோருக்கும் எமது நன்றிகள்

பாரதிய ஜனதாவுடனான வை.கோ அவர்களின் கூட்டணியையும், தமிழருவி மணியன் முதலான தலைவர்களின் இன்றைய பா.ஜ.க ஆதரவு நிலைப்பாட்டையும் விமரிசிக்கும் அனைவரிடமும் நான் கேட்க விரும்பும் ஒரே கேள்வி இதுதான்.

**இதை விட்டால் வேறென்ன வழி இருக்கிறது?**

'எரிகிற கொள்ளியில் எந்தக் கொள்ளி நல்ல கொள்ளி' என்பதுதான் இன்றும் நாம் ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையாக இருக்கிறது எனும்பொழுது, கூட்டணி மட்டும் புத்தர்களுடனும் காந்திகளுடனும் வைத்துக்கொள்ள வேண்டும் என நாம் எப்படி எதிர்பார்க்க முடியும்?

ஆம், பா.ஜ.க-தான் சிறந்த தேர்வு எனச் சொல்லவில்லை. மற்றவையெல்லாம் அதைவிட ஆபத்தானவை என்பதுதான் விசயமே!

ஒரு புறம், முள்ளிவாய்க்கால் பேரழிவை நிகழ்த்திய காங்கிரசு மறுபுறம், முள்ளிவாய்க்கால் முற்றம் இடித்த ஜெயலலிதா இன்னொரு புறம், இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சி இருக்கிறதா இல்லையா என்பது கூடத் தெரியாத இரசியா தனி ஈழத்தை எதிர்க்கிறது என்பதற்காகத் தாங்களும் தனி ஈழத்தை எதிர்க்கும் அறிவுக் கொழுந்துகளான பொதுவுடைமைத் தோழர்கள். பா.ஜ.க-வுக்குப் பதிலாக இவர்களில் யாரைத் தேர்ந்தெடுக்கச் சொல்கிறீர்கள் நண்பர்களே?

பார்க்கப் போனால், இந்த நான்கு தரப்பினரில் பா.ஜ.க ஒரு வகையில் மேலெனவே சொல்லலாம். காரணம், மற்ற மூன்று தரப்பினருக்கும் இருப்பது போலத் தமிழர்களுக்கோ தமிழீழத்துக்கோ எதிரான தனிப்பட்ட விரோதம் எதுவும் பா.ஜ.க-வுக்கு இல்லை.

காங்கிரசின் தமிழ்ப் பகை நமக்குச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. கடைசி நேரத்தில், தமிழர்களைக் காப்பாற்ற அமெரிக்கா களமிறங்க இருந்த தறுவாயில்,

"இஃது என் தனிப்பட்ட விவகாரம். யாரும் தலையிடக்கூடாது!" என்று சோனியா சொல்லித் தடுத்து நிறுத்தியதை நாம் என்றைக்கும் மறந்துவிட முடியாது!

போராட்டத்துக்குப் பெயர் 'போன' பொதுவுடைமைத் தோழர்களின் தமிழீழம் குறித்த நிலைப்பாட்டையும் மேலேயே பார்த்தோம்.

அடுத்தவர் ஜெயலலிதா. அவரை நம்ப முடியுமா? படாத பாடெல்லாம் பட்டு, தமிழ்நாடு முழுக்கச் சுற்றியலைந்து, காலங் காலமாகத் தமிழினப் பகையாளியாகக் கருதப்பட்ட தனக்குத் தமிழினத் துரோகிக்கு எதிரான வாக்குகள் அனைத்தையும் மொத்தமாக மடைமாற்றி விட்ட வை.கோ அவர்களைக் கறிவேப்பிலை போல் தூக்கி எறிந்த ஜெயலலிதா, நாளை பிரதமராக்கி விட்டால் மட்டும் வை.கோ சொல்வதைக் கேட்டுத் தமிழீழத்தைத் தங்கத் தட்டில் வைத்துத் தந்துவிடுவாரா? முதலமைச்சராக இருக்கும்பொழுதே தமிழர்களை மதிக்காதவர், பிரதமராகிவிட்டால் நம்மை மதிப்பாரா? தமிழர்கள் அனைவரும் மொத்தமாக வாக்களித்தால் மட்டுமே பிரதமர் பதவியை நினைத்தாவது பார்க்க முடியும் எனும் நிலைமையில் இருக்கும்பொழுதே, அதுவும் நாடாளுமன்றத் தேர்தல் நெருக்கத்திலேயே முள்ளிவாய்க்கால் முற்றத்தின் மீது கை வைக்கிறாரே, இவரா நாளை பிரதமரானால் தமிழர் தரப்பில் நிற்பார்? சிந்தித்துப் பாருங்கள் தோழர்களே!

பா.ஜ.க-வினர் மட்டும், ஆட்சி அமைத்த அடுத்த நிமிடம் தமிழீழத்தை நமக்குப் பெற்றுத் தந்துவிட்டுத்தான் மறு வேலை பார்ப்பார்கள் எனச் சொல்லவில்லை. ஆனால், மற்ற மூவரைப் போல் தமிழர்களுக்கோ, தமிழீழத்துக்கோ எதிரான தனிப்பட்ட பகை எதுவும் அவர்களுக்கு இல்லை எனும் நிலையில் அவர்களை விட்டால் நமக்கு வேறு தேர்வு இல்லை இங்கே என்பதைத்தான் புரிந்துகொள்ள வேண்டுகிறேன்!

மேலும், அடுத்து பா.ஜ.க ஆட்சியமைக்கப் போகிறதோ இல்லையோ, ஆனால், அப்படி ஓர் எண்ணம் இப்பொழுது நாடெங்குமுள்ள மக்களிடையில் விதைக்கப்பட்டுவிட்டது. "இந்த ஐந்து மாநிலச் சட்டமன்றத் தேர்தல்கள்தான் அடுத்த நாடாளுமன்றத்தை முடிவு செய்யப் போகின்றன" என்று கட்சிகளும் ஊடகங்களும் சொல்லிச் சொல்லியே மக்கள் உள்ளத்தில் அந்தக் கருத்தை ஆழப் பதித்து விட்டன. கண்டிப்பாக, இது நாடாளுமன்றத் தேர்தலில் எதிரொலிக்காமல் இருக்காது. நம் மக்களிடையே ஒரு கெட்ட பழக்கம், தகுதியானவருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை விட வெல்பவருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதுதான் அது. தான் வாக்களிக்கும் கட்சி வெற்றி பெறாவிட்டால், தன் வாக்கு வீணாகிவிட்டதாகவும், அது தனக்கு இழுக்கு எனவும் நினைப்பவர்கள் நம் மக்கள். எனவே, 'அடுத்தது பா.ஜ.க-தான்' என்கிற தோற்றத்தை இந்த ஐந்து மாநிலத் தேர்தல்கள் ஏற்படுத்தி வைத்திருப்பதால், பெருவாரியான மக்கள் அந்தக் கட்சிக்குத்தான் வாக்குகளை வாரி வழங்குவார்கள். ஆக, ஏதோ ஒரு வகையில் அடுத்து பா.ஜ.க-தான் என்று ஓரளவு உறுதியாகிவிட்ட நிலையில், அவர்களுடன் நாம் கூட்டணி வைத்தாக வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். காரணம், நடுவண் அமைச்சரவையில் தமிழுணர்வுள்ள கட்சிகள் இல்லாததும், ஏற்கெனவே அதில் பங்கு வகிக்கும் கட்சிகள் தமிழுணர்வுள்ள கட்சிகளாக இல்லாததும்தான் ஈழத் தமிழினப்படுகொலைக்கும் காரணம் கடந்த நான்கரை ஆண்டுக்காலத் தமிழர் போராட்டம் எதற்குமே பதில் கிடைக்காததற்கும் காரணம். ஆகவே, இந்த முறையாவது, அடுத்து அமையும் நாடாளுமன்றம் தமிழர் சொல்வதைக் கேட்பதாக அமைய வேண்டியது கட்டாயம்.

# பா.ஜ.க உடனான கூட்டணி சாதிக்கப்போவது என்ன!...




அப்படி அமையாவிட்டால்... ம.தி.மு.க போன்ற உண்மையான தமிழர் கட்சி எதனோடும் கூட்டணி வைக்காமலே ஒருவேளை அடுத்து பா.ஜ.க ஆட்சியைப் பிடித்துவிட்டால்... அடுத்து நடக்கப்போவது ஒன்றே ஒன்றுதான். இந்தியாவின் அடுத்த ஆட்சியாளர்களையும் கைக்குள் போட்டுக்கொண்டு இலங்கை தன் தமிழர் அழிப்பைச் சாவகாசமாகத் தொடரும். இப்பொழுதே அதற்கான முன்னோட்டமாக, பா.ஜ.க தலைமைகளை நோக்கி இலங்கை தன் காய் நகர்த்தல்களைத் தொடங்கிவிட்டதாக முகநூலில் தகவல்கள் பரபரக்கின்றன! இதைத்தான் விரும்புகிறோமா நாம்?

சரி, வை.கோ, சீமான், பழ.நெடுமாறன் என உண்மைத் தமிழுணர்வுக் கட்சிகள் மட்டும் ஒருங்கிணைந்து தேர்தலைச் சந்திக்கலாமே என்றால், சந்திக்கலாம் ஆனால், வெல்வோமா? அப்படி ஒரு சோதனை செய்து பார்க்கக்கூடிய நிலைமையிலா நாம் இப்பொழுது இருக்கிறோம்?

அங்கே இலங்கையில் நம் மக்கள் ஒவ்வொரு நிமிடமும் செத்துக் கொண்டிருக்கிறார்கள். நரக வேதனை பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய ஒரே நம்பிக்கையான நமது உடனடிக் கடமை, சிங்கள இராணுவக் கோரப் பிடியில் சிக்கியிருக்கும் அவர்களை விடுவித்தல், அவர்களுக்குப் பாதுகாப்பும், உயிர் வாழத் தேவையான அடிப்படை வசதிகளுடனுமான வாழ்க்கை ஒன்றை அமைத்துத் தருதல். இவற்றை எவ்வளவுக்கெவ்வளவு விரைவாகச் செய்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவுதான் நாம் அவர்களைக் காப்பாற்ற முடியும். தாமதிக்கும் ஒவ்வொரு நாளும் அங்கு நம் மக்கள் சிலர் பலராகச் செத்துக் கொண்டே இருக்கிறார்கள். அவர்கள் வாழ்க்கை மென்மேலும் சீரழிவின் உச்சத்தையும் தாண்டிச் சென்று கொண்டிருக்கிறது.

இந்நிலையில் திராவிடக் கோட்பாடு, தமிழர் கொள்கை, மதச்சார்பின்மை போன்றவற்றுக்காக நாம் கவலைப்பட்டுக் கொண்டிருந்தால், இவற்றையெல்லாம் சிந்தாமல் சிதறாமல் கடைப்பிடித்து, தமிழருக்கு ஆதரவான ஒரு நல்லாட்சியை நாடாளுமன்றத்தில் அமைத்து, அதன் பின் தமிழீழம் பெற்றுத் தருவதற்குள் அங்கு தமிழர் ஒருவரும் மிச்சமிருக்க மாட்டார் அதைப் பெற்றுக்கொள்ள.

மோடியும் இனப்படுகொலையாளிதான். அந்தாளுடன் கூட்டணி வைப்பது தமிழர் கொள்கைக்கு மட்டுமின்றி, மனிதநேயக் கொள்கைக்கே எதிரானதுதான். இவற்றையெல்லாம் யாரும் மறுக்கவில்லை. ஆனால், இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தால் நம் மக்களைக் காப்பாற்றுவது யார்? ஆயிற்று, தமிழினப் படுகொலை நடந்து முடிந்து நான்கரை ஆண்டுகளுக்கும் மேல். எந்த நாடு வந்து நம் மக்களைக் காப்பாற்றியது? ஐ.நா, அமெரிக்கா, இங்கிலாந்து ஆகியவை இணைந்து நம் மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றி வைத்து, இன்று வரை அவர்கள் உயிர் வாழ அரும்பேருதவி ஆற்றி வருகின்றன என்பது உண்மைதான். ஆனால், நம் மக்களை மீட்கவோ, நடந்த இனப்படுகொலைக்கு நியாயம் கிடைக்கவோ, தமிழீழம் பிறக்கவோ இந்த நான்கரை ஆண்டுக்காலத்தில் எந்தப் பெரிய முயற்சியும் அவர்கள் எடுக்கவில்லை.

ஐ.நா-வோ அதில் உறுப்பினராயிருக்கும் நாடுகளுள் ஒன்றே ஒன்றோ மனம் வைத்திருந்தால் கூட ஒரே இரவில் தமிழீழத்தை மலரச் செய்திருக்க முடியும். ஆனால், இந்த இவ்...வளவு பெரிய கால இடைவெளியில் அவர்கள் யாரும் அதற்கு முன்வரவில்லை. இனிமேலும் அப்படி முன்வரக்கூடிய அறிகுறியும் ஏதும் தெரியவில்லை. அப்படியிருக்க, நம் மக்களைக் காப்பாற்ற நாம் எப்படியாவது நமக்குச் சாதகமான ஓர் ஆட்சியை இங்கு அமைத்தாக வேண்டியது இன்றியமையாதது இல்லையா? அட, சாதகமாக இல்லாவிட்டாலும், பாதகமாகவாவது இல்லாமல் இருக்க வேண்டாவா? கொள்கையில் உறுதி என்பது உயிரினும் மேலானதுதான். ஆனால், கோடிக்காணக்கான மக்களின் உயிர்க் காப்பு, இன, மான மீட்பு என வரும்பொழுது நடைமுறைச் சாத்தியங்களுக்கு நாம் அனுசரித்துப் போக வேண்டியது இன்றியமையாதது இல்லையா?

இவையெல்லாம் வெறும் சமாளிப்புகள் என்கிறீர்களா? சூழ்நிலைக்கேற்றாற்போல் மாற்றி மாற்றிப் பேசும் அரசியல் கயவாளித்தனம் என்கிறீர்களா? சொல்லுங்கள் ஆனால், அப்படிச் சொல்ல வாய் திறக்குமுன், உலகின் மிகக் கொடுமையான ஒரு சூழலில் வாழும் நம் ஈழத் தமிழ்ச் சொந்தங்களை நினைத்துப் பார்த்துவிட்டுப் பேசுங்கள்!

வயிற்றிலிருக்கும் தமிழ்க் குழந்தையைக் கூட விட்டு வைக்காத கொடூரர்களுக்கிடையில், எந்நேரம் என்ன நடக்குமோ என ஒவ்வொரு நிமிடமும் உயிரையும் மானத்தையும் கையில் பிடித்துக்கொண்டு வாழும் நம் தாய்மார்களை நினைத்துப் பார்த்து, வறுமையும் அதிகாரப் பேய்களின் கொடுமையும் கண்ணெதிரே தன் குடும்பத்தைச் சிறிது சிறிதாக விழுங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு ஒவ்வொரு நொடியும் துடித்துக் கொண்டிருக்கும் நம் அண்ணன் தம்பிகளை நினைத்துப் பார்த்து, செத்தால் நரகத்துக்குப் போவது என்பதற்கு மாறாகப் பிறவியே நரகத்தில் வாய்த்திருப்பதை உணராத நம் பிஞ்சுக் குழந்தைகளின் களங்கமில்லாப் புன்னகையை நினைத்துப் பார்த்து, அதன் பிறகு சொல்லுங்கள், பா.ஜ.க-வுடன் கூட்டணி வைத்தது சரியா இல்லையா என்று!

அனைத்து விதமான வசதிகளும், பாதுகாப்பும் நிரம்பிய உயர்மட்டச் சமூகமான சென்னை மாநகரத்தில் வாழும் நமக்கே, நம் பெண் பிள்ளை மாலையில் வீடு திரும்பச் சற்றுத் தாமதமாகிவிட்டால் கொஞ்சம் பதறுகிறதே, தமிழ்ப் பெண்களைப் பாலியல் வன்கொடுமைக்கு ஆட்படுத்துவதைப் பொழுதுபோக்காகவே செய்யக்கூடிய அந்தச் சிங்களச் சமூக அமைப்பில் நம் அக்கா தங்கைகளை ஒரு நாள், இரண்டு நாள் கூட அல்லாமல், நான்கரை ஆண்டுகளாக விட்டு வைத்திருக்கிறோமே, அந்தப் பெண் பிறப்புகளில் ஒருவரையாவது நம் உடன்பிறப்பாக ஒரு நிமிடமாவது நினைத்திருந்தால் நாம் இப்படிக் கூட்டணி குறித்து வக்கணையாக நியாயம் பேசிக் கொண்டிருப்போமா?

அப்படியானால், இங்குள்ள சிறுபான்மையினர் நலன் நமக்கு முக்கியமில்லையா எனக் கேட்டால் முக்கியம்தான்! நம்முடனேயே சாப்பிட்டு, இந்தக் காற்றையே மூச்சிழுத்து, நம்மிடையிலேயே வாழ்கிறவர்களை விட்டுவிட்டு எங்கோ இருப்பவர்களுக்காகக் கடைப்பிடித்தால் அது மனிதநேயம் ஆகாதுதான். ஆனால், இரண்டு தரப்பினருக்குப் பாதிப்பு என வரும்பொழுது அவர்களில் கூடுதலான பாதிப்பு யாருக்கு எனப் பார்த்து அவர்களுக்கு முதலில் உதவிக்கரம் நீட்டுவதுதானே நியாயமாக இருக்க முடியும்?

அப்படிப் பார்த்தால், நாளை அமையக்கூடிய பா.ஜ.க ஆட்சியால் பாதிக்கப்பட இருக்கிற நம் சிறுபான்மையின உடன்பிறப்புக்களை விட ஏற்கெனவே பாதிக்கப்பட்டிருக்கும் ஈழத் தமிழ் உடன்பிறப்புக்களுக்கு உதவுவதுதானே நம் முதல் கடமை? நன்றாக இருப்பவர்களின் பாதுகாப்பை விடப் பாதிக்கப்பட்டிருப்பவர்களின் மீட்புதானே முதன்மையானது?

இதை நம் சிறுபான்மையின மக்களும் ஏற்றுக்கொள்வார்கள் எனத்தான் நம்புகிறேன். ஏனெனில், பசித்திருப்பவனுக்கு உணவளிப்பதை விடத் தவித்திருப்பவனுக்குத் தண்ணீர் அளிப்பது எவ்வளவு முக்கியமானது என்பது அவர்கள் அறியாததில்லை!

இ.பு.ஞானப்பிரகாசன் (கீற்று வலைத்தளம்)

# தைப்பொங்கல் தினமே தமிழ் புத்தாண்டுத் தினமாகும்!

தமிழரின் தேசியத் திருநாளான தைப்பொங்கல் நாள் குறித்துப் பல கருத்துக்களை, வரலாற்று வழியாகவும், வாழ்வியல் வழியாகவும், பண்பாட்டுவழியாகவும், 'பண்டைய காலக்கணக்கு முறை வழியாகவும் முன்வைத்துத் தர்க்கிப்பதுவே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

தமிழீழத்திலும், தமிழ் நாட்டிலும் மட்டுமன்றி உலகளாவிய வகையில் இன்று புலம் பெயர்ந்திட்ட தமிழ் மக்கள் தைப்பொங்கல் திருநாளைக் கொண்டாடுகின்ற இக் காலகட்டத்தில் இவ்வகையான தர்க்கங்கள் பல ஆக்கபூர்வமான சிந்தனைகளைக் கிளர்ந்தெழச் செய்து அவற்றைச் செயற்பட வைப்பதற்கும் உதவக் கூடும்!

"பொங்கல்" என்கின்ற பழந்தமிழ்ச் சொல்லுக்கு உரிய அர்த்தங்கள்தான் என்ன?

பொங்குகை, பெருங்கோபம், மிளகு-சீரகம்-உப்பு-நெய், முதலியன கலந்து இட்ட அன்னம், உயர்ச்சி, பருமை, மிகுதி, கள், கிளர்தல், சமைத்தல், பொலிதல் என்று பல பொருட்களைத் தமிழ் மொழியகராதியும், தமிழ்ப் பேரகராதியும் தருகின்றன. அத்தோடு இன்னுமொரு பொருளும் தரப்படுகின்றது.

'சூரியன் மகரராசியில் பிரவேசிக்கும் நாளான தைமாத முதற்தேதியன்று சூரியனை வழிபட்டுப் பொங்கல் நிவேதனம் செய்யும் திருவிழா'-என்ற பொருளும், பொங்கல் என்ற சொல்லுக்கு தரப்பட்டுள்ளது. இந்தப் பொருளுக்கு உள்ளே பல முக்கியமான விடயங்கள் பொதிந்திருப்பதை நாம் காணக் கூடியதாக உள்ளது.

அதாவது பொங்கல் திருவிழா என்பது தமிழ் மக்கள் வாழ்வில் வரலாற்று ரீதியாக, ஒரு பண்பாட்டு அங்கமாக, அவர்களது வாழ்வியலில் திகழுகின்ற திருவிழாவாக இருந்து வந்துள்ளது என்பது புலனாகின்றது. அத்தோடு பண்டைத் தமிழர்கள் இயற்கையின் காலக்கணக்கைக் கணித்து சரியாக எந்த நாளில் தைத்திருநாளைக் கொண்டாட வேண்டும் என்பதையும் அறிந்திருந்தார்கள் என்பதையும் நாம் அறியக் கூடியதாக உள்ளது.

**இதனை சற்று ஆழமாகக் கவனிப்போம்.**

பண்டைத் தமிழன் இயற்கையை வணங்கி, இயற்கையோடு ஒன்றிணைந்து வாழ முனைந்தவன் ஆவான்.! தன்னுடைய வாழ்க்கைக் காலத்தில் வித்தியாசமான காலப்பருவங்கள் தோன்றுவதையும் அவை மீண்டும் மீண்டும் தொடர்ந்து வருவதையும் தமிழன் அவதானித்தான். ஒரு குறிப்பிட்ட காலச் சேர்வையில், மழை, வெயில், குளிர், பனி, தென்றல் வாடை, ஆகியவை மாறிமாறித் தோன்றி, தமிழனின் வாழ்வை ஆண்டு வந்ததால் இந்தக்காலச் சேர்வையைத் தமிழன் 'ஆண்டு' என்று அழைத்தான்.-என்று அறிஞர் வெங்கட்ராமன் என்பார் கூறுவார்.

தமிழகத்தில் வானியலில் தேர்ச்சி பெற்ற அறிஞர்களை 'அறிவர், பணி, கணியன்' -என அழைத்தார்கள். மூவகைக் காலமும் நெறியினாற்றும் 'அறிவர்கள்' குறித்துத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். அரசர்களுடைய அவைகளில் 'பெருங்கணிகள்' இருந்ததாகச் சிலப்பதிகாரமும் குறிப்பிடுகின்றது.

தொல்காப்பியத்திலும், சங்க நூல்களிலும் தென்படுகின்ற வானியற் செய்திகள் முழுமையாக உருப்பெற்றமைக்குப் பல ஆயிரம் ஆண்டுகள் தேவைப்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. அத்தோடு ஆரியர்களது ஊடுருவலுக்கு முன்னரேயே தமிழர்கள் வானியலில் பெரிய அளவில் முன்னேறி இருந்தனர் என்று பல் நாட்டு அறிஞர்களும் கூறியுள்ளார்கள். மேல்நாட்டு அறிஞரான சிலேட்டர் என்பவர் 'தமிழருடைய வானநூற் கணித முறையே வழக்கில் உள்ள எல்லாக் கணிதங்களிலும் நிதானமானது' என்று குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்துப் பரதவர்கள் திங்களின் நிலையைக் கொண்டு சந்திரமானக் காலத்தைக் கணித்தனர் என்றும் தமிழகத்து உழவர்கள் சூரியன், திங்கள் ஆகியவற்றின் இயக்கங்களையும் பருவங்களையும் மிகத்தெளிவாக அறிந்திருந்தனர் என்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. (A Social History of the Tamils-Part 1)

தமிழர்கள் இயற்கையை ஆதாரமாகக் கொண்டு, காலத்தைப் பகுத்தார்கள். ஒரு நாளைக் கூட ஆறு சிறு பொழுதுகளாகத் தமிழர்கள் அன்றே பகுத்து வைத்தார்கள். 'வைகறை, காலை, நண்பகல், ஏற்பாடு, மாலை, யாமம்' என்று அவற்றை பகுத்து அழைத்தார்கள். அது மட்டுமல்ல, அந்த ஆறு சிறு பொழுதுகளின் தொகுப்பையும் அறுபது நாழிகைகளாகப் பகுத்துக் கணக்கிட்டார்கள். அதாவது ஒரு நாளில் ஆறு சிறுபொழுதுகள் உள்ளன. அந்த ஆறு சிறு பொழுதுகள் கழிவதற்கு அறுபது நாழிகைள் எடுக்கின்றன என்று தமிழர்கள் பண்டைக் காலத்தில் கணக்கிட்டார்கள். ஒரு நாழிகை என்பது தற்போதைய 24 நிமிடங்களைக் கொண்டதாகும்.

அதாவது பண்டைக் காலத்தமிழர்களது ஒரு நாட்பொழுதின் அறுபது நாழிகைகள் என்பன தற்போதைய கணக்கீடான 1440 நிமிடங்களோடு-அதாவது 24 மணித்தியாலங்களோடு - அச்சொட்டாகப் பொருந்துகின்றன. தமிழர்கள் ஒரு நாட் பொழுதை, தற்போதைய நவீன காலத்தையும் விட, அன்றே மிக நுட்பமாகக் கணித்து வைத்திருந்தார்கள். என்பதே உண்மையுமாகும்.

**தைப்பொங்கல் தினத்தின் முக்கியத்துவத்தைக் காட்டுகின்ற தமிழர்களின் ஆண்டுப் பகுப்பை அடுத்துக் கவனிப்போம்.**

பின்னாளில் வந்த ஆரியர்கள் ஓர் ஆண்டை நான்கு பருவங்களாக மட்டும்தான் வகுத்தார்கள். ஆனால் பண்டைக்கால தமிழர்களோ, தமக்குரிய ஆண்டை, அந்த ஆண்டுக்குரிய தமது வாழ்வை ஆறு பருவங்களாக வகுத்திருந்தார்கள்.

1. இளவேனில் - ( தை-மாசி மாதங்களுக்குரியது)
2. முதுவேனில்-(பங்குனி - சித்திரை மாதங்களுக்குரியது)
3. கார் - (வைகாசி - ஆனி மாதங்களுக்குரியது)
4. கூதிர் - (ஆடி - ஆவணி மாதங்களுக்குரியது.)
5. முன்பனி (புரட்டாசி - ஐப்பசி மாதங்களுக்குரியது)
6. பின்பனி (கார்த்திகை - மார்கழி மாதங்களுக்குரியது)



2006ஆம் ஆண்டு கிளிநொச்சியில் பொங்கல்

(இதைத் தவிர, ஓர் ஆணின் வாழ்க்கைக் காலத்தை ஒரு பெண்ணின் வாழ்க்கைக் காலத்தை ஏன் ஒரு மலரின் வாழ்க்கைக் காலத்தைக் கூடத் தமிழன் பல காலத் தொகுதிகளாக வகுத்து வைத்துள்ளான், என்பதானது இன்னுமொரு தளத்திற்குரிய ஆய்வுக் கருத்துக்களாகும்!)

காலத்தை, அறுபது நாழிகைகளாகவும், ஆறு சிறு பொழுதுகளாகவும், ஆறு பருவங்களாகவும் பகுத்த பண்டைத் தமிழன் தன்னுடைய புத்தாண்டு வாழ்வை இளவேனிற் காலத்தில்தான் தொடங்குகின்றான். இங்கே ஒரு மிக முக்கியமான விடயத்தை வாசகர்கள் கருத்தில் கொள்ள வேண்டும்!

பண்பாட்டுப் பெருமை கொண்ட மற்றைய பல இனத்தவர்களும், தங்களுடைய புத்தாண்டு வாழ்வை, தங்களுடைய இளவேனிற் காலங்களில்தான் ஆரம்பிக்கின்றார்கள். தமிழர்கள் மட்டுமல்ல, சீனர்களும், ஜப்பானியர்களும், கொரியர்களும், மஞ்சூரியர்களும் என, பல கோடி இன மக்கள் - தொன்மையான பண்பாட்டு வாழ்வினைக் கொண்ட பெருமை வாய்ந்த மக்கள்- தங்களுடைய இளவேனிற் காலத்தையே தமது புத்தாண்டாகக் கொண்டாடி வருகின்றார்கள்.

தமிழர்கள் மட்டுமல்ல, உலகத்தில் பலகோடி வேற்று இன மக்களும் தத்தமக்குரிய இளவேனிற் காலத்தையே புத்தாண்டாக கொண்டாடி வருவதாக குறிப்பிட்டிருந்தோம். உதாரணத்திற்காக (ஜ)யப்பானிய மக்களின் புத்தாண்டை தமிழர்களின் புத்தாண்டான பொங்கல் திருநாளோடு ஒப்பிட்டுப் பார்ப்போம்.

தமிழர்-யப்பானிய பண்பாட்டு ஒற்றுமை நிலையை வெளிப்படுத்தும் நடைமுறையாகத் தைப்பொங்கல் விளங்குகிறது. யப்பானியர் தை 14ம் திகதி அன்று பழைய பயன்பாட்டுப் பொருட்களை எரிப்பார்கள். தமிழர்களும் அவ்வாறே செய்கின்றார்கள்.

தை 15ம் நாள் யப்பானியர்களும், தமிழர்கள் போன்று தோரணங்களை தொங்கவிட்டு புதுநீர் அள்ளி, பருப்புச் சேர்த்து சமைத்த பொங்கலைப் பரிமாறுகின்றார்கள். தமிழர்கள் பொங்கல் பானையில் பால் பொங்கும் போது 'பொங்கலோ பொங்கல்' என்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்வார்கள். அதே போல் யப்பானியர் தமது புத்தாண்டான தை 15ம் நாளில் FONKARA - FONKARA என்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்வார்கள்.

தை 16ம் நாள் பணியாளர்களுக்குப் புத்தாடை வழங்கல், முன்னோர்க்கு படையல் செய்தல், கலை நிகழ்ச்சிகளை நிகழ்த்தல், மாடுகளுக்கு உணவளித்தல் போன்ற காரியங்களை தமிழர்கள் செய்வது போலவே யப்பானியர்களும் செய்கிறார்கள்.

பருப்புத் தவிடு பொங்க - பொங்க

அரிசித் தவிடு பொங்க - பொங்க

என்ற கருத்துப்படப் பாடப்படும் யப்பானிய வாய் மொழிப் பாடலில் 'பொங்க-பொங்க' என்ற சொற்களுக்கு யப்பானிய மொழியில் 'HONGA-HONGA' என்றே பாடுகிறார்கள்.

இடையில் தமிழன் மட்டும் மாறி விட்டான்! ஆளவந்த ஆரியர்களின் அடிமையாக மாறியது மட்டுமல்லாது, இன்றும் கூட ஆரியர்களின் பண்டிகைகளான சித்திரை வருடப்பிறப்பு, தீபாவளி போன்ற பண்டிகைகளை, தன் இனத்துப் பண்டிகைகளாக எண்ணி மயங்கிப் போய்க் கிடக்கின்றான்.

**இவை குறித்து பேராசிரியர் க.பொ. இரத்தினம் அவர்கள் கீழ் வருமாறு அன்று கூறியிருந்தார்.**

"சித்திரை வருடப்பிறப்பு" என்பது சாலிவாகனன் என்ற வடநாட்டு அரசனால் பின்னாளில் நிலைநாட்டப்பட்டது. இந்த அரசனுக்கு முன்னர் பல்லாயிரம் ஆண்டுகளாக நயத்தக்க நாகரிகத்துடன் வாழ்ந்த தமிழ் மக்கள் தம் நாட்டுப் பெருமகன் ஒருவனுடன் இணைந்த தொடர் ஆண்டை நிலை நாட்ட முயலாதது பெரும் விந்தையாக உள்ளது . . .... (சித்திரை வருடப் பிறப்பை) வரவேற்று, (அதன் மூலம்) தமிழினத்தின் பழமையையும், பண்பையும், சிறப்பையும், செல்வாக்கையும் (இன்றைய தமிழர்கள்) சிதைத்து வந்துள்ளமை பெரும் வெட்கத்திற்கு இடமானதாகவும் இருக்கின்றது. தமிழ் மக்களிடையே நிகழ்ந்த மானக்கேடான நகைப்புக்கிடமான செயல் இது ஒன்று மட்டும்தானா?- தமிழ் மக்களின் கோவில்களிலே இன்று தமிழ் மொழியும், தமிழ் இசையும் ஒதுக்கப்பட்டுள்ளன. . .

என்று பேராசிரியர் க.பொ. இரத்தினம் அவர்கள் மிகக் கடுமையாக விமர்சித்து இருந்தார்.

தமிழர்களின் தேசியத் திருநாளான தைப்பொங்கல் தினத்தை தமிழர்களுடைய பண்டைக் காலத்திலிருந்தே வரலாற்று வழியாகவும், வாழ்வியல் வழியாகவும், பண்பாட்டு வழியாகவும், வானியல் அறிவு வழியாகவும் தமிழர்கள் இனம் கண்டு அறிந்துணர்ந்து கொண்டாடி வந்துள்ளார்கள் என்பதையும் நாம் தர்க்கித்ததோடு, ஆரியர்கள் எம்மீது திணித்த சித்திரை வருடப் பிறப்பு குறித்தும் நாம் சில கருத்துக்களைத் தெரிவித்ததற்குக் காரணங்கள் உண்டு!

**"தைப்பொங்கல் தினமான, தைத்திங்கள் முதல் நாள்தான் தமிழனுக்குரிய தமிழ் புத்தாண்டுத் தினமாகும்!!"**

பொங்கல் திருநாள்-தமிழ்ப் புத்தாண்டுத் திருநாள்-என்பதானது, சிலர் பிதற்றித் திரிவதுபோல் இந்துக்களின் விழா அல்ல! உண்மையில் இது சமய சார்பற்ற இயற்கை சார்ந்த, எல்லாத் தமிழர்களுக்கும் பொதுவான திருநாளாகும்.! மற்றைய எல்லாத் திருநாட்களையும் எடுத்து ஒப்பிட்டுப் பார்த்தால் அங்கே ஏதாவது ஒரு அரசனை, வீரனை, கடவுளைக் குறிப்பிட்ட 'கதை' ஒன்று புனையப் பட்டு அந்தத் திருநாள் உருவாகியதற்கான காரணம் ஒன்றும் கற்பிக்கப்பட்டிருக்கும்.

ஆனால் தைப்பொங்கல் திருநாள் அப்படியான ஒன்றல்ல! அது வான் சார்ந்து, மண் சார்ந்து, முழுமையான இயற்கை சார்ந்து உருவாகிய திருநாளாகும்! இது தமிழர்களான எமக்குப் பெருமையையும் மகிழ்ச்சியையும் தருகின்ற திருவிழாவாகும்! இத்திருநாளைப் புறம் தள்ளுவதும் இதற்கு மதம் சார்ந்த கற்பிதங்களை உருவாக்குவதும், தமிழினத்தை கேவலப்படுத்தும் செயல்களாகும்!

தைப்பொங்கல் திருவிழாவிற்குச் சமயச் சாயம்பூச முற்படுபவர்களை மறைமலை அடிகளாரும் கடுமையாகச் சாடியுள்ளார். இது குறித்த வரறாற்றுப் பதிவு ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகின்றோம்.

1935ம் ஆண்டு திருச்சியில் அகில தமிழர் மகாநாடு என்ற பெயரில் ஒரு மகாநாடு நடைபெற்றது. பசுமலை சோமசுந்தர பாரதியார் தலைமையில் நடைபெற்ற இந்த மகாநாட்டில் கா. சுப்பிரமணியனார், மதுரை தமிழவேள், பி.டி. இராசன், தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், புலவர் கா.ப. சாமி, திரு. வி.க. மறைமலை அடிகளார் முதலான பல தமிழறிஞர்கள் கலந்து கொண்டார்கள் தந்தை ஈ.வெ.ரா. பெரியாரும் இந்த மகாநாட்டில் கலந்து கொண்டிருந்தார். இந்த மகாநாட்டின் போது தைப்பொங்கல் சமயவிழாவா? இல்லை சமயமற்ற விழாவா? என்று பலத்த விவாதம் எழுந்தது. இறுதியாக, மறைமலை அடிகளார் திட்டவட்டமாகக் கீழ்வருமாறு கூறினார்.

..............( தொடர்ச்சி 18ம் பக்கம்)

# புவியின் உட்புற ஓசைகள்


இன்றைய மனிதகுலம் விண்வெளியையும் தாண்டி பல்லாயிரம் கோடி மைல்களையும் கடந்து சென்று புதிய புதிய நட்சத்திர தொகுதிகளையும் பல புதிய கோள்களையும் கண்டறிந்து விட்டுள்ளது. மேலும் புதிய கோள்களைக் கண்டறிவதிலும் அங்கு குடியேற்றங்களை மேற்கொள்வதிலும் கூட மனிதகுலம் இன்று ஆர்வம் கொண்டுள்ளது. இருந்தபோதிலும், மனிதனின் இருப்பிடமான பூமியின் பல்வேறு அம்சங்கள் இன்னமும் மனிதனுக்கு புரியாத புதிராகவே விளங்குகின்றன.

ஆழ் சமுத்திரங்களில் மனிதன் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டுவிட்ட போதிலும், மேலும் பல வியத்தகு அம்சங்கள் இன்னமும் சமுத்திரங்களுள் ஆழ்ந்து கிடக்கின்றன. அதேபோன்று பூமியின் மையப்பகுதியில் பொதிந்துகிடக்கும் பல்வேறு அம்சங்கள் இன்னமும் மனிதனால் முழுமையாக அறியப்படாததாகவே காணப்படுகின்றன.

1990 இல் இத்துளையிடும் பணி ஆரம்பிக்கப்பட்டது. புவியின் ஆழத்தில், கொதிநிலையிலுள்ள ஐதரசன் (boilinghydrogen) பல்வேறு வகையான பாறைகள் மற்றும் கனிமங்கள் போன்றன இத்துளையிடும் கருவியின் துணையுடன் கண்டறியப்பட்டன.

தேற்கு ஜெர்மனியில் முன்னெடுக்கப்பட்ட இந்த புவி மேற்பரப்பை துளையிடும் திட்டம், அதற்கான நிதியுதவி நிறுத்தப்பட்ட நிலையில், துரதிஷ்ட வசமாக நிறுத்தப்பட்டது. இருப்பினும், அத்துளை இன்றும் விஞ்ஞானிகளுக்கும் புவியியலாளர்களுக்கும் பெறுமதிமிக்க பல்வேறு ஆய்வுப்பணிகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றது.

ஜெர்மனியின் புவியியல் ஆராய்ச்சி மையத்தில் பணியாற்றும் ஓவியரும் ஆய்வாளருமாகிய Lotte Geeven என்பவர் புவியின் ஆழத்திலிருந்து இத்துளையினூடு தொடர்ச்சியாக



புவி மேற்பரப்பிலிருந்து புவியின் கடினமான பகுதி 30 - 50 கிலோமீற்றர்களவரை என கணிப்பீடுகளின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், விஞ்ஞானிகள் புவியின் மையப்பகுதியில் காணப்படும் இரகசியங்களை கண்டுபிடிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்ட வண்ணமேயுள்ளனர்.

ஆட்டிக் வட்டத்தின் மேற்திசையில், பின்லாந்தின் வடகிழக்கேயுள்ள கோலா குடாவில் அமைக்கப்பட்ட துளையே மனிதனால் புவியில் அமைக்கப்பட்ட மிக ஆழமான துளையாக காணப்படுகின்றது. 13 கிலோமீற்றர்கள் ஆழமான இந்த துளை, 1970 களில் சோவியத் ஒன்றியத்தினால் அமைக்கப்பட்டது. 2008 ஆம் ஆண்டு இத்த திட்டத்திற்கான நிதியுதவி நிறுத்தப்பட்டதன் காரணமாக, இத்திட்டம் கைவிடப்பட்டதோடு, அமைக்கப்பட்ட துளையின் வாய்ப்பரப்பு இரும்புத் தகடுகளால் மூடி காப்பிடப்பட்டது.

மனிதனால் புவிமீது அமைக்கப்பட்ட இரண்டாவது துளை தெற்கு ஜெர்மனியில் அமைக்கப்பட்டது. இதன் ஆழம் 9.1 கிலோமீற்றர்களாகும். 300 மில்லியன் வருடங்களின் முன்னர் இரு பெரும் நிலப்பரப்புகள் ஒண்றிணைந்து Pangaea பெரும்கண்டம் உருவாக்கம் பெற்றது. அவ்விரு நிலப்பரப்புக்களும் ஒன்றிணைந்த பகுதி தெற்கு ஜெர்மனியில் அமையப்பெற்றுள்ளதன் காரணமாகவே, இவ்விடம் துளையிடுவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டது. 120 விஞ்ஞானிகள் மற்றும் தொழிலாளர்களின் துணையுடன்

நுண்ணொலிகள் வெளிவருவதை மிக நுண்ணிய ஒலிவாங்கிகளின் உதவியுடன் கண்டறிந்தார். அவ் நுண்ணொலிகள் தொடர்பாக அல் தொடர்ந்து மேற்கொண்ட ஆய்வினூடாக, புவியின் உட்பகுதியில் ஏற்படும் பாறை வெடிப்புக்கள், புவியோடுகளின் உராய்வுகள் போன்றவற்றின் காரணமாகவே இவ்வொலிகள் எழுகின்றன எனக் கண்டறிந்தார்.

கலிபோனியாவைச் சேர்ந்த மற்றொரு ஓவியரான Doug Aitken என்பவரும் புவியின் உட்பகுதியிலிருந்து வெளிவரும் ஒலிகளை பதிவுசெய்து ஆய்வுகளை மேற்கொண்டிருந்தார். மிக நுண்ணிய ஒலிகளைப் பதிவுசெய்யக்கூடிய ஒலிவாங்கிகளை அவர் வசிக்கும் வீட்டின் சுவர்களுக்குள் பதித்து அவ்வொலிவாங்களின் துணையுடன் புவியோடுகளின் அசைவுகளால் ஏற்படும் ஒலிகளை பதிவுசெய்து ஆய்வுகளை மேற்கொண்டிருந்தார்.

புவியின் உட்புறத்தில் உருவாகும் ஒலிகளைப் பதிவு செய்வதன் மூலம், தற்போது பெருமளவில் பயன்கள் பெறப்படுவதில்லை என்ற போதிலும், எதிர்காலத்தில், இவ்வொலிகளின் துணைகொண்டு நிச்சயமாக பூமியதிர்வுகள், எரிமலை வெடிப்புகள் போன்றவற்றை பெரும்பாலும் துல்லியமாக எதிர்வு கூற முடியும் என்று நம்பப்படுகின்றது. இதற்கான ஆய்வுப்பணிகளிலும் விஞ்ஞானிகள் ஈடுபட்டவண்ணம் உள்ளனர்.

## நுட்பமுரசு

### உங்கள் கணனியை பாதுகாக்க சிறு தகவல்கள்

*1. தெரியாதவர்கள் அனுப்பும் மின்னஞ்சல்களை அல்லது சந்தேகத்துக்கு இடமான மின்னஞ்சல்களை திறக்காதீர்கள். குறிப்பாக மின்னஞ்சல்களில் இணைக்கப்பட்டுள்ள கோப்புகளை திறப்பதில் அவதானம் தேவை.*

*2. உங்கள் நண்பர் அனுப்புவது போன்றே உங்களுக்கு மின்னஞ்சல்கள் வரும் என்பது தெரியுமா? அவதானம் தேவை.*

*3. புதிய தளங்களுக்கு செல்லும்போது நம்பகமான தளங்கள் என்பதை உறுதிசெய்யுங்கள். இணையதளங்கள் ஊடாகவே அனேக கணனிகள் பழுதாகின்றன.*

*4. அதிகமான விளம்பரங்கள் உள்ள தளங்களுக்கு செல்லாதீர்கள். அங்கு பல்வேறு இணையதளங்களிலிருந்து இணைப்பு செய்யப்பட்டுள்ளதால் உண்மையில் நீங்கள் 50 இற்கு மேற்பட்ட தளங்களுடன் உங்கள் தொடர்பு வருகின்றது. இதனால் உங்கள் கணனி பாதிப்பு ஏற்படக்கூடிய வாய்ப்பு உள்ளது.*

*5. சற் பண்ணுதல் சமூகவலைதளங்களை பாவித்தல் என்பவற்றில் அவதானம் தேவை.*

*6. கிறடிற் காட் விபரங்களையோ அல்லது உங்களது தனிப்பட்ட விபரங்களையோ பாதுகாப்பு அற்ற இணையங்களுக்கு வழங்காதீர்கள்.*

*(.... இன்னும் வரும்)*



## உடல் செயலிழந்தோர் நடக்க உதவும் இலத்திரனியல் கருவி

முதுகுத்தண்டு பாதிப்பென்பது இதுவரை காலமும் குணப்படுத்த முடியாதவொரு நோயாகவே காணப்பட்டு வந்தது. முதுகுத்தண்டு பாதிப்பிற்குள்ளாவோர் நிரந்தரமாக நடக்க முடியாது போகும் நிலையே காணப்பட்டு வந்தது. இருப்பினும் அண்மைக்காலப் பரிசோதனைகள் இந்நிலை மாற்றமடையும் என்ற நம்பிக்கையை முதுகுவடப் பாதிப்பிற்குள்ளான நோயாளிகளுக்கு கொடுத்துள்ளது. முதுகுவடப் பாதிப்பிற்கான சிகிச்சை தொடர்பான பரிசோதனைகள் அண்மைக்காலங்களில் குறிப்பிடத்தக்களவு வெற்றியைக் கொடுத்துள்ளது.

இந்தப் பரிசோதனைகள் மரபணு முறையிலான சிகிச்சை மற்றும் இலத்திரனியல் கருவிகளின் உதவியுடன் ,யக்கமற்றுள்ள பகுதிகளை இயக்குதல் என இருவேறு வழிகளில் மேற்கொள்ளப்பட்டன. இந்தவகையில் கலிபோனிய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளரான ரெஜ்ஜி எட்கேற்றன் என்பவர் முதுகுத்தண்டு வடப் பாதிப்பிற்குள்ளாகி நடக்கமுடியாது இருக்கும் நோயாளிகளை நடக்கவைப்பதற்கு உதவும் இலத்திரனியல் கருவியொன்றை உருவாக்கியுள்ளார். இந்தக்கருவியை முதுகுத்தண்டு வடப் பாதிப்பினால் நடக்க முடியாது இருந்த எலி ஒன்றில் பொருத்திப் பரிசோதனை மேற்கொண்டபோது, அந்த எலியினால் நடக்க முடிந்தது.

முதுகுத்தண்டு பாதிப்படைந்தால் மூளையின் கட்டளைகள் நரம்புகள் மூலம் கடத்துப்படுவது தடைப்படுவதாலேயே பாதிப்பிற்குள்ளான பகுதியின் கீழுள்ள உறுப்புகள் செயலிழக்கின்றன. தற்போது கண்டுபிடிக்கப்பட்ட இலத்திரனியல் கருவியானது பாதிக்கப்பட்ட மற்றும் பாதிக்கப்படாத பகுதிகளிற்கிடையில் ஒரு பாலமாகச் செயற்பட்டு மூளையின் கட்டளைகளை இலத்திரனியல் மின் துடிப்புக்களாக மாற்றி பாதிக்கப்பட்ட பகுதிக்கு கடத்துவதற்கு உதவுகின்றது. அவ்வாறு கடத்தப்படும் கட்டளைகள் இயக்கமற்றுள்ள உறுப்புக்களை அடைந்து அவற்றை இயக்குகின்றன.

இக்கருவியின் முதற்கட்டப் பரிசோதனைகள் குறிப்பிடத்தக்களவு வெற்றியடைந்துள்ள போதிலும், நரம்புமண்டலத்தின் சிக்கலானதும் மிகத் துல்லியமானதுமான செயற்பாடுகளை மின்துடிப்புக்களாக மாற்றி அவற்றின்மூலம் அவயவங்களை இயக்கும் செயற்பாட்டிற்கான பரிசோதனைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# மனிதம் எங்கே.........?

மனிதனின் இயல்பு வாழ்வு சிதறிடும் போது உடலியல் மற்றும் உளவியல் ரீதியான பாதிப்புக்களை எதிர்கொள்கின்றான். இவ்வாறான உளவியல் ரீதியான தாக்கத்திற்கு முகம் கொடுக்கும் மானிடரில் தன்னைத் தானே மாய்த்துக் கொள்வோரின் எண்ணிக்கை தற்போது கணிசமானளவு உலகலாவிய ரீதியில் அதிகரித்து வருகின்றது. ஆரம்ப காலம் தொட்டு இற்றை வரை மனித குல வரலாற்றில் குறிப்பாக இலங்கையில் தற்கொலை புரிவோரின் வீதமானது அதிகரித்து வருவதனை மறுக்கவோ மறைக்கவோ முடியாதென்பது கண்கூடு.

தற்கொலைக்கான முக்கிய காரணிகளாக கடன் தொல்லை. காதல் தோல்வி உடல் மற்றும் உளம் சார்ந்த நோய் நிலைகள் இடப்பெயர்வு, யுத்தத்தின் அழிவுகள், கல்வியில் தோல்வி, போதைப்பொருள் பாவனை வன்முறைக்குள்ளாகுதல், உயிர், உடைமை இழப்புக்கள், பிரிவு, அடிமைவாழ்வு, பாலியல் துஸ்பிரயோகம், நாட்பட்ட குணமாக்கமுடியாத நோய்கள் போன்ற இன்னோரன்ன பல காரணங்களினால் பலர். தற்கொலை மற்றும் தற்கொலை முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். சிலர் தாம் இனி இவ்வுலகில் வாழ்வதில் எவ்வித பயனுமில்லை என்று எண்ணி தம்மை தாமே மடித்துக்கொள்வோம். எனும் நோக்கில் சந்தர்ப்பம் கிட்டும்வரை காத்திருப்போரும் உண்டு. இன்னும் சிலர் திடீரென உணர்ச்சிவசப்பட்டு முடிவெடுத்து அக்கணத்திலே தம்முயிரை போக்கிக் கொள்வோரும் காணப்படுகின்றனர்.

இதே போல் பூமியிலே பிறந்த யாவரும் இன்பம், துன்பம் வெற்றி, தோல்வி போன்ற பல இணைப்புக்களுடன் பிணைக்கப்பட்ட சுழலும் சக்கரம் போன்று சுழன்று கொண்டே இருக்கின்றோம். இதில் எத்தனையோ ஆயிரம் பேர் தம் வாழ்வில் சொல்ல முடியாத பல சோகங்களை சுமந்தவர்களாய், தோல்வி மேல் தோல்வியுடன் தாங்கிக் கொள்ள முடியாத வேதனைகளும் இழப்புக்களும் ஏற்பட்ட போதிலும் தாம் இறந்து போய் விடக்கூடாது என்பதனைக் கருத்தாழமாய் கொண்டு தற்கொலை முயற்சியிலிருந்து தூர விலகி ஆரோக்கியமான சமாளிப்பு ஆற்றல்களைத் தம்முள்ளே உருவாக்கி பயன்படுத்தி வாழ்வில் ஒரு அர்த்தமுள்ள பிடிப்புடன் மனம் தளராது வாழபவர்கள் இன்றும் எம்மத்தியில் இல்லாமலில்லை இவர்கள் நிச்சயமாய் பாராட்டப்பட வேண்டியவர்களே.

இன்று இலங்கையில் ஏற்பட்டுள்ள பாரிய யுத்த அனர்த்தம் கொண்டு வந்துள்ள வாதியுள் தற்கொலை முயற்சிகளும் தற்கொலையைத் தூண்டும் எண்ணங்களுமே வடிவங்களாக உருப்பெற்றுள்ளமையைக் காணக்கூடியதாயுள்ளது. இவற்றில் நலன்புரி நிலைய வாழ்க்கை, கலாசார வறுமை, பொருளாதார நெருக்கடி, வன்முறை, பாலியல் சுரண்டல்கள், துஸ்பிரயோகங்கள், சுதந்திரமற்ற வாழ்வு, ஏதிலிக் கலாசாரம், கல்விகற்கும் சூழல் இன்மை, எதிர்காலம் தொடர்பான அச்சம், சமய கலாசார நடைமுறைகளில் ஏற்பட்டுள்ள மாற்றம், தனிமை, சித்திரவதைக்குள்ளாதல், அடிமை வாழ்க்கை முறை போன்ற பல காரணங்கள் மேலும் அதனையே ஊக்குவிக்கின்ற சம்பவங்களே அதிகமாக காணப்படுகிறது.



உலக சுகாதாரஸ்தாபன அறிக்கையின்படி தற்போது பெண்களைவிட ஆண்களே நான்கு (4) மடங்கு அதிகமாக தற்கொலையில் ஈடுபடுகின்றனர். முன்னர் முதுமை நிலையில் தற்கொலை புரிவோரின் தொகை அதிகரித்துக் காணப்பட்டது ஆனால் இன்று இளவயதினரே அதிகம் ஈடுபடுகின்றனர். இன்றைய தடுப்புக் காவல் வாழ்க்கை, நலன்புரி நிலைய வாழ்வு என்பனவே இதன் தூண்டுகோலாக அமைகின்றன எனலாம்.

பாரிய குணமாக்க முடியாத உடல் நோய்களான குறிப்பாக எயிட்ஸ், புற்றுநோய் போன்ற வற்றினால் அவதியுறுவோர் தம் வேதனையைத் தாங்க முடியாது தற்கொலை செய்து கொள்கின்றனர். தற்கொலை புரிவோரில் அதிகமானவர்கள் ஏதோவொரு மனநலக் கோளாறு காரணமாகவே ஈடுபடுகின்றனர். இவற்றில் மனச்சோர்வு (Depression). மனச்சிதைவு நோய் (Sechzohoenia) காரணமாகவும் தற்கொலை புரிகின்றனர்.

இவற்றைவிட மதுபோதைப் பாவனையினால் ஏற்படும் மனக்குழப்பம், நெருக்கீட்டிற்கு பிற்பட்ட மனவடு நோய், உளப்பிளவை நோய், பதகளிப்பு, போன்றன காரணமாக ஏற்படும் தற்கொலைகள் வயது குறைந்தவரிடத்திலேயே அதிகமாகக் காணப்படுகின்றது. மனச்சோர்வினால் அவதிப்படுவோர் தகுந்த குறிப்பான சிகிச்சை முறைகளைப் பின்பற்றாவிடில் தற்கொலை செய்து கொள்ளக்கூடிய வாய்ப்புக்கள் அதிகம் உண்டு.

இன்றைய உலகிலே ஈடு செய்ய முடியாத இழப்புக்களினாலும் பிரிவுகளினாலும் போரின் மறுவடிவமாய் உயிர் தப்பிய குற்றவுணர்வுடன் எதிர்பார்ப்புக்கள் அத்தனையும் உடைந்து போன நிலையிலே தனிமையில் ஏங்கித் தவித்திடும் உறவுகளிடத்திலும், மனம் வெந்து மழை போல் கண்ணீரைச் சொரிந்து தேடிடும் வாழ்வு இனி மலருமா எனும் வினாவுடன் ஏக்கப் பெருமூச்சினை தவிப்புடன் வெளியேற்றும் மாந்தரிடத்திலும் உருவாகும் தற்கொலை தொடர்பான எண்ண ஓட்டம் செயல்வடிவம் தொடர்பாக சிறிது சிந்திப்போம்.............

தரணியில் மானிடராய் பிறந்திட்ட நாம் நமது பிறப்பின் நோக்கத்தினையும் அர்த்தத்தினையும் விளங்கிக் கொள்வதற்கு முயற்சிப்போம் எம் சாதனைப் பாதையில் வரும் இடர்களைக் களைந்து அறிவாற்றல். தூய சிந்தனை, நல்லாசிகள் நிறை மானிடராய் வாழ எத்தனிப்போம் எதிர்காலம் தொடர்பான நம்பிக்கையுடன் வரும் பாதை புதியதாய் புத்துணர்வுடன் மலரவும் கடந்ததை மறந்து எதிர் நீச்சல் போட்டு இடர் தரும் தடைகளை உடைத்து என்னால் வாழ முடியும் எனும் மன தைரியத்துடன் மலர்ந்திடும் புது அகஉலகில் உரமூட்டப்பட்டு நிஜ உலகில் கால்பதித்து வளமாக வாழ்வோம் என்றும் நலமுடன்.

நிக்சன்

# உடல் எடையை குறைப்பது எப்படி

உடல் பருமனால் ஏற்படும் தொந்தரவுகள் பல. முதலாவதாக, நாம் விரும்பிய வண்ணம் உடையணிய இயலாது. எந்த உடையும் பொருத்தமாகத் தோன்றாது. அடுத்து உடல் பருமனால், உடலில் பற்பல பிரச்னைகள் தோன்றலாம். குறிப்பாக, உயர் இரத்த அழுத்தமும், இதயக்கோளாறுகளும் வரும் வாய்ப்பு அதிகம். பொதுவாக, உடல் பருமனாக உள்ளவர்களுக்கு, மன அழுத்தம் ஏற்படும். கால்களால், உடலின் அதிக பருமனைத் தாங்க முடிவதில்லை என்பதால், ஓடியாடி வேலை செய்வதோ, சட்டென்று, எழுந்து அமர்வதோ சிரமமாகத் தோன்றும். சோம்பல் அதிகரிக்கும், அதன் விளைவாக, எடை மென்மேலும் அதிகரிக்கத் தொடங்கும். உடல் மிகப் பெருத்துவிடுமாயின், தாழ்வு மனப்பான்மை உண்டாகும். இப்படிப் பலப்பல தொல்லைகள் தொடர வாய்ப்புண்டு.

இத்தனை பின்விளைவுகளும் எங்களுக்குத் தெரியும். ஆனால் என்ன செய்வது? உடற்பயிற்சி செய்ய நேரமில்லை, உண்ணாமல் இருக்கவும் முடியவில்லை. என்னதான் செய்வது என்று சொல்பவர்களா நீங்கள்? பெரும்பாலானவர்கள் இந்த வகையைச் சேர்ந்தவர்கள்தான். வருத்தப் படவேண்டாம். நிரம்பவும் கஷ்டப்படாமல் இளைக்க என்னென்ன வழிகள் இருக்கின்றன என்று இங்கு பார்க்கப் போகிறோம். முதல் மற்றும் முக்கியத் தேவை என்ன தெரியுமா? உடலை இளைக்க வைத்தே தீருவது என்று தீர்மானித்துக் கொள்வதும், அதிலிருந்து பின்வாங்காமல் இருப்பதும்தான்.

இனி, இங்கு கொடுக்கப்பட்டுள்ள மற்றஆலோசனைகளைப் பின்பற்றிப் பாருங்கள்.

1. எதிர்மறைக்(negetive) கலோரி உணவு வகைகளை உட்கொள்ளுதல்:

பட்டினி கிடந்தால் இளைக்கலாம் என்ற ஒரு தவறான கருத்து பலரிடம் நிலவுகிறது. ஆனால் அது உண்மையல்ல. நீங்கள் உணவு அருந்தவில்லை என்றால் நமது உடல் சோர்வடையுமே தவிர இளைக்காது. அது மட்டுமின்றி, உணவு உட்கொள்ளும் ஆர்வத்தைக் கட்டுக்குள் வைப்பது மிகக் கடினம்.

இதற்குப் பதிலாக, நாம் எதிர்மறைக் கலோரி உணவினைச் சாப்பிடவேண்டும். அது சரி, நெகடிவ் கலோரி உணவு என்றால் என்ன? அதைப்பற்றி முதலில் தெரிந்துகொள்வோம்.

நாம் உண்ணும் உணவு செரிக்கப்பட்டு, நம் உடலில் ஆற்றலாகச் சேமிக்கப் படுகிறது. வேலை செய்கையில், இந்த ஆற்றல் செலவழிக்கப் படுகிறது. உணவின் மூலம் பெறும் ஆற்றல் அதிகமாகவும், நாம் செய்யும் வேலைகளில் செலவு செய்வது குறைவாகவும் உள்ளபொழுது, அளவுக்கு அதிகமான ஆற்றல் கொழுப்பாக மாறி நம் உடம்பில் தங்கி, நம்மை குண்டாக்கிவிடுகிறது. நாம் செய்யும் ஒவ்வொரு வேலையிலும், ஒவ்வொரு அளவில் நமது சக்தி செலவாகிறது என்று சொன்னேனல்லவா? அதில், உணவைச் செரிக்கச் செய்யும் வேலையும் அடக்கம்.

பொதுவாக, நாம் உட்கொள்ளும் உணவில் அடங்கியுள்ள கலோரிகளை விட, அந்த உணவைச் செரிக்கத் தேவைப்படும் கலோரிகள் குறைவுதான். இதனால், உடலின் ஆற்றல் அளவு ( இந்த ஆற்றல் / சக்தியை, நாம் பணி புரியவோ, நீண்ட தூரம் நடக்கவோ தேவைப்படும் சக்தியுடன் குழப்பிக்கொள்ள வேண்டாம்) அதிகரித்து, உடலைப் பருக்க வைக்கிறது.

ஆனால், நாம் சாப்பிடும் சில உணவுகளில் உள்ள கலோரிகள் குறைவாகவும், செரிமானத்திற்கு நம் உடம்பால் பயன்படுத்தப் படும் சக்தி அதிகமாகவும் இருக்கும். அதாவது, நம் உடலில் சேமிக்கப்பட்டுள்ள அதிகப்படி சக்தியைப் பயன்படுத்த வேண்டிய கட்டாயத்திற்கு, நம் உடலை இவ்வகை உணவுகள் ஆளாக்குகின்றன. இவற்றையே நெகடிவ் கலோரி உணவுகள் என்கிறோம். இந்த வகை உணவுகளை எவ்வளவுக்கெவ்வளவு அதிகம் உட்கொள்கிறோமோ அந்த அளவு, உடலில் சேமிக்கப் பட்டுள்ள அதிகப் படியான கொழுப்பு எரிக்கப் படுகிறது.

பொதுவாக, அநேகமான காய்கறிகள், பழங்கள் நெகடிவ் கலோரி வகையைச் சேர்ந்தவையே. (காய்கறிகள் - காரட், பீன்சு, முட்டைக்கோசு(cabbage), பூக்கோசு (cauliflower), வெள்ளரிக்காய், கீரைவகைகள், தண்ணீர்விட்டான் கிழங்கு(asparagus), பீட்ரூட் முதலியன. பழங்கள் - ஆரஞ்சு, ஆப்பிள், பப்பாளி, ஸ்ட்ராபெர்ரி, அன்னாசி முதலியன). வாரத்தில் ஒரு நாள் வெறும் பழங்கள் காய்கறிகளை மட்டும் சாப்பிடுவது அல்லது இரவில் பழங்கள் மட்டும் சாப்பிடுவது என்று பழக்கமாக்கிக் கொண்டால், கணிசமாக எடை குறைவதைக் காணலாம். அது மட்டுமன்றி. இத்தகைய உணவுகள் உங்கள் செரிமான உறுப்புக்களை சுத்தம் செய்கின்றன. உங்கள் சருமத்தைப் பாதுகாக்கின்றன. மொத்தத்தில் உங்கள் உடல் எடை குறையவும், ஆரோக்கியம் அதிகரிக்கவும் நெகடிவ் கலோரி உணவுகள் உதவுகின்றன.

பட்டினி கிடப்பதற்குப் பதில், நிறையச் சாப்பிடுங்கள், நெகடிவ் கலோரி உணவுகளை. நிறையவே எடைக்குறைப்பு செய்ய வாழ்த்துக்கள்.

எடை குறைப்பு ஆலோசனைகள் தொடரும்.......

- கி.பாலகார்த்திகா

# வீணை விறகாச்சே!

புலிகண்டால் வயிற்றினிலே
புளிகரைக்கும் கோழைகளே
கிலிகொண்டு நிற்கின்ற
கிளியென்னை பிடித்தவரே!

புலிபிடிக்க வக்கற்ற
பெட்டைச் சிங்களரே!
கிலிபிடித்து நிற்கின்ற
கிளியென்னைப் பிடித்தவரே!

சாவுக் கஞ்சி
சமராடுந் துணிவின்றிப்
பூவுக்குக் குறிவைக்கும்
போர்த்தொழில் கற்றவரே!

ஆடை கிழித்தென்றன்
அங்கத்தை மொய்ப்பவரே!
பாடையில் ஏற்றும்முன்
பதம்பார்க்கத் துடிப்பவரே!

அம்மணமாய் எனையாக்கி
ஆனந்தம் கொள்பவரே!
அசிங்கத்தை அரங்கேற்ற
ஆரூடம் பார்ப்பவரே!

வெம்பியழும் எனைக்குதற
வெறிபிடித்து நிற்பவரே!
தேம்பியழும் எனைச்சிதைக்க
தினவெடுத்துச் சூழ்பவரே!

கைகள் இரண்டிருந்தும்
கைவிலங்கு பூட்டியதால்
மெய்மறைக்க முடியாமல்
மேனி கூசுகின்றேன்!

தேம்பி அழுதே
திரள்கின்ற கண்ணீரைத்
தேக்கி அதிலென்
தேகம் மறைக்கின்றேன்!

காற்றையே ஆடையாய்க்
கட்டப் பார்க்கின்றேன்
கூற்றையே அழைத்தென்னை
கூட்டிப்போ என்கின்றேன்!

உங்களைப்போல் கூற்றிற்கும்
உள்ளம் கிடையாதோ?
மங்கை நான்தேடும்
மரணம்வரத் தடையாதோ?
எச்சில் இலையாகி
இழிந்துநான் போகுமுன்
எமனேறும் எருமையேனும்
எனைமுட்டிச் சாய்க்காதோ?
ஈசனோ புத்தனோ
ஏசுவோ அல்லாவோ
இச்சமயம் எனைக்காக்க
இங்குவரக் கூடாதோ?

பாஞ்சாலி துகிலிழக்க
பதறிய கண்ணனே!

ஏஞ்சாமீ? துகிலிழந்த
எனக்குதவ மாட்டாயா?

புத்தனுக்குப் பயந்து
போயொளியப்
பார்க்கிறியா?
குற்றமிழைப் பாரோடு
கூட்டுச்சேரப் போகிறியா?

எச்சில்கள் என்மேல்
இச்சை கொள்கிறதே!
ஈழப் புலித்தலைவா!
இதைத்தடுக்க வாராயா?

தமிழனாய்ப் பொறந்தா
தப்பா? அதனினும்
தமிழச்சி யாய்ப் பொறந்தா
தண்டனை கற்பழிப்பா?

இடுப்பிலே கொம்பு
முளைத்த விலங்குகள்
எதிரே வந்து
எனைமுட்டிச்
சாய்க்கிறதே!

படுக்கைக் கிழுக்கப்
பலகைகள் நீள்கையிலே
உடுக்கை இழந்தஎனக்(கு)
உதவவொரு கையிலையே!
உள்ளூர் தெய்வங்களோ
உலகத் தமிழர்களோ
உள்ளம் பதறலையே!
ஓடிவந்து தடுக்கலையே!

விரியன் பாம்பொன்று
விழுந்து கடிக்கிறதே!
சனியன் ஒன்றென்னை
சாப்பிட்டு முடிக்கிறதே!

கூவம் ஒன்றிந்த
கங்கையில் கலக்கிறதே!
பாவக் கடலொன்று
புண்ணியத்தை விழுங்கிடுதே!

இடியே வந்தென்றன்
மடியில் இறங்கிடுதே!
நொடியில் என்கற்பு
நோய்பட்டு இறக்கிறதே!

கொடிய இருட்டிந்த
விடியலை மேய்கிறதே!
கடிய விஷமென்றன்
காயத்தில் பாய்கிறதே!



உயிரில்லை என்றாலும்
உடல்கிடந்து துடிக்கிறதே!
இதயம் துடிக்கவில்லை
துடிப்பதுபோல் நடிக்கிறதே!

தாயே! கண்ணகியே!
தமிழ்மதுரை எரித்தவளே!
திருகி முலையெறிந்து
தீயரைச் சரித்தவளே!

களையிழந்து கற்பிழந்து
கதறுமெனக்(கு) உதவாயோ?
முலையெறிந்து ஊரெரிக்கும்
மருமத்தை உரைக்காயோ?

சொல்லால் சுடவும்என்
சொல்லுக்கு வலிவில்லை
தள்ளி விடவும்என்
தேகத்தில் தெம்பில்லை

கற்பெனும் திண்மையைக்
கறைபடியச் செய்பவரே!
அற்புதம் என்றனை
அற்பமாய்க் கொய்பவரே!

தட்டிக் கேட்களம்
தலைவன்வராக் காரணத்தால்
கட்டிப் போட்டென்னை
கற்பழிக்கும் காமுகரே!

பூமகள் என்றனைப்
புலிமகளா? என்பவரே!
கலைமகள் என்றன்
களையழித்துக் களிப்பவரே!

போட்டாப் போட்டியிட்டுப்
பூந்தேனைச் சுவைப்பவரே!
தோட்டா ஒன்றால்என்
உயிர்சுவைக்கக் கூடாதா?

போச்சு! எல்லாம்போச்சு!
போகலையே உயிர்மட்டும்!
ஆச்சு! எல்லாம்ஆச்சு!
அடங்கலையே இவர்கொட்டம்!

வீணையை விறகாக்கி
எரிக்கின்ற வீணர்களா!
ஓவியத்தைச் சிதைச்சுத்தான்
ஊரையாளப் போறிகளா?

அழுக்கை என்மீது
அப்பிவிட்ட இழுதைகளா!
சுமையை என்மடியில்
இறக்கிவைத்த கழுதைகளா!

இன்னும் பசியெடுத்தா
என்னோட பிணமிருக்கு!
கண்ணகிபோல் சினந்தெரிக்க
கற்பிங்கே எனக்கிருக்கு?

அகரம் அமுதன்

# உறவில்லா உரையாடல்கள் .....

புரட்சிகரமான முன்னேற்றங்களை கண்டு வருகின்ற நவீன காலமிது. இந்த முன்னேற்றங்களை பார்த்து எம்மால் புளகாங்கிதம் அடையாமலிருக்க முடியாது.

ஆனாலும், கண்ணோடு கண்ணோக்கி, ஆளோடு ஆள் உரையாடுவதென்பது எவ்வளவு மகிழ்ச்சியான அனுபவம்! அதில் உருவாகும் உறவிற்கு இணையேது?

அன்று நீண்ட காலத்திற்குப் பின் சந்தித்த என் நண்பனும் நானும் அந்தப் பூங்காவில் உலாவந்து கொண்டிருந்தோம். கதைக்க எவ்வளவோ விடயங்கள் இருந்தன. ஆனால் செல்போனைக் காதில் வைத்து உரையாடிக் கொண்டிருந்த நண்பனது செய்கை என்னைக் குழப்பியது! நண்பன் உரையாடலை செல் போனுக்குள்ளால் நகர்த்திக் கொண்டு போனதினால் நான் பக்கத்திலிருந்தும் இல்லாதவனாய்ப் போனேன்!

அந்தி மாலைவேளையில் அழகான பூங்காவில் மக்கள் நிறைந்திருந்தனர். பலர் காதில் செல்போனை வைத்து பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தனர். மற்றவர்களைப் பார்த்து 'ஹாய்' சொல்லக்கூட அவர்களுக்கு நேரமிருக்கவில்லை! பூங்காவில் பிள்ளைகள் குதூகலமாக விளையாடித்திரிந்தனர். அங்கு பல வர்ணப்பூக்கள் பூத்துக்குலுங்கியிருந்தன. இப்படி எத்தனை கோடி இன்பங்கள் கொட்டிக்கிடந்தும். எதையுமே மக்கள் ரசிப்பதாக இல்லை!

ஏலெக்ரோனிக்குரல் மனித நேரடி உரையாடலை விட அற்பமானதாகிவிட்டது! பக்கத்தில் இல்லாவதவரோடு பேசுவதற்கு தொலைபேசி வந்தது. ஆனால் இப்போ பக்கத்திலிருப்பவரே இல்லாமல் போகின்ற நிலை!

அண்மையில் நான்கு நண்பர்களோடு காரில் பயணம் செய்து கொண்டிருந்தேன். உரையாடிக் கொண்டிருந்த எங்களை நண்பர்களில் ஒருவன் தன் வாயில் விரலை வைத்து மௌனமாயிருக்கும்படி சைகை காட்டினார்! ஏனெனில் மறுமுனையிலிருந்து செல்போனில் கதைப்பவருடைய கதை அவருக்கு கேட்கவில்லையாம்! நாங்கள் மூவரும் மௌனமாயிருந்தோம். தொடர்பாடலை இலகு படுத்தக்கண்டு பிடிக்கப் பட்ட கருவியினால் உரையாட முடியாமல் மூவரும் அமர்ந்திருந்தோம்.

நவீன தொடர்புகள் அதிகமதிகமாக எம்மை இணைக்க அதிகமதிகமாக தொடர்பறுந்த உணர்வு ஏற்படுவது ஏன்?

ஒவ்வொரு தொடர்பும் அந்நியோன்யத்தை பின்னடையச் செய்கின்றது. மின் அஞ்சல், இணையம் (Email,Internet) போன்ற வசதிகளால் ஒருவரை ஒருவர் பார்க்காமலும் பேசாமலும் செய்திகளைப் பரிமாறலாம். குரல் அஞ்சல் (Voice Email) முறையில் முழு உரையாலையும் யாரையும் போய்ச் சேராமல் குரல் அஞ்சலில் நிகழ்த்தலாம். அதில் உங்கள் பதிலை விட்டுச் செல்லலாம். உதாரணத்திற்கு என் நண்பனுக்கு ஏதாவது ஒரு விடயம்பற்றிய விளக்கம் தேவைப்பாட்டால் அவனுக்கு குரல்அஞ்சலில் உங்கள் பதிலை விட்டுச் செல்லலாம். மனிதர்களுக்கிடையிலான தொடர்பாடல் தானியங்கும்-இயந்திரயமாக்கப்பட்டு, அந்நியப்படுத்தப் பட்டுள்ளோம்.



நிலையத்தில் பெற்றோல் நிரப்பப் போகின்றோமா? அங்கு நிற்பவரைப் பார்த்து புன்னகைத்து காலை வந்தனம் கூற வேண்டிய அவசியமில்லை!

வங்கியில் வைப்புச் செய்ய வேண்டுமா? அல்லது பணத்தைப் பெறவேண்டுமா? யாருடனும் 'கதைத்து' நோத்தைப் போக்கத் தேவையில்லை. ஒரு வேளை வங்கியில் இதற்குப் பொறுப் பாயிருப்பவர் உங்களது அயலில் வாழும் நண்பராயிருக்கலாம். கதைப்பானேன்? 'ATM மெஷினிற்குள்' 'கார்ட்டை' செலுத்திக் கருமங்களை முடித்து விடலாம்! சுப்பர் மார்க்கூட்டில்' பொருட்களை வாங்கப் போகின்றீர்களா? 'ஸ்கானர்' கருவி விலைப் பட்டியிலைத்தந்து வேலைகளை இலகு படுத்திவிடும்.

மனிதத் தொடர்புகளில் ஏன் சிரத்தை காட்ட வேண்டும்?!

புரட்சிகரமான தொழில் நுட்பயுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். உறவுகள் தொடர்புகள் என்று கூறி நேரத்தை ' வீணடிப்பது' 'பழமை' வாதமாகத் தென்படலாம். செல்போன் மின்னஞ்சல், இணையம், வங்கிக் கார்ட் எல்லாம் இன்று இன்றியமையாதவைகளாகிவிட்டன! அவற்றின் பயன்பாடுகள் மறுப்பதற்கில்லை. எந்த நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்டதோ அந்த வகையில் பிரயோசனமானவையே. ஆனால் அந்த நோக்கங்களையும் விஞ்சிச் செயல் படுவதால் வரும் விளைவுகள் தான் சிந்திக்க வைக்கின்றன!

உரையாடி ஆற்ற வேண்டிய வேலைக்கு மின்னஞ்சலின் பின்னால் அமர்ந்திருப்பது எத்தகைய சலிப்பை தருகின்றது! மனித இணைப்புக்களை தொடர்புகளை ஏற்படுத்த உருவாக்கப்பட்ட இத்தொழில்துறை எம்மை தனிமைப்படுத்துகின்றது! சமூக ஊடாட்டத்தில் எதிரிடையான உணர்வுகளை வளர்க்கின்றது.!


உயிருள்ள உறவுத்தொடர்புகளை கட்டியெழுப்ப சுயகட்டுப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்வது ஆரோக்கியமானதாகும். அண்டையிலிருப்பவரோடு செல் போனில் தொடர்பெதற்கு? வீட்டிற்கு வரும் உறவுகள், நண்பர்களோடு உரையாடுதலைக் குழப்பித் தொல்லை தரும் தொலைபேசி அழைப்புக்களை தணித்துவிடலாம் தானே?

வீடுகள் தோறும் தொலைக்காட்சிப் பெட்டிகள் மலிந்தியங்கும் காலமிது. குடும்ப அங்கத்தவர்களோடு தொடர்பாடும் நேரத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றது. இல்லங்கள் தோறும், நாடகங்கள், சினிமாக்காட்சிகளுக்கு முன்னால் 'ஒட்டிக்' கொண்டிருப்பதை தவிர்த்து செவிமடுத்து உரையாடினால் உறவுகள் சிறக்கும். மனிதர்களை பார்த்து அவர்கள் குரலைக்கேட்டு அந்நியோன்னியத்தை நெருகத்தை வளர்ப்போமா?

*நிலவன் - சிட்னி.*



FLY WINGS
Travel Agents
Lic No : 31883
Competitive Airfares
Accommodation & Tours
Travel Insurance
Interstate Coach Bookings
For All Your Travel Needs Contact Your Friendly Travel Agent
SHOP 4 DANDENONG ARCADE, 236 LONSDALE STREET, DANDENONG 3175
PH: (03) 9791-7522 FAX: (03) 9794-7844 EMAIL: fly1@net2000.com.au


LOANS! LOANS! LOANS!
வீடு வாங்கும் எண்ணமா?
வியாபாரம் ஆரம்பிக்க,
விரிவாக்க விருப்பமா?
முதலீடு செய்ய எண்ணமா?
சகல விதமான கடனுதவிகளும்
சிறப்பாக செய்து தரப்படும்.
Residential / Investment
Commercial Loan and
Equipment Finance
For obligation free consultation & Assessment
A friendly consultation backed up by more than
20 years of banking experience
Contact
Vivek N.Vivekananthan
0407 561 269










## அன்பு வாசகர்களே!

ஈழமுரசுக்கான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

ஈழமுரசில் உங்கள் படைப்புக்கள் வெளிவரவேண்டுமா? பொருத்தமான படைப்புக்களை எமக்கு அனுப்புங்கள்.

வேறெங்கும் வெளிவராத படைப்புக்களாயும் ஈழமுரசில் வெளியிடுவதற்குப் பொருத்தமாகவும் இருந்தால் போதுமானது. துறைசார்ந்த கட்டுரைகள், இலக்கியப் படைப்புக்கள், விமர்சனங்கள், கவிதைகள், சிறுவர் படைப்புக்கள் என்பன எதிர்பார்க்கப்படுகின்றன.

எழுதிய படைப்புக்களை emurasu@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும்.

நன்றி.

